

கல்கி

KALKI 22-11-81 ரூ. 1.20



பாபா
சிறப்பிதழ்





இதயத்தில் இருப்பவர் எதிரேயும் இருக்கிறார்!

விஞ்ஞான ரீதியாக ஒவ்வொரு பூவுலக காரியங்களுக்கும் விளக்கம் தேட முற்படும் தற்காலச் சூழ்நிலையில் தனது வெறும் கையசைவினால் பல பொருள்களை ஆயிரக் கணக்கான மக்கள் ஸன்னிதியில் ஸ்ருஷ்டித்துப் பலவித அற்புதங்களை நிகழ்த்தி வருபவர் ஸ்ரீ பாபா அவர்கள்.

இத்தகைய அற்புதங்களால் தமது பக்தர்களுக்குப் பரவசமூட்டி, அவர்கள் மூலமாய் பக்தி நெறிகளையும், நன்னெறிகளையும், சேவா மனப்பான்மையையும் உலகெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பிறந்த தினம் நவம்பர் மாதம் 23ந் தேதி.

1926ம் ஆண்டு அனந்தப்பூருக்கு அருகில் உள்ள புட்டபர்த்தி கிராமத்தில் திரு வெங்கப்ப ராஜுவுக்கும் ஈஸ்வரம்மாவுக்கும் சத்ய நாராயணனாகப் பிறந்தவர் இன்று ஓர் அவதார புருஷனாக அவரது பக்தர்களால் போற்றப்படுகிறார்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வாசஸ்தலமாகிய புட்டபர்த்திக்குச் சென்று ஒரு நாள், தங்கியிருந்து அனுபவங்களை எழுதலாம் என்று புட்டபர்த்திக்குப் பயணம் தொடங்கினேன்.

சென்னையிலிருந்து புட்டபர்த்திக்கு நேராக பஸ் வசதி உள்ளது. ஆனாலும் பெங்களூர் சென்று அங்கிருந்து 120 மைல் தூரத்தில் உள்ள புட்டபர்த்திக்குப் பஸ்ஸில் செல்வது சௌகர்யமான மார்க்கமாகும்.

சிறிய கிராமம். சித்ராவதி நதிக் கரையில் அமைந்து உள்ளது. 'மகா சாந்தியின் இருப்பிடம்' எனும் அர்த்தம் தொனிக்க அமைதியுடன் காணப்படுகிறது 'பிரசாந்தி நிலையம்'.

புகைப்படக்காரர் சகிதம் நான் போனபோது இரவு ஒன்பதரை மணி. நுழைவாயில் மூடியாகி விட்டது. காவல்காரன் திறந்து உள்ளே விட்டான். எவ்வித ஆள் அரவமும் இன்றி மிகப் பெரிய நிசப்தம். 'இரவு ஒன்பது மணியானதும் அவரவர் தங்கள் தங்கள் இருப்பிடம் திரும்பிவிட வேண்டும்... எவ்வித ஆரவாரமும் கூடாது. அனாவசியமாக பிரசாந்தி நிலையத்துக்குள்



✖ தியான மண்டபமும், பாபாவின் இருப்பிடமும்

✖ பிரசாந்தி நிலையத்தில் ஸ்தூபி. ஸ்தூபியின் பின்னால் மாநாட்டு மண்டபம்.

✖ பக்தர்கள் நடுவில் பாபா.

அர்த்தங்கள் ஆயிரம்

● நீங்கள் மகா பொறுமைசாலியா? எதையும் தாங்கும் இதயம் படைத்தவரா? இடுக்கண் வந்தால் நகைக்கும் ஜாதியா? எத்தகைய அபத்தத்தையும் ரசிக்கும் திடசித்தம் உண்டா? ஒரே இடத்தில் அமர்ந்து 3 மணி நேர அவஸ்தையைச் சகிக்கக் கூடியவரா?

அப்படியானால் வாரும் நண்பரே! உங்களுக்காகவே ஒரு சோகக் காவியத்தை மிகக் கஷ்டப்பட்டு, ஏகப்பட்ட ஆரவாரத்துடன் கருக்கமாய், 17 ரீலில் திரைக் கதையும் எழுதி தயாரித்து இயக்கித் தருகிறார் எஸ். ஏ. ராஜ்கண்ணு!

நீதி: யான் பெற்ற துன்பம்
பெறவேண்டாம் இவ்வையகம்

—சிந்து ஜீவா



சுற்றித்திரியக் கூடாது' என்று கட்டுப்பாடு உள்ளதை அறிந்தோம்.

ஒரு தங்குமிட வசதி பெற்றுக் கொண்டு காலை நாலரை மணிக்கு பிரசாந்தி நிலையம் துயிலெழுந்துவிடும் என்று அறிந்து கொண்டு அதற்குத் தயாராக இருக்க வேண்டி ஓய்வுக்காக உடனே உறங்கிப் போனோம்.?

மறுநாள் விடியற்காலை. நல்ல பனி படர்ந்து காணப்படும் காலை நாலரை மணி. மணியோசை கேட்கிறது. இது முதல் மணி. தொடர்ந்து பத்து நிமிட இடைவெளியில் மேலும் இரண்டு மணி அடிக்கப்பட்டதும் 'ஓங்காரம்' தொடங்கிவிடுமாம்....

அவசரம் அவசரமாகக் குளித்துவிட்டு, பிரசாந்தி நிலையத்தில் இறை வழிபாட்டு மண்டபத்தை நோக்கிப் போகிறோம்... இதற்குள் சாரி சாரியாக ஆண்களும் பெண்களும் குளிரைப்பொருட்படுத்தாது மண்டபம்நோக்கிப் போவதைக் காண முடிந்தது. பாதிப் பேர் அயல் நாட்டவர்கள்.

தியான மண்டபத்தில் ஒரு பக்கம் ஷிர்டி ஸ்ரீ சாயி பாபாவின் படமும் மறு பக்கம் அவரது அவதாரமென வழிபடப்படும் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் படமும் உள்ளன. மற்றபடி விநாயகர் விக்கிரகம், தீபோப தேசக் காட்சி, தசாவதார உருவங்கள், இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ, யூத, பௌத்த மதச் சின்னங்கள் காணப்படுகின்றன.

முதலில் 'ஓம்' 'ஓம்' என ஜபித்த ஓங்காரம் முடிந்ததும் பக்தகோடிகள் வெளியே வந்து, ஆண்களும் பெண்களும் தனித் தனி கோஷ்டிகளாகத் தியான மண்டபத்தைச் சுற்றி, ஸ்ரீ ராமர், முருகர், ஈஸ்வரன், ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீ சத்ய சாயி ஆகியவர்களையும் துதித்துப் பாடல்களைப் பாடிய வண்ணம் சுற்றி வருகிறார்கள்.

கதிரவன் ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்க பிரசாந்தி நிலையத்தில் ஒளி பரவுகிறது.

ஒன்பது மணி சுமாருக்கு ஸ்ரீ சத்ய சாயி பாபா பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்துவிட்டு, அவராகத் தேர்ந்தெடுக்கும் ஒரு சில பேருக்கு 'பேட்டி' கொடுப்பாராம். அவரிடம் பேட்டி பெற்றுத் தங்களது மனக்குறையைச் சொல்லி, அவரது ஆசியைப் பெற வரும் பக்தர்கள் சில சமயம் அவராக அழைக்கும் நேரத்துக்காக மாதக் கணக்கில்கூடத் தங்கும்படி ஆகிவிடுமாம்.

பாபாவின் அருளால் பலரது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அனுகூலங்களை அவரது பக்தர்கள் கதை கதையாகச் சொல்லுகின்றனர்.

ஒன்பது மணிக்கு பாபாவின் தரிசனம் கிடைக்குமாதலால் அதற்குள் பிரசாந்தி நிலையத்தில் சுற்றி வரலாம் என்று புகைப்படக்காரருடன் கிளம்புகிறேன்.

தங்குமிடத்தைத் தவிர பக்தர்களுக்காகப் பலவித வசதிகளையும் தன்னுள்ளே பிரசாந்தி நிலையம் அடக்கிக் கொண்டுள்ளது.

சாப்பாடு, டிபன் சப்ளை செய்யும் காண்டீன், பால் விற்பனை நிலையம், பேக்கரி, வஸ்திராலயம், மளிகைக் கடை, பாபாவின் சொற்பொழிவுகளையும், அவரைப் பற்றிய நூல்களையும் விற்பனை செய்யும் நிலையம் இப்படிப் பலவித வசதிகளையும் பக்தர்கள் பாபா அனுமதியுடன் நடத்தி வருகிறார்கள்.

பாபாவின் தர்சனத்துக்காகப் பக்தர்கள் தயாராகிறார்கள். ஆண்களும் பெண்களும் கலந்து புழங்கக் கூடாது என்று பிரசாந்தி நிலைய விதிகளுக்கு ஏற்ப ஆண்களும் பெண்களும் தனித் தனியாக வரிசைக் கிரமமாக உட்கார்ந்ததும், சீட்டுக் குலுக்கல்படி முறையாக ஒவ்வொரு வரிசையும் பாபாவைச் சமீபத்தில் தரிசிக்கும் இடத்துக்கு அனுமதிக்கப்படுகிறது.

சரியாக ஒன்பது மணியான சமயம். பாபாவின் தரிசனம் பக்தர்களை ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்துகிறது. சுமார் ஐந்தரை அடிக்கும் குறைவான உருவம். நல்ல உடற்கட்டும், அமைதியும், சாந்தமும் திகழும் புன்னகைத்த முகம். கழுத்திலிருந்து பாதம் வரையிலான நீண்ட காவிச் சிவப்பு உடை. எங்கோ பார்த்தபடி பக்தர்களுக்காக அருள்

அனுபவிப்பதை விட தியாகம் செய்வதுதான் இனிமையானது. தியாகம்தான் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். தியாகத்தின் மூலம்தான் ஒருவன் அமைதியைப் பெற முடியும்.

தரும் கையசைவுகள்... உட்கார்ந்திருக்கும் பக்தர்களின் சமீபமாக பாபா நடந்து வருகிறார்.... க்ஷண நேரத்தில் பூமியை நோக்கி வலது கையால் வட்டம் போட்டு விபூதி வரவழைத்துச் சில பக்தர்களுக்கு அளிக்கிறார். சில பக்தர்களைப் பேட்டிக்கு அழைக்கிறார். அங்கேயே ஓரிரு பக்தர்களின் குரலுக்குச் செவி சாய்த்துக் கேட்கிறார்.

''பாபாவுக்கென்று காரியதரிசிகள், உதவியாளர்கள் என்று அவர் நியமித்துக் கொள்வதில்லை. பக்தர்களே தாங்களாக முன்வந்து பிரசாந்தி நிலயத்தை பாபாவின் பேரருளுடன் பராமரித்து வருகிறார்கள். எந்த பக்தரிடமிருந்தும் ஒரு பைசா கூட பாபா வாங்குவதில்லை. பணம் அளிப்பவர்களையும் வேண்டாம் என்று கூறித் திருப்பி அளித்து விடுகிறார்.

''பாபா தூங்குவதே கிடையாது... அன்றாடம் தனக்கு வரும் கடிதங்களை அவரே படித்துத் தேவையானவற்றுக்குத் தம் கைப்படவே பதில் எழுதுகிறார்... பக்தர்களின் திருப்திக்காகச் சாப்பிடுவது போல் உட்காருகிறாரே தவிர அவரது அன்றாட ஆகாரம் ஒரு சப்பாத்தி அளவுக்குக் கூட கிடையாது'' என்றெல்லாம் அறிகிறோம்...

பக்தர்களின் இன்னல்களைத் தீர்க்க இப்பூத உடலை விட்டு விட்டு, சஞ்சாரம் செய்து குறை தீர்த்து மறுபடியும் இவ்வுடலில் புகுந்துகொள்ளும் லீலைகளையும் நிகழ்த்துகிறார்... கலியுகத்தின் கடவுள் அவர்'' என்று குறிப்பிட்டார் ஓர் இளம் வயது பக்தர்.

பகல் பதினொரு மணிக்கு பூஜை ஆரம்பித்தது. பக்தர்கள் துதித்துப் பல தெய்வங்களின் நாம கீர்த்தனைகள் பாட முடிவில் பாபா பூஜைக்கு வருகிறார். அவர் வந்ததும் அவருக்கும் மற்றைய இறை உருவங்கட்கும் கற்பூர ஹாரத்தி காட்டப்பட்டதும் பூஜை முடிவடைகிறது.

மாலை ஐந்து மணிக்கு மறுபடியும் பாபா தரிசனம் தருகிறார். ஆறரை மணிக்கு மறுபடி பூஜை. பாபாவின் பங்கேற்பு.

மற்றபடி நாளெல்லாம் பிரசாந்தி நிலயம் அமைதியிலேயே ஆழ்ந்து கிடக்கிறது.

மேலை நாட்டுக்காரர்களைத் தவிர பொருளாதார வசதியில் மேம்பட்ட பக்தர்களின் வருகைதான் கண்களில் அதிகம் தென்படுகிறது. 'பாபாவின் அருளைப் பெற எவ்வித பாகுபாடும் கிடையாது' என்று பக்தர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

''இறை வழிபாடு மக்களிடையே தழைத்தோங்க வேண்டும்... எந்தத் தெய்வத்தை வணங்க வேண்டும் என்பது முக்கியமில்லை... இறை வழிபாடு தழைத்தோங்கினால்தான் மக்கள் மனத்தில் நற்பண்புகள் பெருகும். இறை வழிபாடும் நன்னெறியும்தான் முக்கியம்... இவற்றுடன் சமூக சேவையையும் இணைத்துச் சமுதாயத்துக்குத் தொண்டு புரிகிறார் பாபா... அவரது இத்தகைய அருளைப் பெற நாம் பாக்கியம் செய்தவர்கள்'' என்றார் ஒரு பக்தர்.

நான் அங்கு தங்கியிருந்த அந்த ஒரு நாளில் அது சரியென்றே பட்டது.

நாயகன்

புகைப்படம் : பார்த்தசாரதி

வெறுங் கையுடன் வந்து கை நிறைய எனது கருணையை, அன்பைப் பெற்றுக்கொண்டு செல்லுங்கள்.

கார்(ர்)க்கும் கருணை!

ரா. கணபதி



சென்ற ஆண்டு மார்ச் தொடக்கத்தில் என் ஸாயி சகோதரர்களில் ஒருவரான ஸ்ரீ ரமணியின் குடும்பத்தோடு புட்டபர்த்தி செல்லும்போது நடந்த சம்பவம். அவரது காரில் சென்றோம். ஓட்டுனர் அவரே.

புது அம்பாஸிடர் வாங்கிய நாளாக அவருக்கு அதை ஸ்வாமியின் தலைநகருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆசை. பல மாசங்களுக்குப் பின் இப்போதுதான் இந்த ஆசைக்கு ஸ்வாமி 'ஓகே' போட்டிருக்கிறார்.

பாலஸமுத்திரம் தாண்டிய பின் குசாவதி 'காஸ்-வே'யை அடுத்த டைவர்ஷனில் புட்டபர்த்தி சென்று கொண்டிருக்கிறோம். இன்னும் சுமார் பத்து மைல்களே உள்ளன பிரசாந்தி நிலயத்துக்கு. 'இப்போது மணி ஐந்தா? அரை மணிக்குள் சென்று சேர்ந்து விடலாம். பகவான் மந்திருக்கு வெளியே பக்தரிடை உலவுகையில் தரிசனம் பெற்று விடலாம்.'

இந்த உத்சாகத்துக்குச் சற்று அணை போடுவது போல் ஏனோ அந்த இடத்தில், குன்றுகளுக்கு இடையில் பாதை குண்டும் குழியுமாகச் சென்றது. அது மட்டுமின்றி பாதையில் சரியாகக் கார் போகும் மத்திய பாகத்திலேயே அரைச் சாண், ஒரு சாண் உயரப் பாறுங்கற்கள் கொஜத்துக்குக் கஜம் காணப்பட்டன. எவரோ போக்கிரிகள் வேண்டுமென்றே செய்த காரியமாகத் தோன்றிற்று.

ஆர்வப் பயணத்தின் விரைவு குறைய வேண்டியதாயிற்று. ரமணி பார்த்துப் பார்த்துச் சாவதானமாக ஓட்டினார். அவ்வப்போது வண்டியை நிறுத்திக் குறுக்கிட்ட கற்களை அப்புறப்படுத்தவும் வேண்டியிருந்தது.

இவ்வளவு கவனமாகச் சென்றும் எப்படியோ ஒரு கல் கார் சக்கரமொன்றில் பொத்துக் கொண்டு விட்டது. வண்டி நின்றுவிட்டது.

வண்டி நின்ற காரணம் முதலில் எங்களுக்குப் புரியவில்லை. வழியே இரண்டு மாட்டை ஓட்டிச் சென்ற ஒரு வண்டிக்காரன்தான், தானாக வந்து காருக்கடியில் சோதனை செய்து பார்த்து, சக்கரத்தில் கல் மாட்டிக் கொண்டிருப்பதைச் சொன்னார். சொன்னது மட்டுமின்றி அதைப் பிடுங்கி எடுப்பதற்கும் உதவி செய்தார்.

எப்படியோ டயரில் பங்க்சர் விழாமல் இருந்தது. (ஸாயி பக்தர்களுக்கு 'எப்படியோ' என்று ஒன்று கிடையாது. எல்லாமே அவர்களது ஸ்வாமியின் திருவிளையாடல்களாகத் தான் தெரியும்.)

ஆயினும் கல்லை எடுத்த பின் கார் ஓட மறுத்தது.

தள்ளிப் பார்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீ ரமணியும் 'வீலி'ல் இல்லாமல், இறங்கித் தள்ளுபவர்களுடன் சேர்ந்து கொண்டார். இன்ஜின் ஸ்டார்ட் ஆகக் கூடிய வேகம் பெறும்போது ஏறிக் கொண்டு விடலாம் என்பது அவர் எண்ணம். இதுவும் ஐயன் அருள்தானென்பது தெரியப் போகிறது. பாருங்கள்.

எப்பொழுதும் மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்கும், நோக்கத்துக்கும், மதிப்பளியுங்கள். சிறிய அபிப்பிராய பேதங்களுக்காகச் சச்சரவை ஆரம்பிக்காதீர்கள்.

'புதுக் காரை உத்தேசித்துத்தான் முக்கியமாக இந்தப் பயணத்தை மேற்கொண்டோம். இப்படி மக்கார் செய்கிறதே' என்று கோபம் வந்தது.

உடனே, அதற்கும் ரோஷம் வந்துவிட்டதா என்ன?

கிடுகிடுவென்று நகரலாயிற்று. என்ஜின் ஸ்டார்ட் ஆகாமலே 'ஸ்பீட்' எடுத்திருக்கிறது! ஏன், எப்படி? இங்கே பாதை சரிவாக இறங்குகிறதல்லவா, அதனால்தான்.

அத்தனை பேரும், நாங்கள் ''கைவிட்ட'' அருமைக் கார் தன் போக்கில் மலைப் பாதையில் ஓடிக் கொண்டிருந்ததைத் திக் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

பாதையையும் விட்டுவிட்டுப்பக்கவாட்டில் ஒரு பள்ளத்தில் அது பாய்ந்தது. 'தடால் தடால்' என்ற ஓசையுடன் பாறை பாறையாக மோதிக் கொண்டும், குதித்துக் கொண்டும், சப்பாத்திக் கள்ளிகளை த்வம்ஸம் செய்து கொண்டும் இப்படிச் சுமார் கால் கிலோ மீட்டர் பிரளய தாண்டவம் செய்தது கார்.

'அப்பனே ஸாயி ராமா! புதுக் கார் உன் ஆஸ்தானத்துக்கு வரும்போதே மோக்ஷ லோகம் சேர்கிறதே என்று தனிப் பாகத்தான் இருந்தாலும், இந்த மட்டும் எங்களில் எவரும் அதற்குள் இருந்துவிடாமல் இறங்க வைத்தாயே! நன்றி சொல்லித் தீருமா?''

அப்படியே போய் எங்கேனும் அடிபட்டு நொறுங்கியிருக்க வேண்டிய கார், கால் கிலோ மீட்டருக்குப் பிறகு ஒரு குட்டிப் பாறைச் சரிவில் அப்படியே ஸ்தம்பிதமாகி விட்டது.

அந்தக் கோணத்தில் அது எப்படிக் குட்டிக் கரணம் போடாமல் நின்றதோ?

மஹா ஆபத்தான அந்த இடத்தில் காருக்குள் ஏறி ஸ்டார்ட் செய்து பார்ப்பதாக ரமணி வீரராகப் புறப்பட, அவருக்கு உதவுவதற்காக பார்த்தஸாரதியும் சூரராகப் போனார். அப்போது எனக்கும், ரமணியின் தாயாருக்கும், ஸ்ரீமதி ரமணிக்கும் வயிற்றில் கரைத்த புளியில் ஸ்வாமி எங்களுடைய பூர்வ கர்மாவில் எத்தனையோ டன்னைக் கரைத்திருப்பார்!

நல்லவேளை! இவர்களது வீர சூர ஸாஹஸத்துக்கு மசியாமல் அம்பாஸிடர் அங்கேயே ஸமாதி நிஷ்டை கூடிவிட்டதால் திரும்பி வந்தார்கள்.

மணி ஆறேகால்.

மந்திருக்கு வெளியே தர்சனம் போச்சு! உள்ளே பஜனையில் தர்சனம் கிடைப்பதும் சந்தேகம்தான்.

அது ஸரி. இனி இந்த வண்டியை நம்பிப் பிரயோஜனமில்லை. புட்டபர்த்திக்கு இங்கிருந்து பஸ் உண்டா?

''நாளைக்கு உண்டு'' என்று (அ)தைரியம் கொடுத்தார் வழிப்போக்கர். இது டைவர்ஷனதலால் அபூர்வமாக ஓரிரு பஸ்தான் இவ்வழி செல்லுமாம்.

அட ராமா! இரா முழுவதும் உணவில்லாமல், உறையுள் இல்லாமல் ஸாயிராமா! பொட்டல் காட்டிலா கிடக்க வேண்டும்?

எதிர்ப்பக்கம் பால ஸமுத்ரம், ஹிந்துபூர் போன்ற ஊர்களுக்காவது பஸ் போகுமானால் அங்கே போய் இரவு தங்கிக் கொள்ளலாமே என நினைத்தோம்.

போதாத காலம் — பத்து நிமிஷம் முந்தித்தான் எதிர்ப்புறம் போகும் கடைசி பஸ்ஸூம் போய் விட்டதாம்!

''பிரயத்னம் பண்ணக் கூடிய நிலையிலேயே ஸர்வப் பிரயத்தனத்தையும் விட்டு அவன் வசம் என்றிருப்பதுதான் சரணாகதி; அப்போதுதான் அவன் பாய்ந்து வந்து ரக்ஷிப்பான்'' என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அந்தப் பக்குவம் இல்லாதாரையும் சுயப் பிரயத்தனத்துக்கு இடமே இல்லாத நிலையில் கொண்டு வந்து, தனது ரக்ஷணையை அங்கு பாய்ச்சுபவன் சத்ய ஸாயிநாதன்.

கடைசி பஸ் போய்விட்டதாக வண்டிக்காரர் சொல்லி ஓரிரு நிமிஷங்களிலேயே பஸ்ஸின் குழலொலி கேட்டது. புட்டபர்த்திப் பக்கத்திலிருந்து எதிர்ப்புறம் போகும் ஒரு பஸ் வந்தது. பெயர்ப் பலகை தெலுங்கில் இருந்ததால் எந்த ஊர் போகும் பஸ் என்று தெரியவில்லை. பிரயாணிகளும் கிராமவாசிகளான தெலுங்கர்கள்தான். எனவே அவர்களோடும் பேசிப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால்.... ஆஹாஹா! பாபா அனவரதமும் செய்யும்இதயமொழியாம்பிரேமபாஷை அன்று அங்கே புரிந்த ஆனந்த நிருத்யம் உண்டே!

படத்திலிருந்து குதித்த கிருஷ்ணன்

1967ம் வருடம் ஏப்ரல் மாதம் கார்வார் என்ற ஊரில் குடும்பத்துடன் இருந்தேன். பாபாவின் படங்களிலிருந்து விபூதி, குங்குமம் விழுவதைப்பற்றி கேட்டிருக்கிறோம்.

நம்பவும் முடியவில்லை! நம்பாமல் இருக்கவும் முடியவில்லை! தர்ம சங்கடம்! ''நாம் இவ்வளவு பஜனை செய்கிறோமே, ஏன் நம் வீட்டுப் படத்திலிருந்து, ஒரு கிருஷ்ண விக்ரஹம் விழக் கூடாது?'' என்று என் மனைவி கேட்டே விட்டாள்!

ஒரு நாள் பஜனை உற்சாகமாகவே அமைந்தது. ஒரே கூட்டம். ஆரத்தி எடுக்கும் சமயத்தில், அவரது படத்திலிருந்து, ஒரு கிருஷ்ண விக்ரஹம் ஒய்யாரமாகக் குதித்தது! - ஸாயி ப்ரேமி



ஆயிரம் அடி அடித்தும் பாறை உடைவதில்லை. ஆயிரத்தொன்றும் அடியில் பாறை உடைகிறது. இதனால் 'ஆயிரம் அடி எதற்காக? எடுத்தவுடனேயே ஆயிரத்தோராவது அடியைப் போடுவோமே!' என்று எண்ணுவார்களா? ஸாதனை செய்து விழிப்புப் பெறுவதும் இப்படித்தான்.

நாங்கள் ஏதும் கேட்டுக் கொள்ளாமலே எங்களைப் பார்த்ததும் பஸ் நின்றது. தலைப் பொறுப்பாக அத்தனை பிரயாணிகளும், டிரைவரும், கண்டக்டரும், கார் விழுந்த அல்லது விழ முடியாத இடத்தை நோக்கிப் போனார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து அப்படியே காரைத் தூக்கித்தான் அந்தப் பாறைக்கு அப்பால் சற்று ஸமதளமான இடத்தில் வைத்தார்களா, அல்லது லாகவமாகத் தள்ளிச் சென்றார்களா என்று தெரியவில்லை.

ஓரளவு சமமாக இருந்த அவ்விடத்தில் பஸ் டிரைவர் கார் டிரைவராக உருவெடுத்தார்.

என்ன ஆச்சரியம்! அவர் வண்டியை 'ஸ்டார்ட்' செய்ய, தடால் தடாலென்ற ஓசையுடன் பாறை பாறையாக மோதிக் கொண்டும், குதித்துக் கொண்டும் சுமார் கால் கிலோ மீட்டர் பிரளய தாண்டவம் செய்திருந்த அந்தக் கார் அதி சமர்த்தாகப் புறப்பட்டு விட்டது.

அதென்ன மாயமோ? பாதையே இல்லாத அந்தக் குன்றுகளின் சாரலில் ராஷ்டிரபதி பவன் சாலையில் செல்வது போல், பரம நாஸூக்காக அரை கிலோ மீட்டருக்கு வண்டியை ஓட்டிப் புட்டபர்த்திச் சாலைக்குக் கொண்டு வந்து சேர்த்தார் பஸ் டிரைவர்.

அவருடைய திறமை ஒரு பக்கம் இருக்கட்டும். ஸமூகத்தை, பிரேமை நிறைந்த ஸேவையை என்ன சொல்வது? அவர் மட்டுந்தானா? கண்டக்டர், முதலில் வந்த மாட்டுக்காரர் ஆகியவர்களும் எப்படிப்பட்ட உத்தமப் பாங்கில் முக்குளித்தவர்களாக இருந்தார்கள்? அன்பளிப்பு எதையுமே பெற முடியாது என்று தீர்மானமாக அவர்கள் மறுத்து புட்டபர்த்தியின் புறம் திரும்பிக் கையெடுத்துக் கும்பிட்டு, எல்லாம் 'தேவுடு' செய்ததுதான் என்று நெஞ்சாரச் சொன்னதுண்டே!

''அந்தா ஸாயி மயம்'' — அனைத்தும் அவனே — என்பது உயிரனுபவமாகப் புரிந்தது. மந்திருக்கு வெளியே தரிசனம், உள்ளே பஜன் தர்சனம் ஆகியவற்றுக்கு எத்தனையோ மேல் அல்லவா உள்ளும் வெளியும் அன்பேயான இந்த உள்ள தர்சனம்? என்றென்றும் உள்ள தர்சனம்?

ரமணி ஸ்டீயரிங்கைப் பிடிக்க கார் ஜம்மென்று பறந்தது பிரேமாலயத்துக்கு. அதன் ஸகல இயந்திர இந்திரியங்களும் பூர்ண ஆரோக்யத்தோடேயே இயங்கியது விந்தையினும் விந்தைதான்.

மறுநாட் காலை வெளிச்சத்தில் அதன் வெளி உருவத்தைச் சோதித்துப் பார்த்தும் ஒரு அற்ப நசுங்கல், ஒரு சொற்பக் கீறல் கூடக் கண்டு பிடிக்க முடியவில்லை.

இரண்டு நாள் திவ்ய தரிசனம் செய்து விட்டு ஊருக்குப் புறப்படுகிறோம்.

ஆச்ரமக் கீழண்டை வாசலை அடுத்து, பஸ் ஸ்டாண்டில் காரைச் சற்று நிறுத்தி, மறுபடி எடுக்கவிருந்த சமயம்.

நேர் எதிரே ஒரு ஜீப் வந்தது. சற்றும் எதிர்பாராத விதமாக அதில் ஸ்வாமியே அமர்ந்திருக்கிறார்!



அருட் சிகரத்துக்கு ஒரு சிறப்பிதழ்

''பகவான் பாபா''; ''சத்திய சாயி''... பெயர் சொல்லக் கேட்டாலே மெய் சிலிர்க்கும் பலருக்கு. அவர் நிகழ்த்தும் அற்புதங்கள் குறித்து, ''மந்திரம் மாயமெல்லாம் யாருக்கு வேண்டும்?'' என்போரும் உண்டு.

''மக்களைக் கவர சித்துகள் பயன்படுகின்றன. கவர்ந்த பின்தானே அவர்களை ஆன்மிக உயர்நிலைக்குக் கொண்டு செல்ல முடியும்?'' என்று வாதிடுவோரும் இருக்கின்றனர்.

இத்தகைய விவாதங்களுக்கு அப்பாற்பட்டவை பாபாவின் அறிவும் அன்பும். அறிவுக் கனலாகவும் அருட் புனலாகவும் ஒருங்கே விளங்குபவர் அவர். மக்களுக்கு இறை உணர்வூட்டுவதும், அவர்களை நல்வழிப்படுத்துவதும் மக்களுக்குச் சேவை செய்வதும், மக்களிடையே சேவா மனப்பான்மையை வளர்ப்பதும் வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்டவைதாமே? பாபாவின் சித்து விளையாட்டுக்களை விரும்பாதோர்கூட இவற்றால் பாபாவிடம் கவரப்பட்டதுண்டு. நேற்று தூற்றிய நாவையே இன்று வாழ்த்தச் செய்கிற அருட் கடல் பாபா.

சத்திய சாயியின் சிறப்புக்களையும்தொண்டுகளையும் பொன் மொழிகளையும் புகைப்படங்களுடன் விரிவாகச் சொல்லி அவரது பிறந்த நாளையொட்டி வெளியாகும் இந்த இதழைத் தயாரிக்க உதவியவர்கள்:

பெங்களூர் : திரு வெங்கடாசலம், திருமதி சகுந்தலா பாலு.

சென்னை : திரு டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி, திரு ரா. கணபதி, ஜயரதன், நாயகன், திரு பார்த்தசாரதி

மற்றும் கல்கி வாசக அன்பர்கள்.

இவ்விதழின் பல பக்கங்களில் கீழே இடம் பெற்றுள்ள பொன்மொழிகள் எல்லாம் பாபா அருளியவை.

மலர்ச்சியான மலர்ச்சி பொங்க எங்களைப் பார்க்கிறார்.

ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்து லக்ஷம் அடியாருக்குக் காப்புத் தரும் திவ்ய ஹஸ்தம் எழும்புகிறது!

திருமுகத்தில் குறும்புகொழிக்கக் கரத்தைச் சற்றே கீழ் நோக்கத் தாழ்த்தி —


ஆம், காருக்குத்தான் அநுக்ரகம் புரிகிறார்!

மறு விநாடியே கரம் நேரே உயர்ந்து எங்களனைவருக்கும் அபயம் பாலிக்கிறது.

சரியாக நாங்கள் புறப்படும் அந்த நொடியில் இந்தத் தெம்பு எங்களுக்கு ஊட்ட வேண்டும் என்று வந்து குதித்திருக்கிறாள் அபயாம்பிகை ஸாயி!

'எங்களுக்கு' என்பதில் அசேதனம் என நினைக்கும் காரும் அடக்கம்தான்!

ஞானம் உன் பிதா; பிரேமை உன் மாதா; தர்மம் உன் சகோதரன்; தயை உன் உயிர் நண்பன்; சாந்தம் உன் துணைவி.; நீரம் உன் புத்திரன். இப்படி இவை எல்லாவற்றையும் உன் அத்யந்த உறவினராக்கிக் கொண்டு அவற்றோடு நெருங்கி வாழ். சேர்ந்து பழகு. அவற்றை ஒரு நாளும் மறக்காதே, கைவிடாதே.



கொடுக்கற தெய்வம் கூரையைப் பொத்து கிட்டு கொடுக்குது.. பாரு!
ஐ.எம்.எப் கடன்
ஆர்.வி
போர் மறுப்பு
எஃப்-16 (பாக்)
திருப்பத்தூரில் 'மீனாட்சிபுரம்'!
கை சின்னத்தில் ஓட்டளியுங்கள்!

சரணாகதி படலம்

சர்க்காரியா கமிஷன் தீர்ப்பைத் தொடர்ந்து போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்றதன் மூலம் கருணாநிதியை நன்றிக் கடன் பட்டவராகச் செய்தாகி விட்டது. ராய் கமிஷன் நியமித்து எம்.ஜி.ஆரை மிரட்டியும் ஆயிற்று. இதன் பிறகு இப்போது திருப்பத்தூர் தேர்தலில் கூட்டணி இல்லை என்றும் தன் காலிலேயே சுயமாக நிற்கப் போவதாகவும் அறிவித்து அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் கோருவதாய் இ. காங்கிரஸ் அறிவித்திருக்கிறது. இந்த சாணக்கியம் இரு மாநிலக் கட்சிகளின் சரணாகதி படலமாக முடிந்திருக்கிறது.

அஇஅதிமுகவுடன் இ. காங்கிரஸ் குலாவுகிறதே என்பதால் கருணாநிதியால் வெட்டிக் கொள்ள முடியவில்லை. கருணாநிதி இ. காங்கிரஸை ஆதரிக்கிறாரே என்பதால் எம்.ஜி.ஆர். ஒட்டிக் கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை. இருவருமே போட்டி போட்டுக் கொண்டு அம்மையாரின் பாத கமலங்களைப் பூஜிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

கூட்டணி இல்லை என்று சொல்லிவிட்டு அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் கோருவதாகப் பிரதமர் அறிக்கை விடுவானேன்? மாநிலக் கட்சிகளின் உதவியின்றித் தனித்துப் போட்டியிட்டால் இ. காங்கிரஸ் வெற்றி பெறாது என்று உணர்ந்திருப்பதுதான் காரணம். 'கூட்டணி' என்றால் என்ன, 'ஒத்துழைப்பு' என்றால் என்ன? வெறும் வார்த்தை ஜாலம்தான். இந்திரா காங்கிரஸை மையமாகக் கொண்ட கூட்டணி எம்.ஜி.ஆரின் ஆதரவுடன் மேலும் பலப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இ. காங்கிரஸ், தான் தனித்துச் சுயமாய் நின்று, தன் பலத்திலேயே வெற்றி பெற்றது போல ஒரு மாயையையும் உருவாக்க முற்பட்டிருக்கிறது. பல்வேறு வகையான தேர்தல் தந்திரங்களில் இதுவும் ஒன்று.

அஇஅதிமுகவுடன் முன்பு கூட்டணி அமைத்திருந்த கட்சிகள் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாகக் கருதுகின்றன. எம்.ஜி.ஆர். கூறும் காரணம்: ''கூட்டணி என்பது தேர்தல் வரையில்தான்; அதன் பின்னர் கட்சிகள் தத்தமது தனித்தன்மை இழக்காது செயலாற்ற வேண்டியதுதான்; அடுத்த தேர்தல் கூட்டணி பற்றி அந்தத் தேர்தலின் போதுதான் யோசிக்க வேண்டும்.'' இதில் ஆட்சேபிக்க ஏதுமில்லை என்றாலும், 'எதற்காக இப்போது திடீரென்று இ. காங்கிரஸை ஆதரிப்பதாக எம்.ஜி.ஆர் முடிவு செய்திருக்கிறார்?' என்று நோக்குகையில் அவர் கூறும் காரணம் ஜீரணிக்க முடியாததாய் உள்ளது.

''ஒரு எம்.எல்.ஏ. அல்லது எம்.பி. இறந்து போனால் உப தேர்தல் நடக்கும் போது அந்த எம்.எல்.ஏ அல்லது எம்.பி. எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ அந்தக் கட்சிக்கே அந்த ஸ்தானத்தை விட்டுக் கொடுத்து விட வேண்டும்; இப்படி ஒரு புது மரபை உருவாக்க வேண்டும்'' என்கிறார் எம்.ஜி.ஆர். இது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமானது.

ஆளும் கட்சி பதவிக்கு வந்தபின் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் பாதையில் செல்கிறதா அல்லது மக்களுக்கு ஏமாற்றத்தை விளைவிக்கும் போக்கில் செயல்படுகிறதா என்பதற்கு அளவுகோலாக அமையக் கூடியன உப தேர்தல்கள். ஆளும் கட்சி அபேட்சகரை முறியடித்து எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றால் அது ஆளும் கட்சிக்கு மக்கள் தரும் எச்சரிக்கையாக அமையும். இந்த அருமையான வாய்ப்பை மக்கள் இழக்க வேண்டும் என்கிறார் எம்.ஜி.ஆர்.

அவர் ஜனநாயகத் தத்துவங்களை அறியாமல் பேசுகிறார் என்று நம்புதற்கில்லை. அச்சத்தின் விளைவான தமது சரணாகதியை நியாயப்படுத்த முயலும் ஒரு சந்தர்ப்ப வாதமே இது.

ஜனநாயக மரபுகள், கொள்கை ரீதியான கட்சி அமைப்புகள் எல்லாம் சுயநல அரசியலுக்குப் பலி கொடுக்கப்பட்டு விட்டன. தேர்தல் வெற்றிக்குப் பணமே பிரதானமாகி விட்டது. மத்திய அரசுக்கு அடிமையாகத்தான் மாநில அரசுகள் இயங்க முடியும், இல்லையேல் இடத்தைக் காலி பண்ண வேண்டியதுதான் என்பது பன்முறை நிரூபணமாகி விட்டது.

இந்தச் சூழலில் தமிழக முதல்வரின் சரணாகதி யாருக்குமே வியப்பளிக்காது.



1981 நவம்பர் 22
துன்மதி கார்த்திகை 7
மலர்: 40 இதழ்: 17

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

பத்திரிகை சுதந்திரத்துக்கு மூடுவிழா?

அந்துலே விவகாரத்தை அருண்ஷோரி அம்பலப்படுத்தப் போக இன்று பம்பாயி லிருந்தே எக்ஸ்பிரஸ்ஸை அப்புறப்படுத்தி விடுகிறேன் என்று ஆரம்பித்திருக்கிறாராமே. அந்துலே. வாஸ்தவமா?

அந்துலேயால் இரு முறை தேசிய பாது காப்புச் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப் பட்டு. அங்கே அழவும் செய்த தொழிலாளர் தலைவர் தத்தா சமந்த் இதற்குப் பயன் படுத்தப்படுகிறாராமே. நிஜமாகவா?

தொழிலாளர் வட்டாரங்களில் டாக்ட ராகப் பணிபுரிந்து இன்று தொழிற்சங்கத் தலைவராக விளங்கும் தத்தா சமந்த்துக்கும் அந்துலேக்கும் ரகசிய சந்திப்புக்கு ஒரு மராட்டி பத்திரிகை நிருபர் ஏற்பாடு செய் தாராமே. உண்மையா?

மிரட்டலிலும் அடியாட்களிலும் அதிக நம்பிக்கை கொண்டவர் தத்தா ஸமந்த் எனக் கூறப்படுகிறதே. ஏற்கவாமா?

எக்ஸ்பிரஸ் தொழிலாளர்கள் 1100 பேர் தங்களுக்குள் ஒரு தொழிற் சங்கம் அமைத் திருக்க. அதில் ஊடுருவி. ஒரு ஐம்பது அறு பது பேரை இழுத்துக் கொண்டு விட்டுத் தமது சங்கத்துக்குத்தான் நிறுவனத்தில் பெரும்பான்மை பலம் என்கிறாராமே தத்தா ஸமந்த். நம்புவதா இந்தத் தகவலை?

பாலேகர் பொரிக, அதை யொட்டிய அரசு சட்டத்தைவிட மிக அதிகமாக பம் பாயில் எக்ஸ்பிரஸ் ஊழியர்களுக்கு ஊதிய மும் போனஸும் தரப்பட வேண்டும் என நிபந்தனை விதித்தாராமே ஸமந்த். சரிதானா இச் செய்தி?

இதை நிர்வாகம் ஏற்க மறுத்தபோது கோ ஸ்லோ, ஸ்டே இன் ஸ்டிரைக் எல்லாம் தொடங்கி, நிர்வாகத்துக்கு விசுவாசமுள்ள பெரும்பான்மை ஊழியர்களையும் மிரட்டி அடிபணிய வைத்தார்களாமே ஸமந்த்தின் ஆட்கள். மெய்தானா?

வேறு வழியின்றி நிர்வாகம் எக்ஸ்பிரஸ் பம்பாய் பதிப்பை மூடிவிட உத்தேசிக்கு முன் னர். 'எந்த நிறுவனமும் குளோஷர் அல்லது லாக் அவுட் செய்யக் கூடாது' என்று அந் துலே அவசரச் சட்டம் கொண்டு வந்தா ராமே. நிஜம்தானா?

''இந்தச் சட்டத்தை நீதிமன்றத்தில்தான் சந்திக்க வேண்டும்'' என்று கோயங்கா கூற. ''கோயங்காவை எங்கே தட்டினால் அவ ருக்கு வலிக்குமென்று எங்களுக்குத்தெரியும்'' என்று பம்பாயில் சில அரசியல்வாதிகள் பேச கிறார்களாமே. மெய்தானா?

இறைவா! இவை யெல்லாம் உண்மை யாக இருந்துவிடக் கூடாது! ஏனெனில் இவை மெய்யானால் ஏற்கனவே செத்துக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் குரல் வளையினை மேலும் அழுத்தப் பற்றியதாகக் தானே ஆகும்!

தீபாவளி முடிஞ்சாச்சு!



''என்னப்பா! இந்த இளி பொம்மை மட் டும் அநியாயவிலை சொல்றே?''.

''இது தீபாவளி ஸ்பெஷல் பொம்மை சார்! ஐந்து நிமி ஷத்துக்கு ஒரு தடவை ''ஏன் மாப் பிள்ளே ஊருக்குக் கிளம் பலியா'' ன்னு சத்தம்போடும்சார்!''

●

''உங்க மாப்பிள்ளையை உலகம் தெரியாதவர்னு சொல்றீங்க!''

''ஆமாம்சார்! தன் கல்யாணத் துக்கு வந்தவர் இன்னும் விட்டு வாசப்படியைத் தாண்டலியே!''

என்ன சார்! அவசரம் அவசரமா வீட்டைக் காலி பண்றீங்க?''

''மார்க்கெட் போயிருக்கிற மாப் பிள்ளை திரும்பிவரதுக்குள்ளே வேறே தெருவுக்குக் குடிபோயிடணும் சார்!''




''என்ன மாப்பிளே ஊருக்கு வரச் சொல்லி லெட்டர் வந்திருக்கா?''

''இல்லே! என்னைப் பிரிஞ்சு இருக்க முடியலியாம்! அதனாலே அப்பாவும் அம்மாவும் இங்கேயே புறப்பட்டு வாராங் களாம்!''

- ஸி. பி. ஸ்ரீதர்

'இதயத்தில் இறைவன்; கரமே துணைவன்!'



இறையுணர்வோடு, சமூக சேவையையும் மக்களிடையே பரவச் செய்ய வேண்டும் என்பதில் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களுக்கு உள்ள ஆர்வம் சாயி பக்தர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் தெரிந்த விஷயம்.

புட்டபர்த்தி, அனந்தப்பூர், வொயிட் ஃபீல்ட், ஜெபல்பூர் மற்றும் ஓர் இடத்திலுமாக ஐந்து கல்லூரிகள் பாபாவின் மேற்பார்வையில் இயங்குகின்றன. இவற்றுள் அனந்தபூர், புட்டபர்த்தியில் உள்ள கல்லூரிகளைக் கொண்டு ஸ்ரீ சத்ய சாயி பல்கலைக் கழகம் அமைக்க அரசு சமீபத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

வொயிட் ஃபீல்டில் பாபாவின் வாசஸ்தலமான பிருந்தாவன் அருகே, கலை, விஞ்ஞான, வணிகக் கல்லூரி இருக்கிறது. கல்லூரி முதல்வர் நரேந்திரன் இக்கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டான 1969 முதலே இங்கு பணியாற்றி வருபவர்.

''நல்லொழுக்கம், ஆன்மீகத் துறையில் வளர்ச்சி, சேவை மனப்பான்மை ஆகியவைகளுக்குச் 'சம முக்கியத்துவம்' கொடுத்து, கல்வியறிவோடு பயில்விக்கிறோம். 'தில் மே ராம்... ஹாத் மே காம்....' (இறையுணர்வோடு கடமையுணர்வும் ஒவ்வொருவருக்கும் அவசியம்) என்கிற தாரக மந்திரத்தை ஸ்ரீ பாபா மாணவர்களுக்குச் சொல்லியுள்ளார்!


விஞ்ஞானம், வணிகம், கலை ஆகிய பாடங்களில் பட்டப்படிப்புவரை உள்ள இக்கல்லூரியில் கிராமப்புறங்களில் சுற்று வட்டாரத்தில் உள்ள பல மாணவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கப்பட்டதை அறிகிறோம். பணம் கட்டிப் படிக்க வேண்டிய கல்லூரி தான். பெரும்பாலோர் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கின்றனர். ஏழை மாணவர்களுக்கு பாபா உதவி செய்வாராம்....

அற்புதமான ஒரு லைப்ரரியும், கல்வி வளர்ச்சிக்கு உதவும்படியான விலையுயர்ந்த சில மேனாட்டு விஞ்ஞான உபகரணங்களைக் கொண்ட கலைநயம் பொருந்திய கண்காட்சியும் இங்குள்ளது. இக்கல்லூரிக்கு அருகிலேயே கல்லூரி விடுதியும் உள்ளது.

'Kingdom of Sathya Sai' என்கிற அமைப்பில் பழைய மாணவர்கள் ஒருங்கிணைந்து சேவை புரிகின்றனர். படிக்கும் கல்லூரி மாணவர்களும், அருகே உள்ள கிராமங்களுக்குச் சென்று சேவை செய்கின்றனர். இவர்களை வழிநடத்திச் செல்லும் நித்யானந்த மேனனை புட்டபர்த்தியில் சந்தித்தோம்.

''பழைய மாணவர்களாகிய நாங்கள் முதியோர் கல்வி, கண் சிகிச்சை முகாம்கள், போலியோ வாக்ஸின் முகாம்கள், போன்று பல சேவைகள் செய்து வருகிறோம். சமீபத்தில் கர்னாடகா அரசு மேற்கொண்டுள்ள ஏழை எளியவருக்கான 'ஜனதா வீடு' திட்டப்படி ஐந்து ஜனதா வீடுகளை எங்கள் மாணவர்கள் கட்டி உதவியுள்ளனர்.

✕ வொயிட் ஃபீல்டில் ஸ்ரீ சத்ய சாயி கலை விஞ்ஞான வணிகக் கல்லூரி



அன்னதானம், இலவச உடை ஆகியவை யும் ஏழைஎளியவர்க்கு வழங்கிஉதவுகிறோம்'' என்றார் அவர்.

ஸ்ரீ பாபாவின் அருள் சேவைகளில் மனத்தை மிகவும் கவருவது வொயிட் ஃபீல் டில் அமைந்துள்ள மருத்துவமனை.

ஒரு பைசா கூட வசூலிக்காமல், சிறப்பான உயர்மட்ட சிகிச்சை அளிக்கப்படுகிறது இம்மருத்துவமனையில்.

மேலைநாட்டு மருத்துவப் படிப்பில் தேர்ந்த திருமதி ராஜேஸ்வரி தலைமையில் பாபாவின் நேரடிப் பொறுப்பில் இவ்விலவச மருத்துவ மனை இயங்குகிறது.

''மகப்பேறு பகுதி, எலும்புச் சிகிச்சைப் பகுதி, ஈ. என். டி. பகுதி, பொதுப் பகுதி உட்பட எல்லாப் பிரிவுகளிலும் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

இதயச் சிகிச்சைக்காக வரும் நோயாளி களின் நிலைமையை அறிய மேலைநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட மானிட்டர் உள்ளது. உடனடி இதயச் சிகிச்சை அளித்துக் காப் பாற்ற உதவும் சாதனம் இது. Computerised முறையில் தானாக இயங்கிப் பரிசோதித்து முடிவுகளை வெளிப் படுத்தும் பரிசோதனைச் சாலை உள்ளது...

எல்லா வசதியையும் கொண்ட அறுவை சிகிச்சை நிலையம் உள்ளது.

ஆஸ்பத்திரியின் சுத்தமான தோற்றமும், அங்கு பணி புரிவோரின் மனப்பான்மை, செயல்படும் விதமும் மனத்தை ஆட்கொள் கின்றன. இந்தியச் சூழ்நிலையில் எப்பகுதி யிலுமே இத்தகையதோர் இலவச மருத்துவ மனையைக் காணவே முடியாது என்று திட்ட வட்டமாகக் கூறிவிடலாம்.

புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்திலும் ஓர் இலவச மருத்துவ மனை இயங்கி வரு கிறது.

மருத்துவத் துறையில் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அருளும் அவரது சேவையும் ஈடு இணையற்ற அம்சங்களாகும்!

- நாயகன்

புகைப்படம்: பார்த்தசாரதி

விடியும் வரை காத்திரு!

ஊதுகிற சங்கை ஊதி வைப்போம்;
விடியும்போது விடியட்டும்!

இன்று மேடை நாடகங்களின் நலிவுக்கு டி.வி.யைக் காரணம் காட்டினாலும், அது ஓரளவே. முக்கிய பங்கு சில தரகர்களே. நாடகங்களின் தரம் இந்தத் தரகர்களுக்குக் கொடுக்கப்படும் கமிஷன் தொகையிலேயே நிர்ணயிக்கப்படுகிறது. இவர்களின் கடை ஸ்தலம் வட சென்னை கலையரங்கம். இங் கிருந்தபடியே, தமிழ் நாட்டில் உள்ள எல்லா சபாக்களுக்கும் நாடகம் ஏற்பாடு செய்து கொடுப்பார்கள், வாங்குகிறகமிஷனுக்கேற்ப. இதுபோக, வெளியூரிலும் இது போன்ற தரகர்கள் உண்டு. அவர்களுக்குக் கமிஷன் இருவகை. ஒன்று பணம். இன்னொன்று: திரவப் பொருள்.

மத்திய சென்னையில் இருக்கும் ஒரு சபா, மாதத்துக்குப் பத்து சினிமா, பதினைந்து நாடகம் என்று சரளமாய் அறிவிப்பார்கள். ஒன்று தேறினால் அதிகம். இவர்கள் நாடகங் களுக்கு வாய்ப்புக் கொடுப்பதே, கலையரங்க வாடகையை முன்பணமாகக் கட்ட குழுக்கள் ஒப்புக்கொண்ட பிறகே.

மேலும் ஒரு குறிப்பிட்ட சபாவில் நாடகம் என்றால் அதற்குள் பத்து உதிரி சபாக்கள் இணைந்திருக்கும். இதனால் எந்த சபா உறுப் பினருக்கும் முன் வரிசை கிடைப்பதுமில்லை; வாங்குகிற பணத்தைக் குறைப்பதுமில்லை.

● தியேட்டர்கள் போதிய சுகாதார வசதி செய்து கொடுத்தால், டிக்கெட் கட்ட ணத்தை உயர்த்த ஒப்புக் கொண்டிருக்கிறது அரசு.

யாருக்கு வேணும் இந்தப் பிச்சைக் காசு? புதுப் படம் வெளிவரும் நாட்களில் பேருக்கு ஒரு பத்து டிக்கட் க்யூவில் நிற்பவர்களுக்குக் கொடுத்தோம் என்று கண்ணில் காட்டிவிட்டு, மீதமுள்ள டிக்கட்டுகளை அப்படியே டிக்கட் விலையை விட இரண்டு மடங்கு (குறைந்த பட்சம்) அதிகமாக ப்ளாக் மார்க்கெட்காரர் களுக்குக் கவுண்டரிலேயே தனியாக எடுத்து வைக்கிறார்களே அதைவிடவா அரசின் கருணையால் அதிகமாகக் கிடைத்துவிடப் போகிறது'

● சென்ட்ரல் ஸ்டேஷன் பகுதியில் ஓர் ஊன முற்ற நபர். அந்தப் பகுதியின் சென்டர் ஆப் அட்ராக்ஷன். அவசரமாய் ரயில் பிடிக்கப் போய்க் கொண்டிருக்கும் பிரயாணி மீது தாமே போய் விழுந்து விட்டு, கூச்சல் போட்டு, ஊரைக் கூட்டுவார். அந்த நபர் தன்னை வேண்டுமென்றே கீழே தள்ளிவிட்ட தாய் அலறுவார். இந்தக் களேபரத்தில் சம்பந்தப்பட்ட பிரயாணியின் பர்ஸ் பறி போகும்.

சற்று கை சோர்ந்து பெட்டியைக் கீழே வைத்தால் நம் பொருள் நம்முடையதல்ல. இது, அந்த வட்டாரத்தில் உள்ள அனைவரும் அறிந்ததே.

● தென் சென்னையில் சில மாதங்களுக்கு முன்னால் ப்ளூபிலிம் காட்டியதற்காக கைதா கிய நபர் நூறு ரூபாய் தூக்கிப் போட்டுவிட்டு இரண்டே நாளில் வெளி வந்து விட்டார்!

● போலீஸ் துறையைக் கௌரவிக்கத் தபால் தலை அடுத்த ஆண்டு வரப்போகிறதாம்!

—ரங்கராஜன்

குறைந்த அளவு சாமான்கள் பயணத்தை இனிதாக்கும் என்ற அறிவிப்பை ரயில் பெட்டியில் காண்கிறோம். வாழ்க்கையும் ஒரு பயணம். ஏராளமான ஆசைகளைச் சுமந்து செல்வதால் வாழ்க்கைப் பயணம் துன்ப மாகிறது. ஆசைச் சுமையின் அளவு குறைந்தால் பயணம் எளிதாகிறது.

இந்த வியாதிக்கு மருந்தே இல்லையா?



தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சர் நூலை வெளியிடுகிறார்

● தமிழகத்தில் குழந்தைகள் மரணத்துக்கு மிகப் பெரும்பான்மையான காரணம் வாந்தி பேதிதான். இதிலும் நிறைய மரணங்களைத் தவிர்க்க முடியும். தாய்மார்கள் குழந்தைகளுக்கு அவ்வப்போது குடிக்கத் தண்ணீர் தந்து வந்தால், தண்ணீராக மலம் போகிறதே என்பதால் தண்ணீர் தரக் கூடாது என்று எண்ணி விடுகின்றனர். குழந்தையின் உடல் இழக்கும் நீரை இட்டு நிரப்ப வேண்டியது அவசியம். அந்த நீரில் சிறிது உப்பு, சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம். இதற்கென்றே மருந்துக் கடைகளில் விற்கும் பவுடரைக் கலந்தும் தரலாம்.

◘ ◘ ◘

● டாக்டர்கள் உடலில் இடக்கை விரலை வைத்து வலக் கையால் தட்டிப் பார்க்கிறார்களே, அது எப்படி ஆரம்பித்தது? பிரான்ஸில் பிரும்மாண்டமான பீப்பாய்களில் சாம்பெய்ன் மது வைக்கப் பட்டிருக்கும். பீப்பாயின் வெளிப்புறத்தை மேலிருந்து கீழாகத் தட்டிப் பார்த்து வருகையிலேயே ஓசை வித்தியாசத்தில், ''இதோ இந்த மட்டம் வரை சாம்பெய்ன் இருக்கிறது'' என்று கூறிவிடுவர். இதைக் கவனித்த ஒரு மருத்துவருக்கு இம்முறையை உடல் பரிசோதனையில் புகுத்தத் தோன்றியது.

◘ ◘ ◘

● அந்நாளில் ஆணோ பெண்ணோ நோயாளியின் நெஞ்சில் காதை வைத்துப் பார்த்தே மருத்துவர்கள் இதயத் துடிப்பைப் பரிசோதித்தனர். அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பருமனான பெண்மணியைப் பரிசோதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. டாக்டர் சிறிது தயக்கத்துக்குப் பிறகு ஒரு காகிதத்தைக் குழாயாகச் சுருட்டி நெஞ்சில் வைத்துக் கேட்டார். இதிலிருந்துதான் படிப்படியாக ஸ்டெதாஸ்கோப் தோன்றியது. இன்றைய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பலர் பழைய முறைக்கே திரும்பலாமே என்று விரும்பக் கூடும்!

◘ ◘ ◘

● நோயாளி அருகில் வரும்போது அவனிடம் எழும் வாடையிலிருந்தே அவனுக்கு இன்ன வியாதி என்று கண்டுபிடித்து வைத்தியம் செய்யும் ஆற்றல் படைத்தவர் டாக்டர் குருசாமி முதலியார். பிராங்கைட்டிஸ் சனிக்கு ஒரு இலேசான துர்நாற்றம் உண்டு. எட்ட வரும்போதே இதை நுகர்ந்து நோயாளி கிட்டத்தில் வரும்போது மருந்துச் சீட்டைத் தயாராய் எழுதி வைத்திருப்பார் டாக்டர் குருசாமி! பல டாக்டர்களைப் பார்த்தும் உபாதைகள் தீராமல் கடைசியில் டாக்டர் குருசாமி முதலியாரிடம் வந்து சேர்ந்த ஒருவருக்குக் கிடைத்த சீட்டு: ''ஒரு பல் வைத்தியரைப் பார்க்கவும்.'' அவர் பற்களில் இருந்த அசுத்தம்தான் அவரது உடல் உபாதைகள் அனைத்துக்கும் காரணம் என்று உணர்ந்து அப்படி எழுதித் தந்தார். நாலே நாளில் ஆரோக்கியம் பெற்றார் அந்த நபர்!

இப்படிப் பல ரசமான தகவல்களை அடுக்கிக் கொண்டே போனார் டாக்டர் ஹாண்டே, ''குறைவற்ற செல்வம்'' நூல் வெளியீட்டு விழாவின்போது. சென்னை கிழக்கு அரிமா சங்க வெளியீடான இந்நூலில் பல டாக்டர்களும், பிரபல எழுத்தாளர்களும் எளிய தமிழிலே நோய்களைப் பற்றியும் நோய் தடுப்பு முறைகளைப் பற்றியும் ரசமான கட்டுரைகள் எழுதியுள்ளனர். கிடைக்குமிடம்: ரங்கா நர்ஸிங் ஹோம், 36, மௌபிரேஸ் ரோடு, சென்னை-18. விலை ரூ. 20. இதை அச்சிட உதவியது ஆனந்த விகடன். இதில் கிடைக்கும் வருவாயெல்லாம் அரிமா சங்கம் கஞ்சம்பாக்கம் கிராமத்தில் நடத்தும் இலவச மருத்துவ மனையின் அபிவிருத்திக்கே பயன்படும்.


அன்றைய நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரது மனத்திலும் ''இவ்வளவு மருந்துகளை இத்தனை வியாதிகளுக்கு டாக்டர்கள் எழுதித் தருகிறார்களே, நேரம் கழித்து வருதல் என்ற வியாதிக்கு ஒரு மருந்தும் இல்லையா?'' என்ற எண்ணம் தோன்றியிருந்தால் வியப்பதற்கில்லை. அழைப்பிதழில் காலை 10 மணி என்று போட்டிருந்தது. திரு ஹாண்டே 10-30க்கு வந்து விடுவார் என்று எதிர்பார்க்கப் பட்டது. வந்ததோ 11.15க்கு!

— குட்டிகிருஷ்ணன்

— புகைப்படம்: சுபா போட்டோ

நீ ஒரு வீட்டில் வசித்தால் முனிசிபாலிடிக்கு வரி கட்டுகிறாய். எலெக்ட்ரிக் கரண்ட் உபயோகித்தாலும் குழாய்த் தண்ணீர் உபயோகித்தாலும் கட்டணம் செலுத்துகிறாய். அப்படியிருக்கையில் நீ சுவாசிக்கும் காற்றையும், நீ இருக்கும் இந்த உலகத்தையும், அழகான இயற்கை எழிலையும் உனக்களித்திருக்கும் கடவுளுக்கு வரி கட்ட வேண்டாமா? இறைவனுக்கு பிரார்த்தனை மூலமோ அல்லது தினசரி அவனைச் சற்று நேரமாவது நினைப்பதன் மூலமோ, உன் கடனைத் தீர்த்துக்கொள்.

பஸ்ஸிலே கேட்டவை



நவம்பர் 4: 21பி

"பற்றாக்குறை பட்ஜெட்தான் நம்மோட சகல கஷ்டங்களுக்கும் காரணம்னு வி.எஸ். எச்சரிச்சிருக்காரே!"

"இவர் இன்னிக்குத்தான் எச்சரிக்கிறார். இவரோட குரு இவர் நிதி அமைச்சரா இருந்தப்பவே எச்சரிச்சார். யார் கேட்டாங்க?"

"போதாக் குறைக்கு இப்ப இண்டர்நேஷனல் மானிடரி ஃபண்டிலே ஆறு பிலியன் டாலர் கடன் வேணும்னு நம்ம சர்க்கார் கேக்குது! ஆயிரம் மிலியன்கிறது ஒரு பிலியன்! ஐயாயிரம் கோடி ரூபாய்!"

"அதுக்கு வட்டி வேறே! நம்ம கொள்ளுப் பேரனுக்குப் பேரன் காலம்வரை கழுத்தளவு கடன்லே அமுக்கிட்டுத்தான் ஆட்சியை விடுவாங்க போலிருக்கு!"

"இந்த லட்சணத்திலே ஐ. எம். எஃப்பும் வொர்ல்ட் பாங்கும் கண்டிஷன் போடறாங்களேன்னு இவங்களுக்கு ஆத்திரம் வேற வரது!"

"ஏன் இங்கே அரசுடைமையான பாங்குகளிலே கண்டிஷன் போடாம கடன் தராங்களாமா?"



நவம்பர் 5: 47-ஏ


"கேரளாவில் ராஷ்டிரபதி ஆட்சி நடக்குதுன்னு டில்லி ராஷ்டிரபதி பவன் காரியாலயத்தில் இருக்கிறவங்களுக்கே தெரியலே! அங்கே அமைச்சரவை ஆள்றதாவே நினைச்சுக்கிட்டுக் கடிதாக எழுதியிருக்காங்க!"

"இதைப் போய்ச் சொல்ல வந்துட்டீங்களே! இங்கே சர்வாதிகாரம்தான் நடக்குதுன்னு மக்களுக்குத் தெரியலே; மக்களாட்சிதான் நடக்கவேணுமின்னு தலைவர்களுக்குத் தெரியலே. இந்த நிலையில் அதிகாரிங்க எப்படி நடந்துக்கிட்டாத்தான் என்ன?"

நவம்பர் 8: 37-பி

"பில்லா ரங்காவுக்குத் தூக்குத் தண்டனையை நிறுத்தி வைச்சுட்டாளாமே என்ன அநியாயம் கேட்டேளா மாமி?"

"அது என்னமோம்மா, 'அவாளுக்குத் தூக்குத் தண்டனை உண்டா இல்லையாங்கிறது பிரச்னை இல்லே; தூக்குத் தண்டனை தான்றது முடிவான விஷயம்'ங்கிறார் என் ஆத்துக்காரர்."



"பின்னே பேப்பர்லே பொய்யா போடுவான்?"



"இல்லேல்லே! இப்பப் பிரச்னை என்னன்னு சுப்ரீம் கோர்ட் மரண தண்டனை விதிச்சப்புறம் ராஷ்டிரபதியிடம் கருணை மனு சமர்ப்பிக்கச்சே அவர் தீர்ப்பை மாத்தினாலோ அல்லது மாத்தாமலிருந்தாலோ அதுக்குக்காரணம் சொல்லணுமாங்கிறதுதான். காரணம் சொல்லாமலே அவர் தீர்ப்பை மாத்தினால் சுப்ரீம் கோர்ட்டைவிட உசந்தவரா ஆயிடுவாரில்லையா? அது சர்வாதிகாரமாயிடாதாங்கிறது பத்தித்தான் வாதம் நடக்கறது."

நவம்பர் 9: ரூட் நெ. 10

"என்னடா வாட்டர் பாட்டில் புச்சா?"

"ஆமாண்டா. கொதிக்க வைச்ச தண்ணி ஸ்கூலுக்குக் கொண்டு போன்னு சொல்லி அப்பா வாங்கிக் கொடுத்துட்டார்!"

"இல்லேன்னு பச்சைக் குழந்தைக்கு ஜுரம் வந்துடுமா? சரியான தொட்டாச் சுருங்கிடா நீ!"

"சும்மாயிருந்தும்மா கண்ணு! கார்ப்பரேஷன் தண்ணியிலே ஒரே பாக்டீரியாவாம். இதுக இதுசா இருக்காம். சப்ளைலே ஐம்பது பர்சண்ட் மோசமான தண்ணி தான்னு ரெண்டு நாளைக்கு முன்னாலே பேப்பர்லே நியூஸ் வந்துச்சு தெரியுமா?"

"சப்ளை ஆறதே ஐம்பது பர்சண்ட் தானேடா! அதனால் செண்ட் பர்சண்ட்டும் பாக்டீரியா தான் மொதக்கும்!"

நவம்பர் 10: ரூட் நெ. 23-ஏ

"திருப்பதி உண்டியல்லே பிராமிசரிநோட்டுங்களைப் போட்டுடறாளாம்!"

"நல்ல ஐடியா! வசூலிக்க முடியாத கடனைப் பெருமாளுக்குச்செலுத்திட்டா வசதி தானே! நேர்ந்துக்கிட்ட காணிக்கையைச் செலுத்தின மாதிரியும் ஆச்சு, கடன் வசூலாகலையேங்கிற கவலையும் விட்டுது! பெருமாளுக்குச் சாமர்த்தியம் இருந்தா கடனை வசூல் பண்ணிக்கட்டுமே!"

"சர்க்காரிலே ஒழுங்கா நடக்காத நிறுவனங்களையும், அயல் நாட்டுக் கடன்களையும் மக்கள் தலையிலே கட்டறா. மக்கள் தங்களால் வசூல் பண்ண முடியாத கடனைப் பெருமாள் தலையிலே கட்டறா."


நவம்பர் 10: ரூட் நெ. 4

"என்னடா 36வது சேம்பர் பார்த்தியா?"

"சுமன் இட்டப் போயி கேளும்மா. ஷாவோலின் பார்த்தானுன்னு. ஐயா நாலு தபா பார்த்தாச்சு."

"ஃபைட்டிங் தெரியாட்டியும் லைட்டிங்லே கில்லாடிதாண்டா நீ!"

குட்டி கிருஷ்ணன்



இதோ! வீட்டிலேயே செய்தது போன்ற ருசியான ஊறுகாய்!
இனிமேல் சிரமம் உங்களுக்கு இல்லை...
ருசி ஊறுகாய்கள்
புதியது!
வீடுகளில் வழக்கமாகச் செய்யப்படும் ஏழு வித சுவைகளில்...
உண்மையை ஒத்துக்கொள்வோம்—நம் வீட்டுப் பெண்கள் ஊறுகாய்களை மிகவும் நன்றாகச் செய்கிறார்கள். ஆனால், இப்போது அதைப் போலவே ருசியான ஊறுகாய்களை உங்களுக்கு வழங்குகிறது ருசி. சுவையான, காரமான, வாசனை மிக்க ஊறுகாய்களை இப்போது மிகவும் எளிதில், உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு மகிழலாமே! வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்ட பொருள்களில், தூய்மையானவற்றை மட்டுமே, மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்து, ருசி ஊறுகாய்கள் தயாரிக்கப்படுகின்றன. எல்லோரையும் திருப்திப்படுத்த, ஏழு விதமான சுவைகளில் தயாரிக்கப்படுகிறது—ருசி!
• மாங்காய்
• இஞ்சி
• எலுமிச்சை
• இனிப்பு மாங்காய்
• தக்காளி
• பூண்டு
• கோங்குரா
Ruchi PICKLES
ருசி ஊறுகாய்கள்
Ruchi
வீட்டிலே தயாரித்தது போன்ற சுவை—செய்யும் சிரமம் சிறிதும் இல்லை.
ருசி ஃபுட் பிராடக்ட்ஸ்
57-A மௌபரீஸ் ரோடு, சென்னை 600 018
HTM-RFP-2826

8

ப்ரியா தரையில் சிதறிக் கிடந்த கடிதங்களை வெகு நேரம் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ ஒரு பயங்கரப் பள்ளத்துக்குள்ளே எட்டிப் பார்ப்பதுபோல ஓர் உணர்ச்சி அவளை ஆட்கொண்டது. கிரிஷைப் பற்றிய உண்மை அந்தக் கடிதங்களில் பதுங்கி யிருப்பதாக அவளுக்குப் பட்டது. அக்கடிதங்களைப் படித்தால்தான் உண்மை விளங்கும். ஆனால்... பிறருடைய கடிதங்களைப் படிப்பது நாகரிகமாகாது அல்லவா? அதிலும் ஒரு மனைவிக்குக் கணவன் எழுதிய கடிதம். காதல், பாசம், அன்பு, இவைகளையெல்லாம் கடைந்து அதில் வெண்ணெயை எடுத்து அதை நெய்யாக்கி... அந்த நெய்க்கு நிரந்தர வடிவத்தைக் கொடுத்துக் கடிதங்களாக்கி.... அப்படிப்பட்ட கடிதங்களைப் படிப்பதா? அதிலும் பார்வதியும், மல்லிக்கும் மறைந்த பிறகு அவர்கள் வாழ்ந்த உலகில் திரையை நீக்கி, ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பதா?... சற்று நேரம் ப்ரியா குழம்பினள். படிப்பதா கூடாதா என்ற பிரச்சினை அவள் முன் மகுடி ஊதாமலே படமெடுத்து நின்றது. அப்போது அவள் உள்ளிருந்து சத்தமின்றி ஒரு குரல்... கடிதங்களைப் படிப்பதில் தவறில்லை! தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கிரிஷைப் பற்றிய உண்மையை அறிய இந்தக் கடிதங்கள் நிறைவு கோலாகப் பயன் தரும். பார்வதியே அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாள்..


ப்ரியா எல்லாக் கடிதங்களையும் அடுக்கினள். அவைகளை எடுத்துக் கொண்டு வேகமாகத் தன் படுக்கை அறைக்கு ஓடினள். அறையின் கதவைச் சாத்திவிட்டுத் தன் படுக்கையில் வந்து உட்கார்ந்தாள். கொண்டு வந்த கடிதங்களைத் தலையணைக்குக் கீழே வைத்துவிட்டு ஒவ்வொன்றாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள். கடிதங்கள் பல ஊர்களிலிருந்து எழுதப்பட்டிருந்தன. மீரட்... பூனா... பெங்களூர்... அம்பாலா... ஒரு மனைவிக்கு ஆசையுடன் கணவன் எழுதிய கடிதங்கள். பல இடங்களிலிருந்து வெவ்வேறு சமயங்களில் எழுதிய கடிதங்கள்... ராணுவத்திலிருக்கும் நண்பர்களைப் பற்றிய வம்புப் பேச்சுக்கள்... விருந்துகள்... கேளிக்கைகள் — இவைகளைப் பற்றிய பரபரப்பான தகவல்கள்... மல்லிக் என்ன எழுத்தாளரா? அப்படி இருந்திருந்தால் பார்வதி பலமுறை சொல்லியிருப்பாளே?

அதில் ஒரு கடிதம். அதிலிருந்த எழுத்துக்கள் அவள் மீது தாவித் தாக்குவது போல ஒரு பிரமை. படிக்கப் படிக்க அவள் விரல்கள் நடுங்க ஆரம்பித்தன. கண்களும் விரிந்தன... ''டியர் பாரு... நான் மெட்ராஸ்லே இருந்து ஒன்னைத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டே இருக்கணும் போலத் தோணுது. பாரு ஒனக்கு டாக்டர் மல்ஹோத்ராவை ஞாபகம் இருக்கா... ஒன்னை அவருக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஒன்னோட எல்லா ரிப்போர்ட்டையும் அவர் கிட்டக் காட்டினேன். எல்லாத்தையும் கேர்புல்லா ஸ்டடி பண்ணுரு... பாவம் டாக்டர் மல்ஹோத்ரா. விஷயத்தை எப்படிச் சொல்றதுன்னு என்னமாத் துடிச்சார் தெரியுமா? பாரு விதி இவ்வளவு விபரீதமா விளையாடும்னு நான் நினைக்கவே யில்லை. நம்ம பூந்தமல்லி டைரோடு டாக்டர் சொன்னது ரொம்பக் கரெக்டுன்னு சொல்றரு டாக்டர் மல்ஹோத்ரா. பாரு நீ எதைப் பத்தியும் கவலைப் படாதே. நான் ஒனக்குக் குழந்தையா இருக்கேன். நீ எனக்குக் குழந்தையா இரு. இருப்பே. நாம கொடுத்து வெச்சது அவ்வளவுதான். பாரு ஒனக்கு ஒடம்பு நல்லாக் குணமாகிற வரைக்கும் மெட்ராஸ்லேயே இரு. நான் அடிக்கடி ஒன்னை வந்து பாக்கறேன். நடந்ததை நெனச்சி சும்மா அழுதுக்கிட்டு இருக்காதே. அதனலே ஒன் ஒடம்பு இன்னும் கொஞ்சம் கெடும். அவ்வளவுதான். லைஃப்லே நமக்கு என்னென்னவோ கெடைச்சது. எல்லாம் கெடைக்காது. பாரு என்னை நீ புள்ளையா நெனச்சிக்கோ, மனசைத் தேத்திக்கோ. மாமாவைக் கட்டாயமா அடிக்கடி லெட்டர் போடச் சொல்லு. நல்லா தூங்கு பாரு. அதுதான்



ஒன் ஒடம்பைக் கொணப்படுத்தும். நான் சீக்கிரம் அங்கே வரேன். எதைப் பத்தியும் கவலைப்படாதே. யுவர்ஸ், மல்லி.''

ப்ரியா அப்படியே மலைத்துப் போய் விட்டாள். உண்மை அவளை உலுக்கிவிட்டது. பார்வதிக்குக் குழந்தையே கிடையாதா? அவளுக்குக் குழந்தையே இருந்திருக்க முடியாதா? அப்படி என்றால் பார்வதி தனக்கு ஒரு மகன் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு வாழ்ந்து வந்தாளா? ஆம்! சந்தேகமில்லை. அதுதான் உண்மை. பார்வதிக்குக் குழந்தை கிடையாது. கிரிஷ்! அப்படி யாருமே இருந்ததில்லை. பார்வதியின் கற்பனையில் தவிர. கிரிஷ் சதை, எலும்பு, ரத்தம், இதயத் துடிப்பு — இவைகளின் கலவை அல்ல. பார்வதியின் கற்பனையில், கனவில் பிறந்து வளர்ந்து மடிந்தவன். தனக்குக் குழந்தை பிறக்காது என்று டாக்டர்கள் சொன்னபோது பார்வதியின் மன நிலை முறிந்து தெறித்திருக்க வேண்டும். அந்தப் பயங்கர உண்மையின் விளைவுதான் இந்தக் கற்பனை மகன். பாவம், பார்வதி. அவள்



வாழ்க்கையில் இப்படி ஒரு கொடூரமான ரகசியமா?

டாக்டர் ஆனந்த் எவ்வளவு பயங்கரமான வில்லன்! பணத்தாசையினால் பார்வதியை ஏமாற்ற என்ன துணிச்சல், துணிவு அவருக்கு.? சே! இவ்வளவு மட்டமானவரா டாக்டர்! மனநிலை சரியில்லாத ஒருத்தியை, தன்னைப் பரிபூரணமாக நம்பி, வைத்தியம் பார்க்க அழைத்த ஒரு நோயாளியை... இந்த அளவுக்கா ஏமாற்றுவது? என்ன நடந்தாலும் எதிர்ப்பு எதுவாகஇருந்தாலும் அவர்களின் போர்வைகளைக் கிழித்தெறிய வேண்டும்...

“ப்ரியா, அந்த வக்கீல் சாரி என்ன சொன்னாரு? எல்லா விஷயத்தையும் கிடுகிடுன்னு முடிக்கச் சொன்னியா?'' கிரிஷ் பூரியை மென்றுகொண்டே பேசினான். அவனும் ப்ரியாவும் மேசையில் அமர்ந்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். பூரியைக் குருமாவில் தோய்த்துத் தோய்த்து அதை நான்காக மடித்து அப்படியே வாயில் போட்டு கிரிஷ் மெல்லுவதைப் பார்க்கும் போது ப்ரியாவுக்குச் சற்று அருவருப்பாகவே இருந்தது. மீனம்பூர் கோவிந்த ராஜாச் சாரியுடன் நடந்த நீண்ட சந்திப்பு... மல்லிகாவின் கடிதங்களைப் பார்த்தபொழுது, அவர் முகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும்... தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொன்ன அறிவுரைகள்...

''கிரிஷ்! எல்லாப் பேப்பர்ஸையும் அவர் கிட்டக் கொடுத்தாச்சு. செங்கற்பட்டு டிஸ்டிரிக்ட் கோர்ட்லே ஃபைல் பண்ணணுமாம்! அதுக்கு வேண்டியதெல்லாம் உடனே செய்யறேன்னு சொன்னாரு.''

''அது சரி. அதெல்லாம் எவ்வளவு நாளாகும்? ஒனக்குத் தெரியும் ப்ரியா. எல்லாமே மம்மி பேர்லே இருக்கு. நம்ம பேருக்கு மாத்திக்காம ஒரு ரூபா கூடத் தொட முடியாது. இப்ப உடனே நம்ம கல்யாணம் நடக்கணும். நம்ம ஹனிமூன் போகணும். வீட்டுச் செலவையும் கவனிக்கணும்... ஆமா ப்ரியா நீ வீட்டுச் செலவை எப்படிச் சமாளிக்கிறே?''

''வீட்டுல எல்லாமே இருக்கு. அரிசி, கோதுமை, அனைத்துப் பொருள்களும். மம்மி எப்பவுமே ஒரு மாசத்துக்கு வேண்டிய தெல்லாம் வாங்கிப்போட்டுடுவாங்க. இப்பதானே மாசம் பொறந்தது. நோ ப்ராப்ளம். மாசா மாசம் செலவுக்குன்னு கொஞ்சம் பணம் கொடுப்பாங்க. அதுவும் இப்ப கையிலே இருக்கு.''

''ப்ரியா, டாக்டர் சொன்னாரு, நான் சில காகிதங்கள்ல கையெழுத்துப் போடணும்னு....''

''தேவையில்லே. வக்கீல் சாரி சொன்னாரு ஒருத்தர் போட்டாப் போதும்னு. ஆனா அஃபிடவிட்டுலேகையெழுத்து போடணும்!''

''அஃபி.... அஃபி.... என்னது அது?''

''அஃபிடவிட். ஏதோ லீகல் டாகுமெண்ட் போலத் தெரியுது. அது என்ன ஏதுன்னு வக்கீல்களுக்குத்தான் புரியும். அவர் ரெடி பண்ணி வெப்பாரு. நீங்க போய் ஸைன் பண்ணிட்டு வாங்க.''

''ஓகே... ஓகே. அவர் என்னிக்குச் சொல்றாரோ அன்னிக்கு ரெண்டு பேருமாப் போவோம். ப்ரியா! இன்னொன்று! நான் நாளைக்கு காலேலே டாக்டரோட வெளியே போறேன். சாப்பாட்டுக்கு வரமாட்டேன்.''

மறுநாள் காலை தன் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு ப்ரியா கோவிந்த ராஜாச் சாரியைப் பார்க்கச் சென்றாள். அவர் குளித்துவிட்டு பூஜையை முடித்துக்கொண்டு தம் ஆபீஸில் உட்கார்ந்து கொண்டார். ப்ரியாவைப் பார்த்த உடனே வெள்ளி டம்ளரில் காப்பி வரவழைத்தார்.

''நீங்க அந்தக் கடிதங்களைப் பார்த்தேளா?''

''அந்த லெட்டர்ஸ்தானே? ஒரு லைன் விடாம எல்லாத்தையும் படிச்சாச்சு. பாவம் படிக்கறதுக்கே ரொம்பக் கஷ்டமா இருந்தது்மா. பாவம் புண்யவதி பூட்டா.

வற்றாத ஊற்று!

என் தந்தையின் மிக நெருங்கிய நண்பர் நாம் பரத்தில் ஒரு மனை வாங்கி வீடு கட்ட உத்தேசம் செய்து ஆபீஸில் கடனுதவியும் வாங்கி விட்டார்.

வீடு முடிவதற்கும் கோடை வருவதற்கும் சரியாக இருந்தது. கிணறு எங்கு வெட்டுவது என்று முடிவு செய்து இருந்தாரோ அங்கு கிணறு வெட்ட ஆரம்பித்தார். கிணறு ஆழம் போய்க் கொண்டே இருந்தது. ஆனால் தண்ணீர் ஒரு சொட்டுக்கூடக் கண்ணில் படவே யில்லை.

இந்தக் கவலையுடன் அலுவலகம் சென்று வரும் போது மின்சார வண்டியில் எதிர் சீட்டில் அமர்ந்திருந்த இருவர் சத்ய சாயி பாபாவின் மகிமையைச் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். உடனே இவருக்குத் தாமும் போய் பகவானைத் தரிசனம் செய்து தம் குறையைச் சொல்ல வேண்டும் என்று தோன்றி உடனே புட்டபர்த்தி சென்று இரண்டு நாள் பூஜையில் அமர்ந்தார். சுவாமி இவரைக் கூப்பிட்டுத் தனியாகப் பேசினார்.

விஷயத்தைச் சொன்னதும் ஸ்ரீ பாபா அவர்கள் சிரித்துவிட்டு விபூதியைப் பொட்டலமாக மடித்து அதைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டுப் பிறகு தோண்டச் சொல்லி ஆசிர்வாதம் செய்து அனுப்பினார். இவரும் மிக்க மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்து அவ்வாறே செய்தார். என்ன அதிசயம்! எங்கு இருந்துதான் அப்படி ஊற்றுக் கிளம்பித் தண்ணீர் வந்ததோ தெரியவில்லை. அந்தக் கிணற்றில் எந்தக் கோடை வந்தாலும் ஜலம் வற்றுவதே இல்லை.

- எல். சாந்தி



ஹரித்துவாரில் கங்கையில் மிதந்து செல்லும் தீபங்களைப் போல் மனிதன் ஒளி மயமானவனாகவும் பாரமற்றவனாகவும் இருக்க வேண்டும். உலக ஆசைகள் என்ற பாரத்தைத் தூக்கி வைத்துக்கொள்ளக் கூடாது. சுமை கூடினால் தீபம் மூழ்கும், ஒளி மறையும்.

அம்மா ஆகணும்னு ஆசை. அதுக்கு. பகவான் கிருபை பண்ணலே. இவளுக்குக் கொழந்தே பொறக்கலே. குழந்தையே பொறக்காதுன்னு தெரிஞ்ச உடனே இவளுக்குச் சித்தப் பிரமை புடிச்சிடுத்து. தனக்கு ஒரு புள்ளே இருக்கான் – அப்படீன்னு இமாஜின் பண்ணிண்டிருந்திருக்கா. அப்படியெல்லாம் சில பொம்மனாட்டிகளுக்கு ஏற்படறதுண்டு. ஆச்சரியம் இல்லே. அதனாலே அவ பைத்தியம்னு பட்டம் கட்டிட முடியாது. பார்வதி என்ன கல்லே எறிஞ்சாளா, இல்லேரவிக்கையெக்கிழிச்சுண்டு ரோட்டிலே ஓடினாளா? ரெண்டும் இல்லே... என்னமோம்மா ப்ரியா நீ இதுலே நொழைஞ்சிருக்கே. ஜாக்கிரதையா இரு.''

''ஸார், ரொம்ப தேங்க்ஸ் ஸார். நீங்க இந்த அளவுக்கு உதவி பண்றதை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன் ஸார்.''

ப்ரியா வழக்கம் போல் கோவிலுக்குச் சென்றுவிட்டு வழியில் தேவையான சிலவற்றைக் கடையில் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். தன் தெருவில் நுழைந்த உடனே அவள் கண்ணில் பட்டது ஒரு கார். டாக்டர் ஆனந்துடையது. அந்த வண்டி தன் வீட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தது. டாக்டர் ஆனந்தும் கிரிஷும் முன் சீட்டில் உட்கார்ந்திருப்பதை அவளால் தெளிவாகவே பார்க்க முடிந்தது.

பங்களாவின் வாசற் கதவு பூட்டித்தான் இருந்தது. அதைத் திறந்து கொண்டுஉள்ளே சென்றவுடன் ப்ரியாவுக்கு ஒரு அதிர்ச்சி! ஹாலில் ஒரு தாழ்வான மேசையின் மேல் ஒரு காலி புட்டி. அதற்கருகில் இரண்டு கண்ணாடி டம்ளர்கள், பக்கத்தில் ஒரு தட்டு. அதில் சின்னச் சின்ன எலும்புகள். கிரிஷும் ஆனந்தும் தான் வெளியில் சென்றிருந்த போது உள்ளே வந்து குடித்துக் கும்மாளம் அடித்திருக்கிறார்கள். கிரிஷிடம் சாவி ஏது? ஒருவேளை அவளுக்குத் தெரியாமல் மாறு சாவி தயார் செய்து வைத்திருக்கிறானோ? அவளுக்குக் கழுத்தில் வியர்க்கத் தொடங்கியது.

“ப்ரியா.... ப்ரியா.... என்ன இருட்டுலேயே படுத்துக்கிட்டு இருக்கே. அதுவும் இங்கே. வாசல் கதவு வேறே தொறந்திருக்கு. என்ன ஆச்சு ஒனக்கு?'' கிரிஷ் ஹாலில் இருட்டில் நின்றுகொண்டு படபடப்புடன் பேசினான்.

''ஓ நீங்க வந்தாச்சா கிரிஷ். ஒடம்பெல்லாம் வலிக்குது. ஃபீவரிஷ்ஷா இருக்கு.''

அருகில் வந்து அவள் நெற்றியையும் தொட்டுத் தடவிப் பார்த்தான். ''சூடாத்தான் இருக்கு ப்ரியா. ஜொரம் வந்திருக்குன்னு நெனைக்கிறேன். நான் காலேலே நம்ம டாக்டருக்குப் போன் பண்றேன். அவர் வந்து பாக்கட்டும். ஏதாவது மருந்து கொடுப்பாரு சரியாப் போயிடும். நான் போய்ப் படுக்கறேன். நீ கதவெல்லாம் சாத்திட்டுத் தூங்கு.''



கருணை முகில் பாபா

இளங்கம்பன்

ஞானசொரூபமாய் நாளும்விளங்கிடும்
நல்லருளின் வடிவம்
மோனச் சிறப்பினில் மூழ்கி எழுந்துமே
முழுமைதரும் சோதி

வேதமொழிகளில் கீதம் இசைத்திடும்
வேகப்பெரும் ஆழி
ஓத உணரஉயிரில் அளாவிட
உரைகள்தரும் ஊற்று

தூக்கிய கைகளில் துயரை அழிக்கின்ற
தூய அருள் நிலவு
காக்கும் நலத்தினில் கனிந்தே
அழைத்துமே
கருணைபொழி மேகம்
நீதப்பே ரின்பத்தில் நீந்திக் களிக்கின்ற
நிறைவின் தனிக் காட்சி
பாதம் பணிவோர்பவங்களைப்
போக்கிடும்
பாபாஅருள் ஆட்சி

மறுநாள் காலை. எட்டு மணி. ஜன்னல் வழியாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது. ப்ரியா ஒருகம்பளியால் கழுத்து வரை தன்னை மூடிக் கொண்டு படுத்திருந்தாள். சில நிமிடங்களுக்கு முன்பு அங்கு வந்த டாக்டர் ஆனந்த் தம் தோல் பையைத் திறந்து தர்மா மீட்டரையும் ஸ்டெதாஸ் கோப்பையும் வெளியே எடுத்து அவளைச் சோதித்தார்.


''ப்ரியா டெம்பரேச்சர் ஒண்ணுமில்லே. பல்ஸ் ரேட்டுதான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு. இதுக்கெல்லாம் டென்ஷன்தான் காரணம். இதுல ரெண்டு டேப்லட்ஸ் இருக்கு. இன்னிக்கு ராத்திரி தூங்கறதுக்கு முன்னாடி ஒரு கிளாஸ் சூடான பாலோடு சாப்பிட்டுடு... நாளைக் காலேலெ எல்லாம் சரியாயிடும். இதே நேரத்திலே நான் நாளை வந்து பார்க்கிறேன். நத்திங்டு ஓர்ரி ப்ரியா.''

ப்ரியாவின் முதுகில் தட்டிவிட்டுப் பையை எடுத்துக் கொண்டு வெளியே சென்றார். கிரிஷ் டாக்டரைப் பின்தொடர்ந்தான்.

ப்ரியா மாத்திரைகளை வெளியே எடுத்தாள். அவள் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது. அவள் கையிலிருந்த இரண்டு மாத்திரைகள் அதே நிறம், அதே அளவு. அதே வாசனை. சந்தேகமில்லை. டாக்டர் ஆனந்த் பார்வதிக்குக் கொடுத்த அதே இரண்டு மாத்திரைகள். பார்வதி தன் கடைசி இரவில் சாப்பிட்ட இரண்டு. மாத்திரைகள்!

(தொடரும்)

என்னை நீ நம்பவில்லையா வேண்டாம். கடவுளை நம்பவில்லையா? பரவாயில்லை. உன்மீது உனக்கு நம்பிக்கை உண்டெனில் அதுவே போதும். ஏனெனில், உண்மையில் நீ யார்? உனக்குத் தெரிந்தாலும் தெரியா விட்டாலும் நீயும் தெய்வமே.



ரயில் பயணங்களில்

பத்மஜா

அவசரமாய் இயங்கும் ரயில் நிலையம்! மார்பை நிமிர்த்தித் தேங்காய் சீனிவாசன் முன்னே செல்ல, பெட்டியும் பையுமாய் விரைந்தார் ஒய். ஜி. மகேந்திரன் — கண்ணாடியை அடிக்கடி சரி செய்தவாறு.

திரும்பினார் தேங்காய்.

''ஏண்டா மகேந்திரா... கான்டாக்ட் லென்ஸ் போட்டுத் தொலைக்கக் கூடாதா? நிமிஷத்துக்கு நிமிஷம் ஸ்ட்ரிப்டீஸ் அழகியோட டிரெஸ் மாதிரி நழுவி நழுவி விழுதே தெரியல்ல...''

''ஐடியாவுக்கு தேங்க்ஸ் ஸார்! போட்டுட்டாப் போச்சு. ஆமாம் இப்ப நாம்ப போறது....''

''...ராமேஸ்வரத்துக்குத்தான்...!''

''எதுக்கு ஸார் அந்த இடத்தை செலக்ட் பண்ணீங்க?''

''இதப் பாரு பைசா செலவில்லாம அலேச்சிக்கிட்டுப் போறேன்னுதானே உன்ன அலேச்சிக்கிட்டு வந்திருக்கேன்...''

''ஆமா!''

''அப்ப வாயைப் பொத்திக்கிட்டு கம்ம்ம் முனு பின்னுலே வாயேன் என்கூடவே. பைசா பேச்சு வரக்கூடாது... ஆம்மாாாா''

தேங்காய் தம் வலது கையை விரைப்பாகத் தமக்குப் பின் பிரதேசத்தில் ஒரு கோடு கிழித்தார். — மகேந்திரன் வர வேண்டியதை அபிநயம் காட்டி!

மறுபடியும் கண்ணாடியை மேலே தள்ளிவிட்டுத் தலையை முன்னுக்குத் தள்ளி, கரத்தை அசைவு கொடுத்து நடந்தார் மகேந்திரன்.

டிக்கெட் கவுண்டர்.

''டேய் மகேந்திர பையா...! இந்தா புடி! ரூபா! ரெண்டு டிக்கெட்டு வாங்கு. ராமேஸ்வரம்னு வாயைத் தொறந்து கேளு.... மொனகாதே!''

மகேந்திரன் சற்று நிதானித்தார்.

''சார் கவுண்டர்ல எத்தனையோ பேர் நிக்கறுங்கபாருங்க. அத்தினி பேரையும்முந்திக்கிட்டு வாங்கிடறேன் பாருங்க...''

மெல்ல அவர்களை நெருங்கினர் மகேந்திரன்.

''என்ன சார்... இத்தனை பேர் நிக்கறீங்க? எங்கே போறீங்க?''

''இராமேஸ்வரத்துக்குத் தான்'' — கோரஸ் பதில்.

''பாவம் பண்ணீட்டீங்க போலிருக்கு. ஹூம். பாவம், அந்தோ பரிதாபம். ஏன் சார் 'ஏ' படமெல்லாம் பாக்கறீங்க? பாத்துப் பாத்துப் பாவத்தைக் கொட்டிக் கிட்டீங்களா! ஐயகோ பாவம்! சார் நீங்க யாருமே குழந்தைங்க நடிச்ச புரந்தரதாஸர் படம் பாக்கலேயா! ஹூம்! பார்த்திருந்தா இந்நேரம் இங்கே ஏன் சார் வந்து நிக்கறீங்க! செஞ்ச பாவம் ஆவியாய்ப் போயிருக்காதா?

''பரவாயில்ல. ஓர் ஆத்மாவுக்கு... அப்பாவி ஆத்மாவுக்கு உதவி செஞ்சாக்கூட பாவம் கொறயறதுக்கு சான்ஸூ இருக்கு!

''இப்ப என்ன பண்றீங்க... இந்த அப்பாவி ஆத்மாவை...அதாகப்பட்டது என்னைக் கொஞ்சம் முன்னே விட்டு டிக்கட்டு வாங்க விட்டு....''

அவர் தடுமாறியபடி சொல்ல, அவரை ஒரு மாதிரியான பார்வையோடு பார்த்தவாறு இடம் விட்டனர்.

''சரி சரி வாங்கிக்குங்க சார்....''

மகேந்திரன் சரக்கென்று புகுந்தார், கவுண்டருக்குள் கையை நீட்டினர்!

''சார் புண்யத்தைத் தரக் கூடிய டிக்கெட்டா ரெண்டு கொடுங்க சார்... ஆமாம் எவ்வளவு சார்ஜு?''

கவுண்டரில் இருப்பவர் சார்ஜைச் சொன்னதும்,

''அடேயப்பா! அவ்வளவா? என்ன சார் அநியாயமா இருக்கு!''



''அட போங்க சார்... ஒரு தேங்காயே திண்டிவனம் டிக்கட் விலை விக்குதாம்...''
திரும்பினார் மகேந்திரன்.

''சார்... தேங்காய் சார்... உங்களை அனுவசியமா வம்புக்கு இழுக்கிற மாதிரி எனக்குப் படறது. இவர் கிட்ட வாங்கிக்கறதை விட அடுத்த கவுண்டருக்குப்போவோமே வாங்க''
சரக்கென்று நடக்கப் பிடித்திழுத்தார் தேங்காய்.

''கருமம்... உன்னை இழுத்துண்டு வந்த துக்காகவே அடிஷனலா ரெண்டு தடவை இராமேசுவரத்திலே மூழ்கியாகணும் போல இருக்கு!
''ஏண்டா! அது வேறே லைன் கவுண்டராச்சே. அங்கே ஏதுடா ராமேஸ்வரம், ராகுகாலமெல்லாம்? இங்கேதான் வாங்கணும். வாங்கித் தொலை... இதுதான் கவுண்டர்!!!''

மகேந்திரன் சற்று நிதானமாய் ''டிக்கெட் வாங்கறது இருக்கட்டும் சார். ஜாதியே இருக்கக் கூடாதுன்னு சொல்றீங்களே ஒழிய அரசாங்கம் நடத்தற ரயில் நிலையத்திலேயே ஜாதி 'இருக்கு பாத்தீங்களா?'' என்றார்.
''என்னடா சொல்றே?''
''இது 'கவுண்டர்'தானே!''
தலையில் அடித்துக் கொண்டார் தேங்காய்.

''அடச்சீ! பேசாம வாங்கு டிக்கெட்டை அசத்தறுன். நேரம் காலம் பாக்காம..., உனக்குப் பின்னாடி நிக்கறாங்க வரிசையா.. கனட்டப் போறாங்க உன்னை....''
ஒரு உதறலோடு வாங்கினார் டிக்கெட்டை. வாங்கியதுமே படக்கென்று பறித்தார் தேங்காய்.
''இந்தா... உன் டிக்கெட்டு உன் ஜேபியிலே... என் டிக்கெட்டு என் ஜேபியிலே!''
அவரவர் தங்கள் தங்கள் டிக்கெட்டைத் தங்கள் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டனர்.
முன்னே விரைப்பாகத் தேங்காய் சீனுவாசன் செல்ல, ஒரு துள்ளலோடும், விறுக் விறுக்கென்றும் நடந்தார் மகேந்திரன்.
கம்பார்ட்மெண்ட் நெருங்கியதும்
''வண்டியிலே ஏறு சட்டுப் புட்டுனு...'' அவசரப்படுத்தினார் தேங்காய்.

''ஏன் சார் நாம்ப கொடுத்த காசுக்கு ரயில்வேக்காரங்க என்னென்ன வசதி செஞ்சிட்டாங்க?''
''என்னடா வேணும் உனக்கு?''
''இப்ப பாருங்க... என்னை மாதிரி இளவட்டங்கள் பிரயாணம் பண்றாங்கன்னு பக்கத்து கம்பார்ட்மெண்ட், அட்லீஸ்ட் ஒரு காலேஜ் கேர்ல்ஸ் கம்பார்ட்மெண்டாவது இருக்க வேண்டாமா? ஒண்ணித்தி



யும் காணோம். யார் யாரோ வயசானவங்க மத்தியிலே புராவல் 'பண்ணிக்கிட்டு, என்னத்தைச்சொல்ல... என்னத்தைச் செய்ய?''

''ஏண்டா மகேந்திரப் பையா எப்படி இருக்கு உடம்பு?''

''தெர்மா மீட்டர் இருந்தா பார்த்துச் சொல்வேன். கிடைக்க மாட்டேங்குதே. வசதி? வசதி?''

''தெர்மா மீட்டர், தாம்பாளம், தமுக்கு எல்லாம் கொண்டாறண்டா... ஏண்டா போறது ராமேஸ்வரம்டா! கண்ணு ரவுண்டு கேக்குதோ! வெவெவா... கோல்டை ஃபில் லான்னு பொறுத்தருளே... செக்பியா சொல்லுனே... இதுக்காகவே இரண்டு தடவை அடிஷனலா....''

''....வேறு சார். இந்த ரேட்ல மூழ்கி னிங்கன்னு கையிலிருக்கிற காசெல்லாம் கோல்டாரின்னுக்கே போயிடும் சார். விக்லை பாட்டில்ல வாங்கிக் கட்டுபடியாகாது. டின்லதான் வாங்கியாகணும்.''

''மூடு வாய... மூடு வாய....''

தேங்காய் தலையை மனுக்கென்றுநீட்டினார். அபாயக் குரலில்,

''டேய் டிக்கெட் கலெக்டர் வர்றான்! டிக்கட்டை எடுத்து வச்சுக்க, ரெட்டியா... ரெட்டியா....''

''ரெட்டி எதுக்கு சார்? செட்டியாராவே வச்சுக்குவோம்.''

தேங்காய் அவரைத் துருவி எடுப்பது போல் பார்த்தார்.

மகேந்திரன் பாக்கெட்டில் கையைவிட்டுத் துழாவினார். சட்டென்று உதறிக் கொண்டார். மறுபடியும் துழாவினார். கண்கள் குழப்பத்தோடு உருண்டன.

மறுபடியும் துழ்ழ்ழ்ழ்ழ்ழாவி துழ்ழ்ழ்ழாவி

''சார்...''

''என்னடா?''

''டிக்கெட் சார்....''

''என்னோடது என் ஜேபியிலே உன்னோடது உன் ஜேபியிலே....''

''.....இல்லியே சார்....''

''சரியாப் பாருடா சாம்பிராணி...! உன ருதேடா ஊதுபத்தி!''

''புதுசு புதுசாத் திட்டறீங்க; பரவா யில்லை...டிக்கெட்தான் எங்கே தெரியலியே!''

''ஏண்டா ஜேபி என்ன உடம்பு பூரா வுமா இருக்கு? எல்லா இடத்திலேயும் துழாவறே? ஆமா... உன் உடம்பு என்ன ஜிரோவின் உடம்புன்னு நினைப்பா? உடம்பு பூரா தொட்டுத் தொட்டுப் பாக்கறே?''

''சார் கம்மா இருங்க சார். தமாஷ் பண்ணுறீங்க.... டிக்கெட்ட காணோம்!''

தலையைப் பிய்த்துக்கொள்ளும் அளவுக்குத் தேடியும் — கிடைக்கவில்லை.

''என்ன பண்றது தலைவரே?''

''தலைவரா? என்னடாது பத்து ஸ்டெப் கபால்னு எகிர்றே? தலைவருன்னுட்டே! ஆபத்துன்னு உடனே தலைவரா? கொஞ்சம் அசந்தா, பினாட்பாரத்திலேயே எனக்குச் சிலை வச்சிடுவே போலிருக்கே!''

''பினாட்பாரத்திலே என்ன சார்... கம் பார்ட்மெண்ட் கம்பார்ட்மெண்டா வச்சி ஆரத்தி எடுத்திடறேன். ஏதாவது வழியச் சொல்லுங்க சீனியர் சார்...''

''அதென்னடா சீனியர்? என்ன விட அந்த படம் அதிகமா புக் ஆகியிருக்கு உனக்கு! அப்புறம் என்ன வாழுதாம் சீனி யர்!''

''அப்போ... தேங்காய் சார்...''

''தேங்காய உடை.

''முதல் ஐடியா! அதோ பாரு ஒரு ஸ்டே ஷன் கிட்டக்கபகபன்னு வந்துக்கிட்டிருக்கு. டிக்கெட் கலெக்டர் வர்றதுக்கு முன்னாடி நீ என்ன பண்றே தபால்னு வெளியே குதிச் சிடறே! எப்படி!''

சரக்கென்று எழுந்தார் மகேந்திரன்.

''என்னடா எழுந்து அப்படியும் இப்படி யுமா பாக்கறே?''

''ஒண்ணுமில்லே சார்! குதிக்கச் சொன் னீங்களே! ஒட் ஏதாவது நம்ப கம்பார்ட் மெண்ட்ல கிடைக்குமான்னு பாக்கறேன்... இருங்க சார் பார்த்துட்டு வர்ரேன்.''

நகர்ந்தார்.

பிடித்திழுத்தார் தேங்காய்.

''ஒப்பா வேறும் உனக்கு. லவ்வு சீன்ல ஒப்பா வச்சுக்கறே?இப்ப ஒரிஜினலாசெய்யி... குதி!''

தயக்கம். யோசனை. தயக்கம். முதல் விரலை மடக்கினார் தேங்காய்.

''இந்த ஐடியா ஒத்து வரலியா? வுடு! வுட்டுத் தொலே! அடுத்தது.



பாபா எச்சரிக்கிறார்!

பூனாவில் அந்திரக்காரர்கள் சமாஜம் ஒன்று இயங்கி வருகிறது. இந்தச் சமாஜத்துக்குப் பல ஆண்டுகளுக்குமுன் சத்திய சாயிபாபா வந்திருந் தார். அவர் பேச்சைக் கேட்க மக்கள் அந்த நாள் முழுவதும் நிறைந்திருந்தார்கள்.

பாபா பேச எழுந்தார். பேச்சைத் தொடங்கு முன்னர் ஓர் எச்சரிக்கை விடுத்தார்: ''இந்தக் கூட்டத்தில் ஒருத்தர் கெட்ட எண்ணத்தோடு வந்திருக்கிறார். உடனே எழுந்து வெளியே போய்விட வேண்டும். இல்லையென்றால், அவ ருக்கு எதுவும் நடக்கலாம்.''

கூட்டம் அமர்ந்து போயிற்று. சில விநாடி நேரத்தில் ஒருவர் எழுந்து, மெதுவாக நடந்து வெளியேறினார்.

பாபாவின் பேச்சில் மெய்மறந்திருக்கும் போது, கழுத்துச் செயினையோ, கைக் கடிகாரத் தையோ, பையில் இருக்கும் பர்ஸையோ, அடித் துப் போகும் உத்தேசத்தோடு வந்தவர் அவர் என்று பின்னால் தெரிய வந்தது.

-கே. பொன்னுசாமி

✖ அர்ஜுனன் போர்க்களத்தில் அறம்பாவம் விட்டுச் சரணாகதி செய்தான். போரே அவனுக்கும் புனித வேள்வியாயிற்று. தக்ஷன் அறம்பாவமே உருவாக வேள்வி செய்தான்; வேள்விச்சாலையே போர்க்களமாயிற்று.


உங்கள் கேசம் அடர்த்தியின்றி
சக்தியின்றி இருக்கிறதா? உங்கள்
கேசத்தைப் பக்குவப்படுத்தி அழகையும்
ஆரோக்கியத்தையும் அளிக்கிறது...
செழுமையான புரதப்போஷாக்கு நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
ஊட்டம் குறைந்த நிலையில் உங்கள் கேசம் அடர்த்தி
யின்றியும், சக்தியின்றியும், ஆரோக்கியமின்றியும்
காணப்படுகிறது.
பட்டுப்போன்ற, பொன் நிறமுள்ள வழவழப்பான
ஹேலோ எக் ஷாம்பூ செழுமையான புரத ஊட்டம்
நிறைந்த உத்தியின் மூலம் உங்கள் கேசத்தை சீராகப்
படியவைத்து அதற்குத் தேவையான எல்லா
ஊட்டங்களையும் அளிக்கிறது. உங்கள் கேசம் அழகாக
ஆரோக்கியமாக, அடர்த்தியாகத் திகழ்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூவின் செழுமையான நுரைவளம்
உங்கள் கேசத்தில் புகுந்து அதை பொலிவுடனும்
தூய்மையான பளபளப்புடனும் திகழச் செய்கிறது.
ஹேலோ எக் ஷாம்பூ...
அழகிய அடர்த்தியான ஆரோக்கியமான கேசத்திற்கு
EGG
Halo
SHAMPOO

HES. G. 4. TM

"டிக்கெட் செக்கர் வந்தா அலட்சியமா அவரு முகத்தைப் பார்க்காம 'சீசன் பாஸ்' அப்படீன்னு பட்டுன்னு சொல்லணும். வேறு பக்கமா முகத்தைத் திருப்பிக்கணும். ஏதோ ரயிலே விலைக்கு வாங்கின மாதிரி..."

மகேந்திரன் சந்தேகப் பார்வை வீசினார்.

"என்னடா முழிக்கிறே? இதுவும் முடியாதா?"

"ரயில் பெட்டி என்ன மாமியார் வீடா சார்... சமாளிக்கிறது கஷ்டம் சார். தில்லு வேணும் சார். முகராசியும் வேணும். நமக்கு அதுதானே எப்பவும் உதைக்குது!"

இரண்டாவது விரலை மடக்கினார்.

"கடைசி ஐடியா! இதை விட்டா வேற வழியில்லே. கவனமாக் கேளு. அந்த டிக்கெட் செக்கரு வர்றதுக்குப் பத்து நிமிஷம் முன்னாடியே நீ என்ன பண்றே, டகால்னு சீட்டுக்கு அடியிலே ஒளிஞ்சிக்கறே! நான் சொல்றவரைக்கும் மூச்சு விடக் கூடாது. இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவான். உள்ளாற ஒளிஞ்சிக்க. உம் சீக்கிரம்..."

"சார் நாகேஷுக்குச் சொல்ல வேண்டிய ஐடியா இது. உடம்ப நாலா மடிக்க அதை நாப்பதா மடிப்பாரு. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி இந்த ஐடியாவைச் சொல்லியிருந்தா செஞ்சிருப்பேன் சார்!"

"இப்ப உடம்பு ஊதிப்போச்சுங்கிறியா? யாரு ஊதச் சொன்னது? நாலு படம் புக் ஆயிட்டாப் போதும். கன்னு பின்னுன்னு கண்டதத் திங்க வேண்டியது!"

"சார் சொல்லுங்க சார். எனக்கா இந்த ஐடியா?"

"உனக்கும் இதுதான் உசிலே மணிக்கும் இதுதான்!"

சரக்கென்று தேங்காய் உட்கார்ந்திருந்த சீட்டுக்கடியில் புகுந்தார் மகேந்திரன். ஒரு பை, பெட்டி, இரண்டையும் லாகவமாக நகர்த்தி அழுக்கின் அந்தப்புரத்தில் —மகேந்திரன்!

அவரது கால் கொஞ்சம் வெளியே நீட்டிக் கொண்டிருக்க... "என்னடாது வாலு... தெரியுது" என்று அதை தெம்பி உள்ளே தள்ளி, மார்பை நிமிர்த்திக் கண்ணை மூடியபடி "சிவசிவா!" என்றார் தேங்காய்.

எதிர்பார்த்த ரயில் வில்லன் வந்துவிட்டார்.

ஆள் விடமாட்டான்... விடமாட்டான். கேட் பாயிலிருந்து ப்ரொட்யூசர் வரை கும்பிடற தெய்வங்களையெல்லாம் நினைத்துக் கொண்டார் மகேந்திரன்.

"டிக்கெட்!"

தபக்கென்று பாக்கெட்டில் கையைவைத்துச் சிறிது நேரம் அதனுள்ளேயே வைத்துக் கொண்டு, பின்பு சரக்கென்று நீட்டினார்.—

இரண்டு டிக்கெட்!

"என்னப்பா இரண்டு டிக்கெட்?" கனிரென்று கேட்டார் டிக்கெட் செக்கர். "இன்னொரு ஆள் எங்கே? யாரு?"

மகேந்திரனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இரண்டு டிக்கெட்டா? தலையைப் பிய்த்துக்கொண்டார். தம் பாக்கெட்டிலிருந்து எப்போது தவறியது? எப்போது எடுத்தார்? எப்படி எடுத்தார்? என் டிக்கெட் இவர் கையிலா? எப்போது எடுத்தார் தேங்காய்?

தான் ஜீனத் அமன் கனவுகளில் இறங்கிய போதா? பிளாட்பாரத்தில் தண்ணி பிடிக்கக் 'குனிந்த' பதினாறு வயது பருவத்தைப் பார்க்கும்போதா?

தேங்காய், வில்லன் முகத்தை மட்டும் பார்த்தபடி, கைகளைத் தம் கால்களுக்குக் கீழே காட்டினார் – சீட்டுக்கு அடியில்!

குனிந்தபடி பார்த்த டி. செக்கர்,

"அட... அவரா?... ஏன்யா அங்கே படுத்திருக்காரு?"

தேங்காய் கனைத்துக் கொண்டார்.

"சார்.. அவரு இருக்காரே... பெரிய்ய்ய சோஷியலிஸ்வாதி! அட! மேலே இருக்கிற கொசு, மூட்டைப்பூச்சி, இதையெல்லாம் மேலே உட்கார்றவ கவனிச்சுக்குவாங்க. கீழ இருக்கிற அதாவது தாழ்த்தப்பட்ட அந்தக் கொசுக்களுக்கும் மூட்டைப் பூச்சிகளுக்கும் யாரு சார் ஆதரவு? யார் சார் கவனிக்கிறாங்க? யார் சார் ரத்த தானம் செய்வாங்க? அட... அதுவும் வளரட்டும், வாழட்டும்னு நானும் நீங்களும் நினைக்கமாட்டோம்.... என் தோழர் இவரு... சோஷியலிஸ தோழரு... நினைக்கிறாரே! எப்பேர்ப்பட்ட எண்ணம்!"

"நம்ப முடியலே சார். இப்படியும் இருக்காங்களா? எம். பி. வி. ஏ. அவார்டு கொடுக்கணும் சார் இவருக்கு. கம்பார்ட்மெண்ட் கம்பார்ட்மெண்டா இவர் படத்தை மாட்டணும்... மாலை போடணும்..."

அதற்கு மேல்டிக்கட் செக்கர் நிற்கவில்லை. போய்க் கொண்டே இருந்தார்.

"மகேந்திரப் பையா... வாடா... இன்னும் என்ன அங்க!"

அழுக்கு மூட்டையாய் வெளியே வந்தார் மகேந்திரன்.

"என்ன சார், வேடிக்கையா பண்றீங்க, டிக்கெட்டை ஒளிச்சி வச்சிக்கிட்டு!"

"வேடிக்கை இல்லேடா... வந்ததுலே இருந்து நானும் உன்னே நோட் பண்ணி உஷார் பண்ணிட்டே இருந்தேன். நீ என்னடான்னு உதார் மேலே உதார் விட்டுக்கிட்டே இருந்தே. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். இப்படி ஒரு ஐடியா கிடைச்சுது. முதல்லே குனிடா... உன்னைப் பார்த்துக்கே நான் அடிஷனலா ரெண்டு தடவை ராமேஸ்வரத்திலே மூழ்கணும் போல..."

"சார் நீங்க எத்தினி தடவை வேணும்னாலும் மூழ்குங்க. மூழ்கிக்கிட்டே இருங்க. ஆனா அதுக்குப் பழியா உங்க கூட வந்த கடனுக்கு, பத்து மாசமானாலும் சரி, நான் குளிக்கவே போறதில்ல சார்! மூழ்கப் போறதில்லே சார்!"

"ஆபத்துடா பாவி! பத்து மாசமெல்லாம் மூழ்காம இருந்துடாதேடா... கர்ப்பமாயிடப் போறேடா!"

கம்பார்ட்மெண்டுகள் குலுங்கிக் குலுங்கி ஓடின. இல்லை, குலுங்கிக் குலுங்கிச் சிரித்தன!

✖ உலகின் பொருட்களைப் பெற உதவுவது தனம்; உயிரின் பொருளைப் பெற உதவுவது ஸாதனம் (ஸாதனை)



✕ அஞ்சலி தேவியையும், அவருடைய கணவரை யும் ஆசிர்வதிக்கிறார்.

அவனின்றி ஓரணுவும் அசையாது

திரையுலகில் பல சத்திய சாயிபாபா பக்தர்கள் உள்ளனர். அவர்களுள் ஸ்ரீமதி அஞ்சலி தேவி பாபாவுக்காகக் கோயிலை எழுப்ப உதவியவர்.

“இப்போது நீங்கள் அறிந்த பெரும்புக ழும் பெற்றுச் செல்வாக்கு நிறைந்த அஞ்சலி தேவி இல்லை நான். கலையுலகில் சம்பாதித்து, சேர்த்து வைத்த பணமெல்லாம் கரைந்து விட்டது. 'பூலோங் கே சாஸ்' என்ற இந்திப் படத்தை எடுத்ததில் ஒரு கோடிக்கு மேல் நஷ்டம். 'பணம் இல்லாதவன் பிணத்துக்குச் சமம்' என்பார்கள். பிணத்துக்காவது நாலு பேர் இருப்பார்கள், அழுவதற்கு. எங்களுக்கு அதுகூட இல்லை.''

''இவளைப் போய்ப் பார்த்தால் ஏதாவது உதவி கேட்டு விடுவாளோ என்று உற்றார் உறவினர் எல்லோரும் ஒதுங்கி விட்டார்கள். ஒரே ஒருவர்தான் கடவுள் தூதராய் வந் தார். நாகையா வாழ்க்கையின் மேடு பள்ளங் களை அறிந்தவர். அவர்தான், 'நீங்கள் சாயி பாபாவை அணுகுங்கள். உங்கள் கஷ்ட மெல்லாம் விலகிவிடும்' என்றார்.

''அந்தச் சமயத்தில் பாபா சென்னைக்கு வந்திருந்தார். அவரை நானும், என் கணவர் ஆதிநாராயண ராவும் போய்ப் பார்த்தோம். அவரைப் பார்த்து ஏதேதோ கேட்க வேண்டும் என்று நினைத்தேன். 'நான் யாருக் கும் துரோகம் செய்யவில்லை; கடவுள் பக்தி நிறைந்தவள்; திருமலையானுக்குச் சிறிய கோயில் கட்டி வணங்குகிறேன், அப்படிப் பட்டவளை இப்படியா திக்கற்றவளாய் விடு வது? இதுதான் கடவுளின் கருணையா' என்றெல்லாம் அழ வேண்டும் என்று நினைத் தேன். ஆனால் அவரைப் பார்த்ததும்–

''எதுவுமே தோன்றவில்லை!

''எதையுமே கேட்கவில்லை.

''அந்த தேஜோமயமான ரூப சுந்தரனைப் பார்த்தது பார்த்தபடியே இருந்தோம். கண்களில் கண்ணீர் வழிந்தபடி இருந்தது. நாங்கள் பூரண மௌனத்தில் திளைத்தோம்.

''அவரே பேசினார். நாங்கள் எதுவுமே சொல்லாமல்,எங்களுக்கு ஏன் இந்தக் கஷ்டம் வந்தது என்பதைக் கூறினார். யார் யாரெல் லாம் எங்களை ஏமாற்றினார்கள் என்பதை விவரித்தார். எல்லாம் சொல்லிவிட்டு, ''நீ எதற்கும் கவலைப்படாதே. இதெல் லாம் ஓடும் மேகங்களைப் போலத்தான். நிலைத்து நிற்காது. உன் கஷ்டமெல்லாம் கூடிய சீக்கிரம் விலகிவிடும்'' என்று ஆசீர் வதித்து ஒரு மோதிரத்தை வரவழைத்துக் கொடுத்தார். அந்த மோதிரத்தை இன்று வரையில் நான் போட்டுக்கொண்டு இருக்கி றேன்.

''இதுதான் சத்திய சாயி பாபாவுடன் எங் களுக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பு. அதற் கப்புறம் நான், என் மகனின் பெயரில் 'சின்னா ராவ் கம்பெனி'யை ஆரம்பித்தேன். 'சத்ய சக்குபாய்' படத்தை எடுத்தோம். சாயி பாபாவின் அருளில் அமோகமாய் ஓடியது. மேலும் பல படங்கள். அனைத்தும் வெற்றியே பெற்றன. என் வாழ்வில் நட மாடும் தெய்வம் அவர்தான்.

''இன்றைக்கு நாங்கள் அனைவரும் நல்ல நிலைமையில் இருக்கிறோம் என்றால் அதற்கு

✕ அஞ்சலிதேவியின் மகனுடைய கம்பெனியைத் தொடங்கிவைக்கிறார்.



பாபாவின் உபதேசம்

நான் முதன் முதலாக 1966ஆம் ஆண்டு புட்டபர்த்திக்குப் போய்ப் பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். அப்போது பகவான் அவர்கள் என்னைப் பார்த்து, "நீ ஏகாதசிக்கு ஏகாதசி செய்து கொண்டு வருகிறாயே, அது பஜனையே அல்ல, வெறும் ஷோ. அது அல்ல பக்தி" என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பல ஆண்டுகளாக ஏகாதசி அன்று சுமார் 4 மணி நேரம் நான் அஷ்டபதி பஜனை செய்து கொண்டு வந்திருக்கிறேன். மெதுவாகத்தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "பகவானே, எனக்குப் பக்திக்கு அருள் பண்ண வேண்டும்" என்று வேண்டினேன். அதற்கு அவர் "பக்தியைக் கடையில் வாங்கலாமா? கரும்பைப் பிழிவது போல் உள்ளத்தைப் பிழிய வேண்டும்" என்று கூறித் தமது திருக் கரத்தால் விபூதி வரவழைத்துக் கொடுத்தார்.



பகவான் கூறியதைப் பற்றி யோசனை செய்து கொண்டே குழம்பிய மனத்துடன் வெளியே உள்ள ஓர் ஹோட்டலில் போய் அமர்ந்து காப்பி,டிபனுக்கும் கூறிவிட்டு மற்றும் சிலருடன் அமர்ந்திருந்தேன்.

அப்போது சுமார் 75 வயது மதிக்கத்தக்க ஒருவர் எதிர் நாற்காலியில் வந்து அமர்ந்தார். என்னைப் பார்த்து "சித்ராவதி நதிப் பக்கம் தாங்கள் வர இயலுமா? ஒரு விஷயம் தங்களிடம் சொல்ல வேண்டும்" என்றார்.

யார் இவர்? இவர் சொல்லக் கூடிய விஷயம் என்னவாக இருக்கும் என்று சிந்தித்தவாறே, நானும், என்னைச் சேர்ந்தவர்களும் சித்ராவதி நதிக் கரையை நோக்கி நடந்தோம். அங்கு ஒரு பெரிய மரம். அதன் கீழ் ஒரு பாறை. அவர் அப்பாறைக் கல்லின் மீது சிரடி பாபாவைப் போன்று கால் மீது கால் போட்டு அமர்ந்து கொண்டார்.

தாம் சொல்லப் போவதைக் கவனமாகக் கேட்டுக்கொள்ளும்படி எனக்குக் கட்டளை பிறப்பித்தார். பக்தி என்பது பற்றி மிகவும் எளிய நடையில் சுமார் 4 மணி நேரம் விளக்கிக் கூறினார். அவர் கூறிய யாவையும் உபநிடதங்களின் சாரமும், பிரபோத சாரமும் என்று பின்னால் தெரிந்து கொண்டேன்.

அதன் பிறகு பலமுறை நான் புட்டபர்த்திக்குச் சென்று வந்திருக்கிறேன். சித்ராவதி நதிக் கரையில் அம்மரமும் இல்லை; பாறையும் இல்லை. அந்தப் பெரியவரையும் மறுமுறை பார்க்கவில்லை!

-கே. விஜயவல்லி

அவருடைய பூரண அருளே காரணம். அவருடைய கருணைக்குப் பாத்திரமான நிகழ்ச்சிகள் என் வாழ்வில் நிறைய நடந்து விட்டன.

"முதல் தடவை என் கணவருக்கு உடல்நிலை மிகவும் மோசமாகி, டாக்டர்கள் கைவிட்ட பிறகு, பகவானின் விபூதிப்பிரசாதம் ஒன்றிலேயே குணமானார். சில வருஷங்கள் கழித்து இரண்டாம் தடவையும் அதே போல ஆனபோது, டாக்டர்கள் தவறான மருந்துகளைக் கொடுத்து விட்டனர். செய்வதறியாது எனக்குத் தோன்றிய ஒரே வழி பகவானின் விபூதிதான். அதை எடுத்து நீரில் கரைத்து அவருடைய வாயில் புகட்டினேன்.

"அதுவரை ஒரு ஸ்பூன் தண்ணீர் கூட வாய்க்குள் செல்லாமல் கிடந்த அவர், மெதுவாகத் தேறினார். மறு நாள் காலையில் சரியாகப் பத்து மணிக்கு எனக்கு ஒரு கடிதம் வந்தது:

'இப்பொழுது உன் கணவருக்குப் பரவாயில்லையா? உன் மாங்கல்யத்துக்கு எந்தக் குறைவும் வராது. கவலைப்படாதே' — சாயி பாபா!

"அவருக்கு யார்சொன்னார்கள், என் கணவருக்கு உடல்நிலை சரியில்லை என்று? நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு கருணை மழை பொழியும் தெய்வத்தை என்னவென்று அழைப்பது?

"ஒவ்வொரு சிவராத்திரிக்கும் நான் புட்டபர்த்தி போய்விடுவேன். ஒரு தடவை நான் போக முடியாமல் போய்விட்டது. மிகவும் வருத்தத்தோடு, கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போனேன். அந்த லிங்க உருவின் நடுவில் எனக்கு மட்டுமில்லை, என் குடும்பத்தில் அத்தனை பேருக்கும் தோன்றினார் சாயி பாபா.

"இப்படி எவ்வளவோ சொல்லலாம்! எனக்குப் புனர் ஜென்மம் கொடுத்த அவருடைய கோயில் இங்கே இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அவருடைய பொன் மொழிகளாக சத்யம், சிவம், சுந்தரம் ஆகியவற்றுள் சத்தியத்துக்குத் தர்மக்ஷேத்ராவிலும், சிவத்துக்கு ஹைதராபாத்திலும் கோயில்கள் உள்ளன. சுந்தரம் இங்கு இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

"சாயி டிரஸ்ட் எல்லா ஏற்பாடுகளையும் செய்தது. எனக்குஇருந்தநிலங்களைத்தந்தேன். அதன் மேல் 'சுந்தரம்' கோயிலைப் பவித்ரமாக முடித்து விட்டார்கள்.

"நாங்கள் அவரைக் கேட்காமல் எதுவும் செய்வதில்லை. அவருக்குத் தெரியாமல் எதையும் செய்யவும் முடியாது. ஏனென்றால் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டும் தரிசனம் தருகிறார். அவருடைய கோட்பாடே 'சித்தி சாயியே சத்ய சாயி!' என்பதுதான்.

"'யார் யார் எது எதுவாக என்னை நினைக்கிறார்களோ, அந்த அந்த உருவில் அவர்களுக்கு நான் தரிசனம் தருவேன்' என்பது தான் அதன் பொருள்."

பேட்டி: மஞ்சுளா ரமேஷ்

கானே எவரும் விளக்க முடியாது. 'ஈசனருளை யதேஷ்டமாகப் பெற்றவர்களாலுமா விளக்க முடியாது?' என்றால், ஆமாம் அவர்களாலும் முடியாது. ஃபான், லைட், ஃபிரிட்ஜ் இவற்றின் சௌகரியங்களை ஒருவர் யதேஷ்டமாகப் பெற்றிருக்கிறார் என்பதால் அவரிடம் மின்சாரத்தை விளக்கச் சொல்லிக் கேட்டால் விளக்க முடியுமா என்ன?

புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதிமிக்க, ஆரோக்கியமான பற்கள்



அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்

ஒவ்வொரு சாப்பாட்டிற்கும் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு பலவீனிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

சுலபமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை



உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கி கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.




கோல்கேட்டின் நுப்பத்த, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.



பயன்: வசீகரிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிரான பாதுகாப்பு.

கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத்
தடுத்திடுங்கள் பற்சிதைவை
எதிர்த்திடுங்கள்



DC-G-74 TM








பரிவுடன்
பாபா










7

ஞானு ஊர் திரும்பிக் கொண்டிருந்தான். சதுர்த்தி முடிந்து பல நாட்கள் ஆகியும் அன்றுதான் அவனால் அக்கரை போக முடிந்தது.

பரிசலை அடைந்தபோது செல்விக்குப் பதிலாக வேறொரு ஆள் இருப்பதைப் பார்த்தான். பிறகுதான் அவன் செல்வியின் அப்பன் பொன்னன் என்று தெரிந்தது. செல்விக்கு உடம்பு சுகமில்லையாம்... அதான் இவன் வந்திருக்கிறான். செல்வியைப் பார்த்தும் ரொம்ப நாளாகி விட்டது!

இத்தனை நாட்கள் சதுர்த்தி விழா மும்முரத்தில் அவனால் எதையும் கவனிக்க முடியவில்லை.

சுகன்யாவுடன் தனியாகப் பேசவே சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இவன் அவளைப் பார்க்கும்போதெல்லாம் அவள் எங்கோ பார்த்துக் கொண்டிருப்பாள். முந்தி மாதிரி இப்போதெல்லாம் இவன் சந்தனம் அரைக்கும் போது இவன் எதிரில் உட்கார்ந்து அவள் பூமாலை தொடுப்பதில்லை.

இந்த ஜடத்துக்கு எந்தஉணர்ச்சியும்இல்லை என்று ஒதுக்கி விட்டாளோ?

இல்லை... சுகன்யா... எனக்கு உணர்ச்சி வந்து விட்டது! நான் கண்களை மூடிக்கொண்டிருந்தபோது என் எதிரில் காத்திருந்தாய்... இன்று எனக்கு விழிப்பு வந்து விட்டது.... நல்ல விழிப்பு! உன்னைக் காணவில்லை! எங்கே போய் விட்டாய் சுகன்யா? இனியும் நான் கண்ணாமூச்சி விளையாடப் போவதில்லை. சாஸ்திரிகளிடம் பேசி உண்மையை, அவர் மனசை நானே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் பேசுவார் என்று காத்திருந்தால் எனக்கு வயசு அறுபது ஆகிவிடும்! இதோ சுகன்யாவுக்காகப் புது கொலுஸு கூட வாங்கியாகி விட்டது!

அன்று மறந்துபோன கொலுஸு. இதற்காகவே விழா முடிந்ததும் அக்கரை போய் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்! இதைத் தருவது போல் தந்து...

ஜாடை....மாடையாகப் பேசி...

இதோ... பரிசல் காத்திருக்கிறது...

அன்றும் இதே மாதிரி ஓர் இரவு நேரத்தில் காத்திருந்த பரிசல் இன்றும் காத்திருக்கிறது.

இன்று செல்விக்குக்கூட உடம்பு சரியில்லையாமே! யார் ஓட்டி வந்திருப்பார்கள்...

இருட்ட ஆரம்பித்திருந்த நேரம்தான். ஒருவேளை பரிசல் காத்திருந்தால் போய் விடலாமே என்று ஓடோடி வந்தது நல்லது தான்!

ஞானு பரிசலில் ஏறினான்.

பரிசல் ஒரு முறை ஆடிப் பின் சரியாயிற்று.

பரிசலின்ஒரு மூலையில் போர்த்திக்கொண்டு உட்கார்ந்திருப்பது....

செல்வி.... இவளா?

''என்ன செல்வி... உனக்கு உடம்பு சரியில்லை.... அதனாலதான் நீ வரலைன்னு கார்த்தாலே உன்னோட அப்பா சொன்னாரே...''

செல்வி ஒருமுறை இருமினாள். நெஞ்சை அடைத்திருக்கும் கபம் 'கர்புர்' என்று சத்தம் போட்டது.

நெஞ்சில் அடைத்திருப்பது கபம் மட்டும் தானா?

''இப்போ கொஞ்சம் பரவாயில்லீங்க சின்ன ஐயா... நீங்க அக்கரை போயிருக்கீங்கன்னு என்னோட அப்பன் சொன்னதும் எப்படியும் பொழுது சாயறதுக்குள்ளே நீங்க ஆடு திரும்பிடுவீங்கன்னு தெரியும். அதான் நானே வந்தேன். இங்கே காத்திருந்தேன்.''

ஞானுவுக்குக் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

இப்படியும் ஒரு பெண்ணா! அவளுக்கு ஞானுவின் மீது எத்தனை அன்பு! பாசம்! உடம்பு சரியில்லாத நேரத்தில்கூட இந்த இரவு நேரத்தில்... குளிரில்... கம்பளியைப் போர்த்தியபடி காத்திருக்கிற இவளுக்கு எப்படி நன்றி கூறப் போகிறான்!

''இந்த ஜில்லிப்புக் காத்துலே... இத்தனை சளி...ஜுரத்தோட வந்திருக்கியே செல்வி!''

''நீங்களும்தான் இந்த ஜில்லிப்புக் காத்துலே இக்கரை வந்திருக்கீங்க!''

''எனக்குக் காய்ச்சலா!''

''இக்கரையிலே இந்தக் காத்துலே காத்திருந்தா நிச்சயம் நானைக்குக் காய்ச்சல் வந்துடும்.''

ஞானு பேசாமல் இருந்தான்.

குமரிப் பெண்ணே! குயிலாளே!

விமலா ரமணி

''பிள்ளையார் உற்சவம் எல்லாம் தடபுடலா நீங்க பண்ணினதா ஊர் ஜனம் பேசிக்கிட்டாங்க. பரிசல்லே அத்தனை ஜனத்தையும் இக்கரைக்கும் அக்கரைக்குமா சேத்துப்போ அத்தினி பேரும்சொல்லி வைச்சாப்பலே உங்களைப் பத்தித்தான் பேசிக்கிட்டாங்க...''

ஒரு நிமிட தயக்கத்துக்குப் பின் செல்வி தொடர்ந்தாள்...

''எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்துச்சு'' என்றாள்.

திடீரென்று இரும ஆரம்பித்தாள்.

சளி கர்புர்ரென்று இழுத்தது.

பரிசலைச் செலுத்த முடியாமல் திண்டாடினாள். கீழே விழப்போன அவளைச் 'சட்'டென்று ஞானு தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

''சின்ன ஐயா...'' — செல்வி அழுதபடியே பதறினாள்.

''இந்த நிலைமையிலே நீ வந்ததே தப்பு. பரிசலை ஓட்டறது அதைவிடத் தப்பு!

பல சந்தர்ப்பங்களில் உன்னால் பிறருக்கு உதவ முடியாமல் போகலாம்; ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் உதவும்படியான வார்த்தைகளைப் பேச முடியும்.

எனக்குத் தெரிஞ்சிருந்தா ஆரம்பத்திலேயே நான் தடுத்திருப்பேன்.''

''இனிமே இதைத் தடுக்க முடியாது. சென்னய்யா... இப்போ நாம நட்டாத்துலே இருக்கோம்! இக்கரைக்கோ அக்கரைக்கோ எங்காவது போகத்தான் வேணும்.''

செல்லி தன்னைச் சமாளித்தபடி பரிசலை ஓட்டவாரம்பித்தாள்.

திடீரென்று ஞானுவுக்கு நினைவு வந்தது.

நடேச சாஸ்திரிக்கு உடம்பு சரியில்லை என்று ஏதோ மருந்து வாங்கிக் கொண்டு வந்தானே.. அந்தப் பிள்ளில் இவளுக்கும் ஒன்று தந்தால் என்ன?

அவருக்கும் இதே மாதிரி இருமல், சளிதான்!



ஞானு மெல்லத் தன் கைப் பையில் கைகளை விட்டு மாத்திரையைத் துழாவினுன்.

கடை வீதியில் அவன் வாங்கிய கொலுஸு 'ஜல்ஜல்' என்றது.

''அதென்ன சின்னய்யா பைக்குள்ளார சத்தம்?'' — செல்வி கேட்டாள்.

''ஒண்ணுமில்லே...'' — ஞானு தடுமாறினுன்.

''சுகன்யாஏதோகொலுஸுகேட்டிருந்தா! வாங்கிண்டு போறேன்....''

செல்வி பேசாமல் இருந்தாள். அவனும் தான் ஒரு கொலுஸு வாங்க தான் பார்க்கிறுன் பார்க்கிறுன்... முடிவதில்லே.

அக்கரை சேர்ந்தால் காத்திருக்கும்ஆட்கள் இக்கரை வந்தால் ஒண்ணுமே இல்லாத கிராமம்.

சுகன்யாவுக்குக் கொலுஸு வாங்கித் தரும் அளவுக்குச் சொந்தம் வளர்ந்து விட்ட பிறகு இவன் தன் இதயத்தின் சதங்கைகளை உடைத் தெறிய வேண்டியதுதான்...

''சின்ன ஐயா கோவிச்சுக்க மாட்டீங் களே....''

''சொல்லு செல்வி... ஆ... இந்தா... பில்ஸ் கிடைச்சுடுத்து... இந்தா, வாயிலே போட்டு அடக்கிக்கோ. இருமல் நின்னுடும்.''

''மூச்சே நிக்கட்டும்...'' என்று நினைத் தாள் செல்வி. ''அந்தக் கொலுஸை நான் பார்க்கலாங்களா?''

''தாராளமா... இதுலே என்ன கோபம்!''

ஞானு அந்தப் பொட்டலத்துடன் அவ ளிடம் கொலுஸைத் தந்தான்.

ஆமாம்... இதே மாதிரி கொலுஸுதான் சுகன்யா அணிவாள்... இவள் கூட இப்படித் தான் ஒன்று வாங்க வேண்டும் என்று ஆசைப் பட்டாள்! இவளுக்கு யார் வாங்கித் தரப் போகிறுர்கள்! ஆசையாக அந்தக் கொலுஸை நிலா வெளிச்சத்தில் திருப்பித் திருப்பிப் பார்த்தாள் செல்வி.

''எனக்குக் கூட இதே மாதிரிதான் ஒரு கொலுஸு வாங்கணும்னு ஆசை...''

''அடுத்த தடவை நான் வேணு வாங் கிண்டு வரேன்.''

செல்வி விரக்தியாகச் சிரித்தாள்.

''வேண்டாங்க... இனிமே வேண்டாம்.''

''ஏன் செல்வி?''

மனசே சத்தம் போடும்போது கொலுசு சத்தம் வேறு? செல்வி பேசவில்லே.

''செல்வி ஊர்க்காரங்க சீக்கிரம் பாலம் கட்டணும்னு மும்முரமா இருக்காங்க.''

''கட்டட்டும்.''

''உன்னேட பொழைப்பு?''

''என்னேட வாழ்க்கை, பொழைப்பு, எல் லாத்துலேயும் மண் விழுந்திடிச்சு!''

''நீ என்ன சொல்றே?''

''ஒண்ணும் சொல்லலே.''

சற்று நேரம் மௌனம்.

''அப்படியே பாலம் கட்டிஞலுகூட நான் மட்டும் இந்த ஆத்தை உன்னேட பரிசல்லேதான் கடப்பேன்....''

''அப்போ கண்டிப்பா இந்தச் செல்வியும் இந்தப் பரிசலோட காலமெல்லாம் காத் திட்டிருப்பா... இது சத்தியம் சின்னேய்யா.''

''சின்ன விஷயங்களுக்கெல்லாம் சத்தியம் பண்ணுதே செல்வி. அது ரொம்பத் தப்பு.''

''இதுவா சின்ன விஷயம்?''

செல்வி சிரிக்க ஆரம்பித்தபோது இருமல் வந்தது. ஞானு கொடுத்த அந்த பில்லை வாயில் போட்டுக் கொண்டபோது...?

அதன் காரம் உமிழ்நீர் வழியாகத் தொண் டைக்குள் இறங்கியபோது நெஞ்சின் கனம் கொஞ்சம் குறைந்த மாதிரி இருந்தது.

ஞானுவை என்ன என்னவோ கேட்கவேண் டும் என்று நினைத்தவள் எதையுமே கேட்க முடியாதபடி பேசாமல் போய்விட்டாள்.

அவளுக்குக் கேட்டதெல்லாம்...?

அந்தக் கொலுஸின் சலங்கைச் சப்தங்கள்!

(தொடரும்)

"ஆடாமல் நில்!"

எனக்கு நரம்புத் தளர்ச்சியின் தொந்தரவு ஏற்படலாயிற்று. முதலில் கால்கள் நிற்கமுடியாமல் தள்ளாடின. தலை சுற்றலும் மார்பு படபடப்புமாக ஆரம்பித்துச் சிறுகச் சிறுகப் படுக்கையிலேயே தள்ளிவிட்டது. அலோபதி, ஹோமியோபதி என எல்லாச் சிகிச்சையும் ஆனது. ஒன்றும் பயனில்லே. புட்டபர்த்தி போய்த் திரும்பிய என் தாயார் என்னே ஸ்வாமியிடம் அழைத்துச் செல்லவேண்டும் எனத் திட்டமிட்டார்.

ஸ்வாமி ஊட்டியில் இருந்ததால் என்னைப் படுத்த படுக்கையாக அங்கே எடுத்துச் சென் ருர்கள். தூரத்தில் ஒரு மரத்தடியில் படுத் திருந்த என்னே இருவர் நடத்திச் சென்று வராந் தாவில் உட்கார வைத்தனர். என் உடல்நிலே உட் காரும் அளவு தெம்போடு இருக்கவில்லே. துவண்டு துர்ப்பலமாக இருந்த என்னே இருவர் சாய்த்து வைத்துக் கொண்டிருந்தும் தத்தளித்துக் கொண்டிருந்தேன். இந்த நிலேயில் ஸ்வாமி வெளியே வந்து பத்துப் பேரோடு எங்களேயும் அழைத்தார். உள்ளே போய் அரை வட்டமாக எல்லோரும் நின்றபோது இயலாமல் தள்ளாடி னேன். யாருடனே பேசிக் கொண்டிருந்த ஸ்வாமி திரும்பிப் பார்த்து, ''ஆடாமல் நில்'' என்ருர். அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டு என் கால்கள் நின் றன. அதிசயத்தோடு என் முறை வருமளவும் நின்றிருந்தேன். ஸ்வாமி என்னேயும் என் தாயா ரையும் மாடிப் படியில் நிற்க வைத்து அழகிய தமிழில் என் கஷ்டங்களைத் தாளுகவே விளக்கிச் சொல்லி, சிவபெருமானின் ஒரு பெண்டன்டை வரவழைத்துக் கொடுத்தார். அன்று தேற ஆரம் பித்து இதோ இந்த 15வருடங்களில் ஆரோக் கியம் மிக்கவளாக வாழ்கிறேன். எல்லாம் அவர் கருணே.

-வேதம் சாரி



நான் செய்வது அத்தனையும் உங்களுக்காகத்தான், எனக்காக அல்ல. ஆம், 'எனது' என்று சொல்லிக் கொள்ள எனக்கு என்ன இருக்கிறது - உங்களேயன்றி?



Sista's-UPL-30A-81-TAM



ஓய்வு

உமா சந்திரன்

வேலையிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாதம் ஆகப் போகிறது. இன்னமும் பிரிவு பசாரத்துக்கு ஏற்பாடு செய்யாமல் இருக்கிறார்களே! என்ன ஆபீஸ், என்ன நண்பர்கள்!

ஒரு வருஷம் இரண்டு வருஷமா அந்த ஆபீசில் வேலை பார்த்திருக்கிறார்? முப்பத்தைந்து வருஷம்! இளமைப் பருவமெல்லாம் அந்த ஆபீசுக்கே அர்ப்பணமாகி விட்டது.

ஓய்வு பெறும் நாளன்று தடபுடலாகப் பிரிவுபசாரம் நடத்தி ஆபீஸ் காரிலேயே வீடு வரைக்கும் கொண்டு வந்து விடுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தார். சிப்பந்திகள் சங்கச் செயலாளர் வேதகிரி ஒரு நாள் அவரிடம் வந்து அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவும் செய்தாரே! ''இந்த மாசத்தோட உங்க சர்வீஸ் முடியறதில்லையா? கடைசி நாள் அன்னிக்கு உங்களுக்கு ஃபேர்வெல் பார்ட்டி குடுக்கிறதா இருக்கோம். உங்களுக்குச் சௌகரியம்தானே?''

''என்னோட சௌகரியத்தைப் பத்திக் கேட்கக் கூட வேணுமா?'' என்று சொல்லத்தான் துடித்தார் ரகுபதி. ஆனால் ''ஃபேர்வல் பார்ட்டியா! அதெல்லாம் எதுக்கு வேதகிரி!'' என்று இழுத்தார்.

''நல்லா இருக்கே நீங்க பேசறது! எத்தனை வருஷம் சர்வீஸ் செய்திருக்கீங்க! ஒரு பார்ட்டி கூட இல்லாம வீட்டுக்கு அனுப்பிடுவமா உங்களை?'' என்று கூறிய வேதகிரி, ''நம்ம ஜி.எம்.மைப் பார்த்துப் பேசிட்டு இதைப் பற்றிக் கன்ஃபார்ம் பண்ணறேன்'' என்று உறுதி அளித்து விட்டுச் சென்றான்.

மாதக் கடைசி நெருங்கி வந்து கொண்டிருந்தது. ஃபேர்வெல் பார்ட்டிக்கான எந்த நடவடிக்கையும் வேதகிரி எடுத்ததாகத் தெரியவில்லை.

அந்தக் கடைசி நாளும் வந்தது. பிற்பகல் உணவு நேரம் வரைக்கும் வேதகிரி தென்படவேயில்லை.

மூன்று மணி சுமாருக்கு வேதகிரி ஓட்டமும் நடையுமாக அவரிடம் வந்தான். ''என்ன ரகுபதி! ஜி. எம். மைப் பார்த்திட்டு வந்திட்டீங்கல்லே?'' என்றான் பரபரப்புடன்.

''இல்லே, இனிமேல்தான் பார்த்துப் 'போயிட்டு வரேன்'னு சொல்லிக்கணும்.''

''சீக்கிரம் பார்த்திடுங்க. நாலு மணிக்கு அவர் ஏர்போர்ட்டுக்குப் போயிடறாரு. திரும்பி வர ஒரு வாரம் பத்து நாள் ஆனாலும் ஆகலாம்.''

''அடடா! அப்போ...''

''உங்க ஃபார்வெல் பார்ட்டியில ஜி.எம். சார் கலந்துக்க முடியாதேன்னு கவலைப் படாதீங்க. பார்ட்டியை அடுத்த மாசத்திலேயே வெச்சுக்கலாம்னு ஜி. எம். சொல்லிட்டாரு. 'அவ்வளவு வருஷம் சர்வீஸ் பாத்தவரு. அவர் பார்ட்டியில் நான் கலந்துக்கணும் கட்டாயம்' — அப்படின்னு எவ்வளவு உள்ளன்போடு சொன்னார் தெரியுமா! நீங்க பார்த்துக் கடைசி வணக்கத்தைத் தெரிவிச்சிட்டு வந்துருங்க. ரொம்ப சந்தோஷப் படுவாரு!'' — வேதகிரி அவசரம் அவசரமாக வேறு வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டான்.

ரகுபதியின் உற்சாகமெல்லாம் ஒரேயடியாக வறண்டு போய்விட்டது.

ஏதோ பைலில் மூழ்கியிருந்த ஜி.எம். யாரோ எதிரே வந்து நிற்பதை உணர்ந்ததும், தலை நிமிர்ந்தார்.

''எஸ்?''

''இன்னியோட என் சர்வீஸ் முடியறது சார். ரிடையர் ஆயிடறேன். அதுக்காகத்தான் சார்கிட்டே சொல்லிக்கிட்டுப் போகறதுக்காக....''

''உங்க ரிடையர்மெண்ட் அடுத்த மாதம் தானே தாமோதரம்?''

''நான் தாமோதரம் இல்லே சார். தாமோதரம் தஃப்தரி.''

''நீங்க?''

''நான் செக்ஷன் ஆபீஸர் ரகுபதி!''

''ஓ! ஐ ஆம் சாரி. நீங்க இன்னிக்கே ரிடையர் ஆயிடறீங்களா?''

''எஸ் சார்.''

''லக்கி மேன்! உங்களைப் பார்த்து நான் பொறாமைப்படறேன்.''

''பொறாமையா? எதுக்கு ஸார்?''

''ஆபீசைப் பத்திக் கவலைப்படாமல் நிம்மதியா இருக்கப் போறீங்களே!''

''நிம்மதியா? எனக்கா? — சார், என் பொண்ணு கலியாணத்துக்கு நிக்கறா. பையனுக்குப் படிப்பு முடிய இன்னும் ஒரு வருஷம் பாக்கி இருக்கு.''

உபயோகமான காரியங்களில் ஈடுபடு. ஆனால் பணத்தை அதி ஆசையுடன் பற்றாதே. ஒரு தர்மகர்த்தாவைப் போல் கடவுள் சார்பில், அவருக்குப் பிடித்தமான, அவர் சம்மதமுள்ள காரியங்களுக்காகப் பணத்தை உன் பொறுப்பில் வைத்துக்கொள்.

''ஸோ வாட்! வெறும் கையோட நாங்க உங்களை வீட்டுக்கு அனுப்பப் போறதில்லேயே! ப்ராவிடண்ட் பண்ட், க்ராசுவிட்டி....''

''ஏதோ வரும் சார். ஆனா அவ்வளவும் என் பொண்ணு கலியாணத்திலேயே அடிபட்டுப் போயிடுமே!''

''நான்சென்ஸ்! முப்பது வருஷ சேமிப்பு அவ்வளவையும் மூணே நாள்ல ஊதி எறியப் போறீங்களா? சுத்தவேஸ்ட்!''

''வேஸ்ட்தான் சார். எனக்கும் தெரியத்தான் தெரியறது. ஆனா பொண்ணைக் கரையேத்தி ஆகணுமே!''

''எல்லாத்தையும் கலியாணத்திலே வாண வேடிக்கை பண்ணிட்டு அப்புறம் என்ன செய்யப் போறீங்க?''

''வேறே ஏதாவது வேலை தேடிக்க முயற்சி செய்தாகணும்...''

''வேலையா? இந்த வயசிலயா? நோ நோ! மிஸ்டர் தாமோதரம்...''

''ரகுபதி.''

''சாரி. மிஸ்டர், வேலை கிலேன்னு வெட்டியா உடம்பைக் கெடுத்துக்காதீங்க. நிம்மதியா வீட்டில உக்கார்ந்து ஓய்வு எடுத்துக்குங்க.''

''ஓய்வெடுத்துக்கலாம்தான். ஆனா வயத்தில ஈரத் துணியைக் கட்டிக்கிட்டா எனக்கு ஜலதோஷம் புடிச்சுக்குமே!''

''என்ன சொல்றீங்க?''

''அதெல்லாம் உங்களுக்குப் புரியாது சார். நான் வரேன். இத்தனை வருஷமும் ஆபீஸ் என் விஷயத்தில் காட்டின பரிவுக்கெல்லாம் என்னோட நன்றி.''

வலுவில் கையை நீட்டி ஜி. எம். மின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு ரகுபதி வெளியே வந்தார்.

ஜி.எம்.மைத் தவிர ஆபீஸில் பெரிய தலைகள் ஏழெட்டு. பிறகு சமநிலைச் சிப்பந்திகள். மற்ற சாதாரண ஊழியர்கள். ஒவ்வொருவரிடமும் போய், 'நாளையிலிருந்து நான் நடுத் தெருவில நிக்கப் போகிறேன்' என்று பறைசாற்றிக் கொள்வது போல்... ஒவ்வொருவர் வாயிலிருந்தும் அனுதாபச் சூள் கொட்டல்கள். 'மேல்கொண்டு என்ன செய்யப் போறீங்க' என்று கேள்விகள். ஒரு வழியாக அந்த வேதனையிலிருந்து மீண்டு வருவதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது.

சோர்ந்த நடையும் வெறும் கையுமாக வீட்டுக்குள் வந்த கணவரைப் பார்த்ததும் ஜானகி திகைத்தாள்.

''என்னங்க இப்படி வர்றீங்க! உங்க ஆபிசில பார்ட்டிகிர்ட்டி ஒண்ணும் கிடையாதா?''

''நீ வேறே வேண்டாத கேள்வி யெல்லாம் கேட்டு என் வயித்தெரிச்சலைக் கிளப்பாதே. நான் நொந்துபோய் வந்திருக்கேன்'' என்று சொன்ன ரகுபதி, ஆயாசத்துடன் ஈஸிச் சேரில் சாய்ந்தார்.

தமக்குச் சேர வேண்டிய சேமிப்புத் தொகை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் சாக்கில் இரண்டு மூன்று நடை ஆபீசுக்குச் சென்று வந்தார். வேதகிரி



கண்ணில் பட்டால் பார்ட்டியைப் பற்றி ஏதாவது சொல்வான் என்று எதிர்பார்த்தார். ஆனால் வேதகிரி அவரைப் பார்த்தும் பாராதது போல் வழக்கமான அவசரத்துடன் தலைமறைவாகிக்கொண்டிருந்தான்.

ஒருதடவை மாட்டிக் கொண்டபோது வேதகிரி முத்தை உதிர்த்தான் — ''ஜி.எம். ஸார் இன்னும் திரும்பி வரலே. ஸ்டேட்ஸிலிருந்து அப்படியே ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் எல்லாம் சுத்திட்டு அடுத்த வாரம் தான் திரும்புவார் போல இருக்கு. அவர் வந்ததும் உங்க பார்ட்டியைப் பற்றி அவர் சௌகரியத்தைக் கேட்டுக்கிட்டு உங்களை வீட்டிலேயே வந்து பார்க்கிறேன்'' என்றான்.

அவன் அப்படிக் கூறியது ரகுபதிக்கு இன்னும் சங்கடமாகி விட்டது. எந்த நிமிஷமும் வேதகிரி தம்மைப் பார்க்க வந்து விடுவான் என்ற நினைப்பில் கட்டிப் போட்டாற்போல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார்.

''ஏங்க, நம்ம சரஸ்வதிக்குப் பொருத்தமான ஜாதகம் ரெண்டு மூணு வந்திருக்கே! அவங்கவங்களைப் போய்ப் பார்த்து மேல் கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டாமா?'' என்று ஜானகி ஞாபகப் படுத்தினாள்.

''கொஞ்சம் பொறு ஜானகி. நான் எங்கேயாவது கிளம்பிப் போயிருக்கும்போது வேதகிரி வந்து நிப்பான். இந்தப் பார்ட்டி விஷயம் ஒரு வழியா தீர்ந்துடட்டும். அப்புறம் நான் எங்கே வேணும்னாலும் அலையத் தயாரா இருக்கேன்'' என்றார் ரகுபதி.

ஆபீசுக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேதகிரி, ரகுபதியே நேரில் வந்திருப்பதைக் கண்டதும் வியப்புடன் வெளியே வந்தான்.

''வாங்க மிஸ்டர் ரகுபதி! நானே உங்க வீட்டுக்கு வரணும்னு இருந்தேன்...''

''அப்படியா? பார்ட்டிக்குத் தேதி நிச்சயம் செய்தாச்சா?'' என்று ஆவலுடன் கேட்டார் ரகுபதி.

''நிச்சயமானமாதிரிதான். இந்த மாசம் முப்பத்தொண்ணும் தேதி.''

''ஏன் அப்படி மாசக் கடைசிக்குத் தள்ளிட்டீங்க?''

''ஜி எம். சாரோட ஐடியா. தலைமைப்தரி தாமோதரம் அன்னிக்குத்தானே ரிடையர் ஆகறாரு! ரெண்டு பேருக்கும் சேர்த்து ஒரே பார்ட்டியா வச்சுடலாம்னு....''

ரகுபதியின் முகம் விழுந்துபோயிற்று.

அக்டோபர் கடைசி நாள். பருவமழை பலத்த அடைமழையாகக் கொட்டிக்கொண்டிருந்தது.

''இந்த மழையில் பார்ட்டி எங்கே இருக்கப்போகுது! எதுக்கும் ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்திடறேன்'' என்று கூறியபடி ரகுபதி குடையை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

ஆனால் அடாது மழை பெய்தாலும் விடாது பார்ட்டியை நடத்தியே தீர்வது என்று முடிவு செய்திருந்தார்கள் ஆபீசில். 'தலைமைப்தரி தாமோதரத்துக்கு யூனியன்லே நல்ல செல்வாக்கு. பார்ட்டி வைக்காம வீட்டுக்கு அனுப்பினா ஆபீசையே ரெண்டாக்கிடுவான்!'

தாமோதரத்தின் ஆதரவாளர்களும் அனுதாபிகளுமே அதிகமாக இருந்தார்கள் அந்தப் பார்ட்டியில். அடுத்தடுத்துப் பேசியவர்களும் தாமோதரத்தின் குணநலன்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். ரகுபதியைப் பற்றி ஒரு வார்த்தைகூட யார் வாயிலிருந்தும் வரவில்லை. மாலை மரியாதையும் மற்ற மரியாதைகளும் தாமோதரத்துக்குத்தான் நடந்தது. வேதகிரி ஜி.எம்மின் காதில் கிசுகிசுத்த பிறகுதான் அவருக்கு ரகுபதியின் நினைவு வந்தது. கேட்பாரற்றுக் கிடந்த ஒரு மாலையை எடுத்து அவர் கழுத்தில் போட்டார்.

ஓய்வு பெற்றுப் போவோர் தங்கள் ஞாபகார்த்தமாக ஆபீஸ் தோட்டத்தில் ஒரு மரம் நடுவதென்ற சம்பிரதாயம் சமீபகாலமாக நடைமுறையில் இருந்து வந்தது. கொட்டும் மழையில் மரம் நடுவதாவது! ஆனால் தாமோதரம் தவறாக எடுத்துக் கொண்டு விடக் கூடாதே! வேதகிரி குடை பிடிக்கத் தாமோதரம் ஒரு மாங்கன்றை நடும் வைபவம் கைதட்டலுக்கிடையே நிறைவேறியது.


ரகுபதியின் பங்குக்கு ஒரு வேப்பங்கன்று. தம் மனநிலைக்குப் பொருத்தமானதுதான் என்று நினைத்துக் கொண்டார். மழையில் நனைந்தவாறே சேற்றைக் கிளறி அந்தக் கன்றை நட்டுவிட்டு போர்டிகோவின் பாதுகாப்பை நாடி ஓடி வந்தார்.

தாமோதரத்தை வீட்டுக்குக் கொண்டு விடுவதற்காக ஆபீஸ் கார் தயாராக நின்றிருந்தது.

ரோகிணியில் பிறந்தவன்!

அப்பொழுது என் கடைசிப் பிள்ளையை நான் கல்யாணி ஆஸ்பத்திரியில் பிரசவித்திருந்த நேரம். அவன் பிறந்த நட்சத்திரம் ரோகிணி. எதனாலேயே என் அண்ணனை நாங்கள் காலனிடம் பறிகொடுத்துவிட்டு மீளாத் துயரில் ஆழ்ந்திருந்தோம். மீதி இருப்பது எனக்கு ஒரே தம்பி. என் பிள்ளை ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்ததால் நான் மிகக் கலங்கிப் போனேன். என் சிநேகிதிகளும், உறவினர்களும் என்னை எவ்வளவோ சமாதானம் செய்தும் நான் கேட்கவில்லை. நான்காம் நாள் ஓர் அற்புதம்!

என் கனவில் ஸ்ரீ பாபா ஒளிமயமான முகத்துடன் தோன்றி, ''எதற்கும் கவலைப்பட வேண்டாம்; எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்'' என்று ஆதரவுடன் கூறினார். இப்படிக் கூறிவிட்டுச் சட்டென்று மறைந்து விட்டார். நிஜமாகவே என் தெய்வம் வந்து எனக்கு அருள் செய்திருக்கிறார். அதன்பிறகு நான் அழவில்லை. என் குழந்தைக்கு ஸ்ரீ பாபாவின் திருநாமத்தையே - ''சத்திய நாராயணன்'' - என்ற பெயரையே சூட்டினோம். -வசந்தி ஜெயப்ரகாஷ்



நீ எப்படிப் பயனுள்ள வாழ்க்கை வாழ வேண்டும், எப்படி சாதனைகள் புரிந்து மறைய வேண்டும் என்று காட்டவே நான் வந்துள்ளேன். நீ என்னை நோக்கி ஓரடி முன்னேறு. நான் உன்னை நோக்கி மூன்று அடிகள் எடுத்து வைப்பேன்.


THE SEAL OF
TANTEX
QUALITY
டான்டெக்ஸ்®
ஒவ்வொரு வகையிலும் சிறந்தவை
தரத்தில், துணி வகையில்,
தயாரிப்பில், உருக்குலையாத
நீடித்த உழைப்பில், எல்லா
விதத்திலும் சிறந்தவை.
சிக்கனமானதும் கூட.
IS : 4964
ஒட்டி உறவாட
டான்டெக்ஸ்
டான்டெக்ஸ் ரகங்கள்
ப்ரீ:ப்ஸ் • வெஸ்ட்ஸ்
• காஷ்வெல்ஸ்
ஸ்போர்ட்ஸ் பனியன்கள்
சிறுவர்களுக்கான ரகங்கள்
டான்டெக்ஸ்
ttk தயாரிப்பு
டி.டி. கிருஷ்ணமாச்சாரி & கோ
சென்னை-600 086.
Imageads M-TTK-1361 Tam



லெஃப்டினன்ட் கர்னல் முராரி - இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பணியாற்றி உலகமெல்லாம் சுற்றி வந்தவர். தெய்வம், வழிபாடு, பக்தி ஆகியவற்றில் துளியும் நம்பிக்கை இல்லாதவர். இன்று தனியாக வசித்து வருகிறார். குடும்பத்தினர் எல்லாரும் அயல் நாட்டில் இருக்கிறார்கள்.

தனியாக என்ன செய்கிறார்?

பாபாவுக்கு ஓர் ஆலயம் தானே உருவாக்கி, தம் செலவிலேயே நிர்வகித்து வருகிறார். கீழ்ப்பாக்கத்தின் அமைதியான லாண்டன் சாலைக்கு மேலும் அமைதி சேர்க்கிறது இந்த ஆலயம்.

"எந்த தெய்வ நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் இல்லாத என்னை பாபா தேர்ந்தெடுத்தது ஆச்சரியம்தான். ஒரு நாள் அதிகாலை என் கையை யாரோ பிராண்டுவது மாதிரி இருக்கவும் திடுக்கிட்டு விழித்தேன். எதிரே பாபா நின்று கொண்டிருக்கிறார் கனிவும் புன்னகையுடன். அந்தப் புன்னகை என் மன அழுக்குகளை அகற்றி விட்டது. ஒரு தெளிவை, தூய்மையை ஏற்படுத்தியது. அதன் பின்னர் நான் முற்றிலும் மாறிப் போனேன். அந்த மாற்றத்தின் விளைவு தான் இந்த ஆலயமும் வழிபாடும்" என்று சொல்கிறவர் கண்களில் அலாதி ஒளி தெரிகிறது.

"பாபாவின் படத்திலிருந்து அதிர்வு அலைகள் வெளிவருகின்றன" என்று கூறியவர் பையிலிருந்து ஒரு ருத்ராட்சத்தை எடுக்கிறார். அதில் ஒரு கயிற்றில் ஸ்படிகம் தொங்குகிறது. அதைப் பிடித்துக் கொண்டு பாபாவின் படத்தின் முன்னால் நிறுத்துகிறார். அந்த ஸ்படிகம் சுழல் ராட்டினம் போலச் சுழல்கிறது. பின்னர் இதே ஸ்படிகத்தைச் சாதாரணமாக இருக்கும் நம் முன்னால் பிடிக்கிறார். அந்தச் சுழற்சி உடனே நின்றுவிடுகிறது. அவரவர் ஆத்ம சக்தியைப் பொறுத்து அது வேகமாகச் சுழல்கிறது.

"இதெல்லாம் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? அதிர்வலைகள் (Vibrations) என்பதையெல்லாம் புரிந்து கொள்கிற பக்குவம் வந்தால் சரியாகிவிடும்" என்கிறார்.

எண்பத்தொரு வயதான இந்த முராரிக்கு ஓர் ஆசை. "வேலையிலிருந்து ஓய்வு பெற்று, பக்தி உணர்வும் நேர்மையும் கொண்ட யாராவது இந்த ஆலயத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும். தேடிக் கொண்டிருக்கிறேன். பாபாதான் அனுப்பி வைக்க வேண்டும்" என்கிறார்.

அந்த ஆலயத்தில் யோகா வகுப்புகள் நடக்கின்றன. கராத்தே, ஜூடோ பயிற்சிகள் நடக்கின்றன. சனிக்கிழமை தோறும் பஜனை நடக்கிறது. நடுநாயகமாகப் பெரிய பாபாவின் படம் புன்னகைக்கிறது.

அந்த ஆலயத்தை விட்டு வெளி வருகிறபோது மனம் மிதக்கிறது. அமைதி ஆட்கொள்கிறது.

-ஜெயராதன்

"மிஸ்டர் ரகுபதி, நீங்க வீணு மழையில அலைஞ்சு சங்கடப்பட வேண்டாம். இந்தக் காரிலேயே போய் வீட்டில இறங்கிக்கிறதானு இறங்கிக்குங்க" என்று ஏதோ பெரிய சலுகை அளிப்பது போல் கூறினான் வேதகிரி.

அந்தக் காருக்குக்கூட உள்ளுணர்வு இருந்ததோ என்னவோ! தாமோதரத்தை வீட்டுக்குக் கொண்டு போய் விடும்வரை ஒழுங்காக ஓடியது. அங்கிருந்து புறப்பட்டுக் கொஞ்ச தூரம் போவதற்குள் தொடுத்துப் போய் ஒரு குலுக்கலுடன் நின்றுவிட்டது.

"என்ஜினுக்குள்ளாற தண்ணி ஏறிடுச்சு சார். காரைக் கிளப்பறதே கஷ்டம்தான்!" என்று கூறி டிரைவர் முணு முணுத்துக் கொண்டே இறங்கி முன் பக்கமாகச் சென்று பானட்டைத் திறந்து ஏதேதோ சிகிச்சை செய்தான். பின்பு தனது சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு அதை ஸ்டார்ட்செய்ய முயன்றான். எதற்காவது அது அசைந்து கொடுத்தால்தானே!

"சார், நீங்க கொஞ்சம் இறங்கி இதைத் தள்ளுவதைத் தவிர வேறு வழியில்லே!" என்று டிரைவர் கூறியபோது ரகுபதிக்கு அழுகையே வந்து விடும்போல் இருந்தது. நல்லவேளையாக அப்போது தொழிலாளிகள் போல் தோன்றிய இரண்டு மூன்று பேர் நடைபாதையில் சென்று கொண்டிருந்தனர். ரகுபதி அவர்களைக் கையைத் தட்டிக் கூப்பிட்டுக் காரைத் தள்ளும்படி கேட்டுக் கொண்டார். காரைத் தள்ளிய ஆட்கள் ரகுபதியருகே வந்து நின்றார்கள். பர்ஸில் இருந்த ஒரே பத்து ரூபாய் நோட்டைப் பெருமூச்சுடன் அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினார் ரகுபதி.

ஒரு வழியாக வீட்டுக்கு வந்து சேர்ந்த அவரது கோலத்தைக் கண்டதுமே ஜானகி புரிந்து கொண்டாள். ஏதாவது கேட்டால் அந்த எரிமலை வெடித்து விடும் என்ற அச்சத்துடன் மௌனமாகத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

சொட்டச் சொட்ட ஈரமாயிருந்த உடைகளைக் களைந்து மாற்று உடை அணிந்து கொண்டிருந்தபோது ரகுபதிக்குச் சட்டென்று நினைவு வந்தது.

"ஜானகி! நான் ஒரு முட்டாள்!" என்று கத்தினார்.


"என்னங்க திடீர்னு?"

"கையோடே குடை எடுத்துக்கிட்டுப் போயிருந்தேனில்லே? அதை ஆபீஸிலேயே விட்டு விட்டு வந்திட்டேன்!"

"அடாடா! அதுக்காக மறுபடியும் ஆபீசுக்கு அலைஞ்சாகணுமா?" என்றாள் ஜானகி.

சற்று நேரம் பல்லைக் கடித்துக்கொண்டிருந்த ரகுபதி சட்டென்று கூறினார்— "நான் அலையப் போறதில்லே. என்னை ஒரு ஆளா மதிக்கிறவங்க யாராவது அங்கே இருந்தாங்கன்னு என்னோட குடையைக் கொண்டு வந்து கொடுக்கட்டும். அப்படி இல்லேன்னு நான் நட்டு வச்ச வேப்பங் கன்னுக்குத் துணையா அந்தக் குடையைப் பிரிச்சு நட்டு வைக்கட்டும்!"

நான் தெய்வம். நீயும் தெய்வம்தான். ஆனால் என் தெய்வீகம் எனக்குத் தெரியும். உனக்கு இன்னும் தெரியவில்லை.



இப்போது! சின்னஞ்சிறு ஐஸி-க்கள் காரணமாக அபாரமான செவியின்பம்!

புதிய பிலிப்ஸ் ஹை-ஃபை இன்டர்நேஷனல் ஸ்டீரியோ ஸிஸ்டம் ஏ.ஃப் 592

மைக்ரோ எலெக்ட்ரானிக்ஸின் அற்புதமான அம்சங்கள்: இரண்டு சின்னஞ் சிறு ஐஸி-க்கள் (இன்டெக்ரேட்டெட் சர்க்கியூட்டுகள்) சர்க்கியூட்ரி முழுவதையும் சமாளிக்கின்றன—தெள்ளத் தெளிவான ஒலியைக் கேட்க உபரியான சாதனங்கள் அடங்கியுள்ளன.

இது மட்டுமா? முழுமையாக முன்கூட்டிய யூனிட்டுகள் 40 வாட் முழுமையான உச்ச மியூசிக் பவர் • இணையற்ற ஃப்ரீக்வன்ஸி ரெஸ்பான்ஸ் • மிகவும் குறைந்த அளவில், வேண்டாத ஒலி • அதிநவீன ஆர்ம், மேலும் கீழும்/பக்கவாட்டிலும் முழுமையாக நகர்த்த.



உங்கள் பிலிப்ஸ் டீலரிடம் இலவச செயல் விளக்கம்

பிலிப்ஸ்

பைகோ லெக்ட்ரானிக்ஸ் அண்ட் எலெக்ட்ரிகல்ஸ் லி.

* எக்சைஸ் தீர்வை உள்பட அதிகபட்ச சில்லறை விலை, மாநில விற்பனை வரி மற்றும் இதர உள்ளூர் வரிகள் தனி.

● டியர் மாயா,

உன் விருப்பப்படி, உன் ஆஃபீஸ் விலாசத்துக்கே இக்கடிதம் எழுதுகிறேன்.

உன்னைப் பெண் பார்க்க வந்த இருவர் உன்னைப் புறக்கணித்ததாக அறியும்போது, எனக்கு வியப்பாகவும், வெறுப்பாகவும்தான் தோன்றியது. போகட்டும், அதிர்ஷ்டம் இல்லாத பயல்கள் என எண்ணிக் கொண்டேன்.

விரைவில் சென்னை வருகிறேன். அப்போது உன்னைச் சந்திக்கிறேன். இலக்கியங்களை உன்னுடன் விவாதிப்பது, இசையை உன்னுடன் அனுபவிப்பது — எல்லாவற்றுக்கும் மேலாக உன் அறிவுக் கூர்மையை ரசிப்பதே ஓர் இனிய அனுபவம். —குமார்

● ''என்ன எழுதியிருக்காங்க?'' — அம்மாவின் குரலில் ஆர்வமும், படபடப்பும் இருந்தன. அப்பா கடிதத்தை மூடினார்.

''இப்ப மூணாவது சாக்கு... நம்ப பொண் கொஞ்சம் கலர் குறைச்சலாம்....''

மாயா சட்டென்று குறுகிப் போனாள். 'கடவுளே, எனக்கு விமோசனமே கிடையாதோ!'

● டியர் குமார்,

இக்கடிதம் எழுதி உன்னைச் சங்கடப்படுத்த எனக்கு விருப்பம் இல்லைதான். ஆனாலும் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை. அதுதான் நட்பின் விசேஷம். இல்லையா?

உனக்கு அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம். (ராகவனுக்கும் கூட!) அப்பாவே என்னைப் புரிந்துகொள்ள மறுக்கத் தொடங்கிவிட்டார்.

குமார், ஞாபகம் இருக்கிறதா? அப்பாதான் நம்மை அறிமுகப்படுத்தி வைத்தார். முதல் நாள் நாம் சாதாரணமாகத்தான் பேசினோம். அதன் பிறகு, அப்பா உங்களையும் ராகவனையும் அடிக்கடி வீட்டுக்கு வரச் சொன்னார். நீங்கள் வந்தபோதெல்லாம் என்னவோமோ அலசினோம்.

நான் அழுதேன் குமார்! படுக்கையில், சினிமாக் கொட்டகையில், ஆஃபீஸ் டாய்லட்டில் — தனிமை என்னைப் பயமுறுத்திக் கைகொட்டிச் சிரிக்க — நான் அழுதேன்!

எல்லாவற்றுக்கும் காரணம் என்ன தெரியுமா?

நேற்றும் நான் பெண் பார்க்கப்பட்டேன். (நாலாவதோ, ஐந்தாவதோ!) அவன் என்னைப் புறக்கணிக்க ஒரு புதுக் காரணம் சொன்னான்:

''உங்க பொண்ணை ரெண்டு இளைஞர்களோட ஏதோ ஆர்ட் மியூசியத்துல பாத்த ஞாபகம்....''


அம்மாவுக்குச் சட்டென்று கலக்கம் பரவ, அப்பா ஒரு விநாடி திகைக்க—

''ஓ... அவங்க எங்களுக்குத் தெரிஞ்சவங்க. என் பொண்ணுக்குக் கலை, இலக்கியத்தில ஆர்வம் ஜாஸ்தி....''

''ஓஹோ, ரெண்டு பையன்களோட சுத்தற அளவுக்கு மாடர்னு?''

இது என்ன மடத்தனமான, அசிங்கமான, வக்ரமான கேள்வி? அஃப்கோர்ஸ், எனக்குக் கல்யாணமாக வில்லையே என்ற ஏக்கம் கிடையாதுதான். ஆனால், என் பெற்றோர்கள் படும் பாடு...

ஓ... என் அழுகைக் கதையைக் கூறி, உன்னைப் போரடித்து விட்டேனா? ம்...உனக்குக் கல்யாணம் பண்ண ஏற்பாடுகள் நடப்ப



வாழ்க்கை - ஆசை - மனிதன். வாழ்க்கை - ஆசையின்மை - இறைவன்.

தாக ராகவன் எழுந்தான். பெண் பார்த்தாயா? எப்படி இருக்கிறாள்? மாயா.

''ஹலோ....''

அப்பா திரும்பினார்.

''ஓ....குமார்! மாயா, யார் வந்திருக்கா பாரு!''

மாயா உள்ளே இருந்து வந்தாள். முகத்தில் சட்டென்று மலர்ச்சி வந்து அமர்ந்தது.

''ஓ....கல்யாணப் பத்திரிகையா? கங்க்ராட்ஸ்....''

அம்மா எட்டிப் பார்த்தாள்.

''மாலதி, நம்ப குமாருக்குக் கல்யாணம்.''

குமார் ஆவலுடன் தலையை நிமிர்த்தினான். அம்மாவின் முகத்தில் ஒரு அலட்சியமும், கடுமையும் பரவின.

''ஆம்பிளைகளுக்கு என்ன? படறது பொம்மனாட்டிகள்தானே?''

மாயாவின் முகம் அடிபட்டுப் போயிற்று.

''அம்மா, சும்மா இரேன் ப்ளீஸ்.''

''முடியாது....'' — மாலதியின் கண்களில் கண்ணீர் ஓடிட்டது. ''பெத்த வயிறு எரியறதை எப்படிக் குளிர வைக்கிறதுன்னே எனக்குத் தெரியலையே... இவங்க கிட்டயே நியாயம் கேட்கப் போறேன்!''

''நீங்க எதுக்காக என் பொண்ணு வாழ்வைச் சூறையாடறீங்க?'' அம்மாவின் கேவல் திடீரென்று வெளிப்பட்டது.

''சூறையாடறதா?''

''ஆமாம்! வேலியில் புடவை பட்டதோ, புடவையில் வேலி பட்டதோ கிழியறது புடவை... ஏதோ இலக்கியம் அப்படி இப்படின்னு பேசி, என் பொண்ணோட பழக நீங்களே! என்ன ஆச்சு... இதோ என் பொண்ணு வாழாவெட்டியா நிக்கறா? உங்க ரெண்டு பேருக்கும் என்ன? ஆம்பிளை! கேள்வி கேட்க ஆள் கிடையாது!''

''சார்... மன்னிக்கணும்....'' — ராகவன் தயக்கத்துடன் பேசினான்: ''உங்க மனைவி பேசறது....''

ராஜகோபாலன் முகத்தைத் திருப்பிக் கொண்டு பேசினார்.



''சாரி, மிஸ்டர் ராகவன்! அவளோட வார்த்தையை என்னால ஒத்துக்க முடியலேன்னாலும், அதில உள்ள வாதிக் எனக்குப் புரியாம இல்லே. நான் உங்க நட்பைச் சந்தேகப் படாட்டாலும், என் பெண்ணோட எதிர் காலம் கேள்விக் குறியா வரும்போது, என்னைத் தூண்டில் போடும்போது....''

''சாரி சார்... எங்க நட்பை இதோட வேண்ணு முடிச்சுக்கறோம்...''

மாலதி ஆவேசத்துடன் கூக்குரல் இட்டாள்:

''சத்தியமாச் சொல்றேன்! பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது! உங்களுக்கு யாருக்காவது என் பொண்ணு மேலே உண்மையான அக்கறை இருந்தா, நீங்களே என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்.''

''அம்மா!'' – மாயா வீறிட்டாள்.

''வாட்?'' – ராகவன் அதிர்ந்தான்.

● டியர் மாயா....

....

நான்கூடச் சிலசமயம் யோசித்துப் பார்த்திருக்கிறேன். நட்பின் துணைக்காக எங்கும் நீ, ஆண்களுடன் – அதாவது என்னுடனும், குமாருடனும் பழகுவது உன் அம்மாவின் பழமைக்குப் புரிபடாத ஒன்று என்பதை உணர்ந்துதான் இருக்கிறேன். உண்மையில் 'நம் நட்பைத் துண்டித்துக்கொள்' என அட்வைஸ் தரலாம் என்றுகூட எண்ணினேன். ஆனால் வாழ்வில் ஆறுதல் தேடி அலையும் உன்னை அச்செயல் அடியோடு சாய்த்துவிடும் என்று உணர்ந்துதான், என்னையும் மீறிக் கடிதம் எழுதுகிறேன்...

மாயா, உனக்கு எங்கள் நட்புத்தான், களைத்துப்போகும் உன் வாழ்க்கைப் பாலைவனத்தில் சோலையாக உள்ளது என எழுதுகிறாய். சோலையைச் சிதைக்க நான் விரும்பவில்லை.

–ராகவன்

● தோள்களைப் பற்றி, மாயாவைத் தூக்கினான் ராகவன்.

''உட்கார் மாயா!''

மாயா கட்டிலில் அமர்ந்தாள்.

''எனக்கே கஷ்டமாகத்தான் இருக்கு. கடைசியில் உலகத்தோட குற்றச்சாட்டு பொய், பொய்னு சொன்ன நாமே, அதை உண்மைங்கிற மாதிரிக் கல்யாணம் பண்ணிண்டது....''

மாயாவை மெல்ல நிமிர்த்தினான் ராகவன்.

''நெவர் மைண்ட் மாயா! இன்னும் உலகம் வளரவில்லே. உன் அம்மாவின் மனசை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. தவிர, நம் திருமணம் அப்படிப் பாவமான செயலோ, நடக்கக்கூடாததுன்னோ இல்லையே!''

''ஆமா, எனக்கு ஒரு சந்தோஷம்! யாரோ ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிண்டு, என் மனசை அவன் புரிஞ்சுக்க முடியாமல், என்னாலேயும் மாற முடியாம, ஆயுசு முழுவதும் அவஸ்தைப்படறதை விட, என்னைப் புரிஞ்சுண்ட ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு நான் கொடுத்து வச்சு இருக்கணும் இல்லையா?''

ராகவன் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டுச் சொன்னான்: ''மாயா, ஒரு விஷயம் சொல்ல விரும்பறேன்.''

''என்னவாம்?'' – அவள் உரிமையுடன் அவன் தோள் மேல் சாய்ந்து கொண்டாள்.

''இனிமே குமாரோட நட்பை நீ நிறுத்திடணும். என் மனைவி இன்னொரு ஆணோட நட்பு வச்சுக்கறதை என்னால் பொறுத்துக்க முடியாது. ஓகே?''

மாயா சட்டென்று அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவளுக்கு இப்போது உலகம் புரிந்துபோயிற்று.

பையனாக பாபா வந்தார்!

என் பெரிய மகனுக்கு இரண்டரை வயது. பொட்டல் காட்டில் எங்கள் வீடு. எதிரே பெரிய கட்டிடம் கட்டிக் கொண்டிருந்தார்கள். மூன்று மாடிக் கட்டிடம். தவறுதலாகப் பெரிய ஏணியை வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான் பாபு. நான் உள்ளே கைக் குழந்தை விஜயாவுக்குப் பால் புகட்டிக் கொண்டிருந்தேன். என்ன சத்தமே இல்லையே என்று பார்த்தால் பாதி ஏணிக்கு மேல் ஏறிவிட்டிருக்கிறான் பயல்! நான் என்ன செய்வேன்? அந்தி மயங்கும் நேரம். நான் ஏறிச் சென்று குழந்தையைப் பிடிக்க முடியுமா? பிறகு எப்படி இறங்குவது? இருவருமே அவ்வளவு உயரத்தில் உருட்டிவிடுத்து விழுந்தால்?

சில விநாடிகள்தான். உச்சாணிக்குப் போய்விட்டான் குழந்தை. என் அடிவயிற்றிலிருந்து ஒரு பீறல். ''பாபா! சத்ய பாபா! என் குழந்தையைக் காப்பாற்று!'' என்று கத்தினதாகத்தான் நினைத்தேன். ஆனால் வாய் குழறிக் குளறி, பாபு... பா.....பு..... என்றுதான் கூறியிருக்கிறேன் போல் இருக்கிறது. அடுத்த நிமிஷம்..... என்ன சொல்வேன்! ஒரு பன்னிரண்டு வயதும் பையன் அங்கே வந்தான். ''என் பெயர் பாபுதான். என்னையா கூப்பிட்டீர்கள்?'' என்றபடி நின்றான்.

வாய் பேச முடியாமல் நான் ஜாடை காண்பித்தேன். ஒரே தாவல். ஏணியில் விறுவிறுவென்று ஏறினான். அடுத்த இந்தாவது நிமிடம் என் கையில் குழந்தை. அவனைக் கட்டித் தழுவித் திரும்பிப்பார்க்கிறேன். அந்தப் பையனைக் காணோம்.


கே. வனஜா



பூமி நனைந்திருப்பதே மழை பெய்ததன் அடையாளம். சலனமற்ற அமைதியான மனநிலையை அடைதலே பக்தி இருப்பதன் அடையாளம்.

சுத்தமோங்கும் ஆரோக்கிய சுகத்திற்கு...

லைப்பாய் பர்ஸனல்



புதிய லைப்பாய் பர்ஸனல்—அழுக்கிலுள்ள
கிருமிகளைக் கழுவிக் களையும்
ஈடிணையற்ற லைப்பாய்
திறமைக்கு...மேலும் சிறப்பு:
சுத்தமயமான ஆரோக்கிய
சுகமளிக்கும் நுரை வளப்பம்,
சுறுசுறுப்புத் தரும் சுகந்தம்.
பொலிவு மிகுந்த மேலுறைப்
பேக்கிங்கிலே புதுமையழகு
வடிவ சோப். குளித்திடுவீர்...
குளித்திடப் புதுமை லைப்பாய்
பர்ஸனல்...நவீன
மனிதருக்கான நவீன சோப்.




லைப்பாய் பர்ஸனல்

சுறுசுறுப்பூட்டும் இதன் சுகமே அலாதி!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு. லின்டாஸ்-LP. 10-1810 TM

பிரிட்டானியா
பால் பிஸ்கட்



வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை



சத்துமிகுந்த,
சுவையான
பிரிட்டானியா
மில்க் பிக்கிஸ்

லின்டாஸ் BBC.MB-3-172-TM

□ தஞ்சாவூர்க் கதம்பம் போன்று சென்ற இதழ் அட்டைப் படம், கோயில், வீணை, விஞ்ஞானம் மூன்றுடன் தெய்வீக மணம் வீசியது.

மதுரை-16 மல்லிகா.

□ தஞ்சைச் சிறப்பிதழில் திருப்பத்தூர் இடைத்தேர்தலில் தமிழக இ.காங்கிரஸ் நிலைமையைத் தஞ்சாவூர் ''தலையாட்டிப் பொம்மையாக''ச் சித்திரிக்கும் கார்ட்டூன் ஏ-ஒன். ஓவியர் உமாபதிக்குப் பாராட்டுக்கள்!

தஞ்சாவூர் ஏ. ஜி. அசோக்ராஜா

□ சிறப்பிதழ்என்றபெயரில் தஞ்சை மாவட்டக் கதைகளைப் போடாமல், இன்று இங்குள்ள நடைமுறைப் பிரச்னைகளை அலசிய விதம் பாராட்டத் தக்கது.

உடுமலைப்பேட்டை ஏ. சாகுல் ஹமீது

□ புதுமை செய்வதாய் எண்ணிச் சிறப்பிதழில் பக்கத்துக்குப் பக்கம் எங்கள் தஞ்சைக்கே சிறப்புத் தரும் பெருவுடையார் கோயிலின் கோபுரப் புகைப் படத்தை பாதி வெட்டிய நிலையில் பிரசுரித்திருக்கிறீர்கள். அதற்குப் பரிகாரமாகத்தான் 48ம் பக்கத்தில் கலைப் புதையல் செய்தியில் முழு அளவிலான உருவத்தையும் அதையும் ஒருவர் கல்கியில் பூதக் கண்ணாடி கொண்டு தேடுவது போலவும் பிரசுரித்திருக்கிறீரோ?

சென்னை-14 ஐயாறு எஸ். வாசுதேவன்

□ வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த 'சரஸ்வதி மகாலை'ப் பற்றி ஒரு குறிப்புமா கிடைக்கவில்லை?எவ்வளவோமுன்னேறியுள்ளதே அது! ஜோக்ஸ் பகுதியில்தானா போடணும்!

மதுரை-16 ஆர். வி. பிரசாத்

□ தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்த பிறகு சுந்தரத் தமிழில் தஞ்சைச் சிறப்பிதழை முதலில் வெளியிட்டது கல்கியாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். பாராட்டுக்கள்.


நயினரகரம் முத்து

□ தீபாவளி ரிலீஸ் படங்களான ராஜாங்கம், கீழ்வானம் சிவக்கும், அந்த 7 நாட்கள் ராணுவ வீரன் இந்த நான்கு படங்களையும் நளினி சாஸ்திரி ஒசியில் பார்த்துவிட்டு வந்து விட்டாரோ? ரூபாய் பைசாவால் லாப நஷ்டக் கணக்குப் போடவில்லையே?

கும்பகோணம்-1 டி.எஸ். சீதாராமன்

□ பஸ்ஸில் நெருப்பைப் பார்த்ததும் ஏற்பட்ட பதற்றத்திலும், வெளியே குதிக்கிற பரபரப்பிலும், பாவம் வசந்துக்கு ஒன்றும் புரியவில்லை போலிருக்கிறது. உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர் கையில் வைத்திருப்பது ஓலைச்சுவடி. அரிச்சுவடி அல்ல.

சென்னை-84 எஸ். நடராஜன்



□ வஸந்த் எழுதிய 'இரவு ஒரு மணி—மீனம் பாக்கம்' சிறுகதை சிந்திக்க வைத்தது. பயணிகளின் நிலையைச் சிந்திக்காமல் நிர்த்தாட்சண்யமாய் நடந்து கொள்ளும் மோட்டார் நிர்வாகத்தினர் இக்கதையைப் படித்திட வேண்டுகிறேன்.

அரகண்டநல்லூர் கே. பிரதாப்சிங்

□ தலையங்கம் ஒவ்வொரு வார்த்தையும் அட்சர லட்சம் பெறும். ஆட்சியாளர் மனத்திலே பதியும்படி ஆணித்தரமாய் எழுதப்பட்டிருக்கிறது. வாழ்வு வறுமையாலும் மனசில் எழுத்துக்களில் வளமிக்கவர் பாரதியார். அவர் பெயரைச் சொல்லி ஆடம்பரச் செலவுகள் செய்வது அரசுக்கு இழுக்கைத்தான் தேடித் தரும் என்று சொல்லிய உங்களுக்குப் பாரதி அன்பர்களின் மனமார்ந்த பாராட்டுக்கள்.


ஸ்ரீரங்கம் ஆர். ஸ்ரீனிவாசன்

□ ''தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்ற பாரதி தன் ஒருவனுக்காகச் செலவிடப்படும் பண விரயத்தை நிச்சயம் ஒப்புக்கொள்ள மாட்டான் என்ற கருத்தில் நல்லதொரு தலையங்கம் தீட்டியிருக்கிறீர்கள். எந்தஒருசெயலிலும் ஆதாயத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு நியாயமான சங்கொலியாக இது ஒலிக்குமானால் தங்களுக்கு மட்டுமல்ல, பாரதியாருக்கும் தமிழகத்துக்கும் பெருமை!

பெங்களூர்-5 அ. குமார்

□ திருவையாறு தியாகராஜர் சமாதியைச் சுற்றி மதில் சுவர் எழுப்பும் செய்தியைப் பொருத்தமான படத்துடன் வெளியிட்ட ஆசிரியர் அவர்களுக்கும், இப்புனிதமான பணியைப் பொறுப்பேற்று நடத்த சிரத்தை கொண்ட தஞ்சை கலெக்டர் அவர்களுக்கும், வித்வான்கள், ரசிகர்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாகப்பட்டினம் சங்கீதம் வி. அனந்தராமன்



MCA-PDP-63-Tam

ரா.கி.யின் வரவேற்புரை

மீ.ப.சோமு

1948ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் தேதி சென்னையிலே கம்பர் மாநாடு தொடங்கி நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரை இலக்கியச் சிறப்பும், வழக்கமான நகைச்சுவை உல்லாசங்களும் நிரம்பியதாய் மாநாட்டிலே கூடியிருந்த ஆயிரக் கணக்கான தமிழர்களையும் களிப்பிலே ஆழ்த்தியது.

கம்பரைப் பற்றிய ரா. கி. அவர்களின் மதிப்பீடும், அந்த மதிப்பீட்டை யொட்டி ரசிகமணியைப் பற்றிய மதிப்புரையும் எப்போதும் படித்து அனுபவிக்கக் கூடிய விதத்தில் அமைந்திருக்கின்றன.

ரா. கி. அவர்களின் அந்த அழகான சொற்பொழிவிலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரா.கி., அவர்கள் நிகழ்த்திய உரை தமிழ் நெஞ்சுக்கு இன்றைக்கும் எத்தனை உவப்புத் தருவதாயுள்ளது. பாருங்கள்—

''தமிழர்கள் அனைவரும் சாதி வேற்றுமை, மத வேற்றுமை, கட்சி வேற்றுமை, கொள்கை வேற்றுமை இன்றி, சொல்லப் போனால் இலக்கணத்தில் வரும் எட்டு வேற்றுமையும் இன்றி, ஒன்று சேர்ந்து கொண்டாடக் கூடிய விழா ஒன்று உண்டென்றால் அது கம்பர் விழாவேயாகும். கம்ப ராமாயணத்தை வைத்துக் கொண்டு சரித்திர ஆராய்ச்சியோ சமய ஆராய்ச்சியோ செய்வது முறையல்ல. கம்ப ராமாயணம் ஒரு சிறந்த இலக்கியம், மகா காவியம். ஷேக்ஸ்பியர் நாடகங்களை நாம் படிக்கும்போது அவருடைய மதக் கொள்கைகளையோ சமுதாயக் கொள்கைகளையோ ஒப்புக்கொண்டா படிக்கிறோம்? ரோமியோ ஜூலியட் நாடகத்தில் ரோமியோவும் ஜூலியட்டும் தற்கொலை செய்து கொண்டு சாவதை நாம் ஆதரிக்கிறோம் என்று அர்த்தமா?

அதுபோலவே கம்பர் கவிதைகளைத் தமிழர்கள் அனைவரும் கவிதை என்ற முறையில் படித்து அனுபவிக்கலாம்; ஆனந்தப்படலாம். அப்படி அனுபவியாதவர்கள் இந்த உலகத்தில் நாம் அடையக் கூடிய ஒரு மகத்தான இன்பத்தை வேண்டுமென்றே இழந்துவிடுகிறார்கள். அவர்களிடம் அநுதாபப்படத்தான் வேண்டும்.

இன்று இந்த மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசைந்திருக்கும் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் சென்ற நாற்பது ஆண்டு காலமாகக் கம்பரைப் படித்துக் கம்பரையே நினைத்து, கம்பரைப் பற்றியே பேசி, கம்பரைப் பற்றியே எழுதிக் கம்பருக்காகவே உயிர் வாழ்ந்து வருகிற பெரியார்.

புதுடில்லியில் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாக இன்று வீற்றிருக்கும் ராஜாஜி எத்தகைய அறிவாற்றல் உடையவர் என்பது உலகப் பிரசித்தம். ராஜாஜி யாரைப் பற்றியும் அதிகமாகப் புகழ்ந்து பேசி விட மாட்டார்; நிச்சயமாக மிகைப் படுத்திப் புகழ்ந்துவிட மாட்டார். அப்படிப்பட்டவர் நம் ரசிகமணியைப் பற்றி என்ன எழுதினார் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

''உண்மையான கவியின் தன்மை இன்னதென்பதை ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரிடம்தான் நான் அறிந்தேன். உண்மையான கவிதையை எப்படி அனுபவிக்கிறது என்பதையும் டி.கே.சியிடம்தான் நான் கற்றேன்'' — இவ்விதம் ராஜாஜி அவர்கள் எழுதினார்கள். ராஜாஜிக்குக் கவியின் தன்மையை உணர்த்திய ரசிக சிகாமணி — தமிழுக்காகவும், தமிழ்க் கவிக்காகவும் கம்பருக்காகவுமே உயிர் வாழ்ந்து வரும் பெரியார் இந்த நாலாவது கம்பர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க இசைந்தது நம்முடைய பாக்கியம்!''

இது கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வரவேற்புரை. இந்த வரவேற்புரையிலே ரா. கி., ரசிகமணியை எப்படி மதிக்கிறார் என்பதும் நன்கு தெரிகிறது அல்லவா!

மதிப்பீடு என்றதும் இங்கே ஒரு ரசமான கணக்கு நினைவு வருகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு ரசிகமணி கீழ்க்கண்டபடி எழுதினார்.

உலகத்தில் நம்மைப் பிறர் மதிப்பது என்பது ஒன்று. நம்மை நாமே மதிப்பீடு செய்துகொள்வது என்பது ஒன்று. இந்த இரண்டு மதிப்பீடுகளுக்கும் கணக்குப் போடுகிறார் ரசிகமணி. சின்ன கணிதத்துக்குள் ஒரு பின்ன கணிதத்தைக் காட்டி மிகப் பெரிய உலக உண்மைக்கு ஒரு மிகச் சிறிய வாய்பாடு தருகிறார் ரசிகமணி:

பிரேமை என்பது சாப்பாட்டில் துளித் துளி சேர்த்துக்கொள்ளும் மிளகுப் பொடியோ உப்புப் பொடியோ அல்ல. அதுதான் முக்கிய அன்னமே. அது இன்பம் துன்பம் எதிலும் மாறாத நிரந்தர மனநிலை.

நம்மை அதிகமாக மதித்து விட்டால் நமக்குக் கிடைத்தது குறைந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ நம் மதிப்பை, அவ்வளவுக்கவ்வளவு நம்முடைய பாக்கியம் அதிகரித்து விடுகிறது.

நமக்குக் கிடைத்தது ஒன்று என்று இருந்தால் குற்றம் இல்லை. நம்முடைய மதிப்பு கால்தான் என்று கணக்கிட்டுக் கொண்டால் நம்முடைய செல்வம்

$$\frac{1}{\frac{1}{4}} = 4$$

நாலாய்விடுகிறது. மதிப்பு ஒன்றும் இல்லை என்று ஏற்பட்டுவிட்டால் நம்முடைய செல்வம் அளவற்றதாய்ப் போய்விடுகிறது.

$$\frac{1}{0} = \text{Infinity}$$

தம்மின் மெலியாரை
நோக்கி தமதுடைமை

அம்மா! பெரி(து) என்(று)
அகமகிழ்க — தம்மினும்


கற்றாரை நோக்கிக்
கருத்தழிக, கற்ற எல்லாம்

எற்றே இவர்க்கு நாம்
என்று! —குமரகுருபரர்


ஒரு பிடி அவல்

● தன்னை நாடி வருபவர்களை அமைச்சர் குழந்தைவேலு தனித் தனியாக அழைக்க மாட்டார். காண வந்திருப்பவர் அனைவரையும் மொத்தமாகத் தம் அறைக்கு அழைத்து அவர்கள் வந்த காரணத்தைக் கேட்கும் வழக்கத்தைப் பின்பற்றி வருகிறார் அமைச்சர். இவ்வழக்கத்தால், அமைச்சரைக் காண வருபவர்கள் காக்க வேண்டிய அவசியமில்லை என்பது மட்டுமின்றி, தனிப்பட்ட சிபாரிசுகளுக்கும் இடமில்லாமல் போகிறதாம்.

● தலைமைச் செயலாளர் திரு. திரவியம் யார் தன்னைக் காண வந்தாலும் உட்காரச் சொல்வார். மரியாதை என்று கருதி வந்தவர் நின்றுகொண்டிருந்தால் அவர் உட்காரும் வரை திரவியம் மேற்கொண்டு எதுவும் பேச மாட்டார்: திரவியம் ஜெயகாந்தன் நாவல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.



● நடிகை சுமித்ரா தன் திருமணத்திற்குத் தனக்கு அறிமுகமான பத்திரிகையாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் எழுத்தாளர்கள், மற்றும் நிருபர்கள் அனைவருக்கும் தன் திருமண அழைப்பிதழை அனுப்பியிருந்தார். விளைவு... மணமக்களைச் சுற்றி எப்போதும் புகைப்படக் கலைஞர்களும் பத்திரிகையாளர்களும் சூழ்ந்து கொண்டிருந்தனர். தங்கள் திருமணத்தை வெகு ரகசியமாகக் காப்பாற்ற விரும்பும் நடிகையர் நடுவே சுமித்ரா ஒரு exception.''



● தூங்கும் குழந்தைகளைத் தோளில் போட்டுக்கொண்டு பஸ் மற்றும் மின் வண்டியில் பயணம் செய்யும் தாய்மார்களுக்கு ஓர் எச்சரிக்கை. தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையைத் தோளில் சாய்த்து, பஸ்ஸில் நின்றவாறு பயணம் செய்து கொண்டிருந்தாராம் ஒரு பெண்மணி. குழந்தையின் கைகள் தாயின் முதுகுப் பக்கமாகத் தொங்கிக் கொண்டிருந்ததால், யாரோ ஓசைப்படாமல் குழந்தையின் கைகளிலிருந்த தங்க வளையல்களைக் கழற்றிச் சென்று விட்டனராம்.

—பெம்ஜி

புகைப்படம்: ஹரி



The fragrance of choice coconuts in every drop.
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணெ



காதலுக்குக் களவு, திருட்டுக்கும் களவா?

கடுகு பதில்கள்

⌘ ஆர். பார்த்தசாரதி, பெரம்பூர்.

கே: பல்லவனுக்கும் பாண்டியனுக்கும் என்ன வித்தியாசம்?

ப: பாண்டியன் இதுவரை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போனதில்லை என்று நினைக்கிறேன்.

⌘ மதுகண்ணன், காட்பாடி

கே.: அமரர் கண்ணதாசனின் சிறப்பு இயல்பு என்ன?

ப: கவியரசு பற்றி நிறையப் பேர் எழுதியிருக்கிறார்கள். எழுதுவார்கள். புதிதாக நான் என்ன சொல்வது? ஓர் அனுபவத்தை மட்டும் சொல்கிறேன். ஒரு பாடலுக்கு விளக்கம் கேட்டு அவருக்குக் கடிதம் எழுதினேன். மூன்றாவது நாள் அவர் கைப்பட எழுதிய நீண்ட பதில் கிடைத்தது. கவரில் விலாசமும் அவரே எழுதியிருந்தார். உண்மையிலேயே ரொம்பப் பிஸியாக இருக்கும் அவர் உடனுக்குடன் பதில் எழுதியது அவரது மனப்பண்பைக் காட்டியது.

⌘ பி. ஜே. ரத்தன், தஞ்சை

கேள்வி: ஜனனம் என்பது 10 மாதம் என்று குறித்து வைத்த இறைவன், மரணத்தை ஏன் அவ்வாறு குறிக்காமல் வைத்தான்?

ப: குறித்துத்தான் வைத்திருக்கிறான். ஆனால் நமக்குத் தெரிவிப்பதில்லை.

⌘ ஏ. கே. சங்கர் சென்னை-44.

கே: போரடிக்கிறது. ஏதாவது ஜோக் சொல்லுங்கள்.

ப: இங்கிலாந்தில் ஒரு மகாநாடு நடந்தது. நகைச் சுவையைப் பற்றி சுமார் 100 பிரமுகர்கள் கட்டுரை படித்தார்கள். அவை ஒரு புத்தகமாக வெளிவந்திருக்கிறது. ரொம்ப சீரியஸ் புத்தகம். அதில் வந்த ஒரு ஜோக். பால்காரரைப் பார்த்து ஒருவர் கேட்டார்: ''இந்தப் பசு எவ்வளவு பால் கறக்கும்?'' ''ஆறு லிட்டர் கறக்கும்'' என்று பால்காரர் சொல்ல, ''இதில் எவ்வளவு வியாபாரம் செய்கிறீர்கள்?'' என்று அவர் கேட்டார். பால்காரர் சொன்ன பதில்: ''எட்டு லிட்டர்!''

⌘ கு. கணேசன், சென்னை-15.

கே: பிரபலஸ்தர்களின் கதைகளை மட்டுமே பிரசுரிப்பது 'பத்திரிகா தர்மம்' என்று வைத்துக் கொண்டுள்ளதைப் போல் பிரபலங்களின் துணுக்குகளை, கேள்விகளை, ஜோக்குகளைப் பிரசுரிப்பதும் பத்திரிகா தர்மம் என்று ஆகிவிட்டதா?

ப: இந்த இதழைப் புரட்டிப் பாருங்கள். இதில் எத்தனை பிரபலங்கள் துணுக்கு எழுதியிருக்கிறார்கள்? உங்கள் எழுத்து பிரசுரிக்கப்படவில்லை என்றால் அது சிறப்பாக அமையவில்லை என்று எண்ணுங்கள். 'தங்களுக்கு வேண்டியவர்களைத்தான் போடுவார்கள்' என்ற குற்றச் சாட்டைக் கூறி, உங்களை நீங்கள் ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். அது வளர்ச்சிக்கு வழி வகுக்காது.

⌘ ப. மூர்த்தி, பெங்களூர்-21.

கே: மாட்சிமை பொருந்திய கடுகு அவர்களே, 'தலைக் கனம்' பற்றிய கருத்தரங்கிற்குத் தலைமை தாங்க வருகிறீர்களா?

ப: எளிமையின் சின்னம், அடக்கத்தின் உருவு, ஜம்பத்தின் எதிரி, சுயப் பிரதாபத்தின் விரோதி — இப்படிப்பட்ட நானா 'தலைக் கனம்' கருத்தரங்குக்கு வருவது? தோனு, மூர்த்தி ஸாரு, வேறு ஆளைப் பாருங்க.

⌘ நாகுவேலன், மதுரை-16.

கே: காதலுக்கும் களவு, திருட்டுக்கும் களவு - ஏன்?

ப: கொள்ளை போவதால் (உள்ளம், பொருள்), இருட்டை நாடுவதால், ஆசையின் (பெண், பொன்) அடிப்படையில் அமைந்திருப்பதால்— இரண்டுக்கும் ஒரே சொல்லை வைத்து விட்டார்கள்.

⌘ வசுமதி, ஆரணி

கே: நம்பியவர்களைத் துரோகம் செய்பவர்கள் என்ன ஆவார்கள்?

ப: துரோகம் செய்கிறவர்களை நம்பி அவஸ்தைப்படுவார்கள்!

⌘ சுமதி பரகாலன், ஸ்ரீரங்கம்

கே: பொன்னியின் செல்வனையோ, தில்லானா மோகனாம்பாளையோ திருப்பித் திருப்பிப் படிக்கிறபோது வருகிற ஆனந்தம், தற்போது வரும் கதைகளில் ஏற்படுவதில்லையே?

ப: அவை அஸ்திவாரத்துடன் எழுப்பப்பட்ட கட்டடங்கள். இவைகள் வாராவாரம் என்ற வேகத்தில் உருவான மெஷின் தயாரிப்புக்கள். அவை பொரிவிளங்காய் உருண்டை; இவை மசால்வடை.

பரிசு பெறுபவர் :

நாகுவேலன்
19-பி, பூமாரியம்மன் கோவில் தெரு
மதுரை - 625016



ஐந்து நிமிடக் கோபம் ஐந்து தலைமுறைகளாக வளர்த்த உறவை அழித்து விடுகிறது.

''யார் தப்பித்துப் போவதால் அரசருக்கும், ராஜாங்கத்திற்கும் தீங்கு வருமோ, அவரை உடனே கொன்று விடவேண்டும்.'' -கிருஷ்ணதேவராயர்

34

திம்மராஜா கீழே விழுந்தபிறகு சீக்கிரம் கண்ணை மூடினார்.

அவரது படைகள் நாலா திசையிலும் சிதறின.

அவைகளை அர்ச்சுனனும், ராஜரும்விரட்டிச் சென்றார்கள்.

கோட்டைக்கு வெளியே தெற்குப் பாரிசத்தில் இருந்த திம்மராஜாவின் பகுதிப் படைகள் நடந்த விஷயத்தை அறிந்து கொண்டு அர்ச்சுனனிடம் சரணடைந்தன.

அவைகளின் தளபதிகளைப் பாதுகாப்பில் வைத்த அர்ச்சுனன் அரைக் கணம் கூட வீணாக்காமல் கோட்டைக்குள் புகுந்தான்.

ஏற்கனவே கோட்டைக்குள் புகுந்திருந்த திம்மராஜாவின் படைகளுக்குவெளியேநடந்த விஷயங்கள் தெரியாது.

ஆகவே, அறியாமையில் ஆனந்தமாய் ஊரைச் சூறையாடிக் கொண்டிருந்தன.

இரு தளவாய்கள் வேலூர் அரண்மனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் நாலாபக்கமும் அல்லாடி, குழப்பத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

ஏற்கனவே சில வீடுகள் தீப்பற்றி எரிய ஆரம்பித்திருந்தன.

உள்ளே நுழைந்த அர்ச்சுனன் சூறையாடும் படைகளைத் தாக்க ஆரம்பித்தான்.

எதிர்பாராமல் வந்த அந்தத்தாக்கு அந்தப் படைகளை நிலைகுலையச் செய்தது.

ராஜர் படையின் துப்பாக்கிகள் படீர்படீர் என்று காற்றை உடைக்க,,

எதிரிப் படையினர் அல்லோலமாயினர்.

வெடிப் புகை கந்தக நெடியுடன் எங்கும் பரவிச் சென்றது.

அந்த நெடியைக் கூட கொடிய விஷம் என்று எல்லோரும் கருதியதால் மூக்கைப் பிடித்துக்கொண்டு பேயோட்டம் ஓடினார்கள்.

உள்ளே புகுந்த அரை முகூர்த்தத்தில், எதிரிப் படைகளைக் கதிகலங்க அடித்து விட்டார்கள்.

ஆனால் ஏற்கனவே அவர்கள் விளைவித்த நாசம் மிதமிஞ்சி விட்டது.

அர்ச்சுனனின் படைத் தளபதிகள் சீக்கிரமே அங்கங்கே எதிர்த் தளபதிகளைச்

சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்



சிறைப்படுத்திச் சங்கிலிகளில் பிணைத்துவிட்டார்கள்.

சூறையாட முயல்பவர்களை ராஜரின் படையினர் விரட்டிச் சென்றனர்.

ராஜர் தனது மேற்கத்திய பழக்கத்தில் எல்லா நடவடிக்கைகளையும் திட்டத்தோடு செய்தான்.

ஆச்சரியமான முறையில் சீக்கிரம் எதிரிகள் அடங்கி விட்டார்கள்.

உள்ளே எழுந்த குழப்பங்கள் மட்டும் அங்கங்கே சிதறி விரைவாகத் தன் கடைசி மூச்சுக்களை விட்டுக் கொண்டிருந்தது.

அர்ச்சனன் களைப்போடு நின்றான். ராஜர் வந்ததும், "ராஜர் சற்றுப் பொறு!" என்று சொல்லிக் குதிரை ஏறிக் கிழக்கு நோக்கிப் பறந்தான்.

கவர்ணமுகி இருந்த மாளிகை அவனுக்குத் தெரியும். அதன் முன்னால் இறங்கி அவசரமாக அவளைத் தேடினான்.

மாளிகைக்குள் ஈ காக்கை இல்லை.

ஏமாற்றத்தோடு அர்ச்சனன் திரும்பினான்.

ஸ்ரீரங்கன் எங்கே? கவர்ணமுகி எங்கே?

அடுத்த பாய்ச்சல் அரண்மனையை நோக்கிப் பாய்ந்தான்.

போகிற வழியில் ராஜரை அழைத்துக் கொண்டு, மெய்க் காவலையும் கூட்டிக்-கொண்டு அரண்மனைக்கு விரைந்தான்.

வாசலில் எதிரியின் இரண்டு தளபதிகள் ஏற்கனவே சிறைப்படுத்தப்பட்டு விலங்கோடு நின்று கொண்டிருந்தார்கள்.

அர்ச்சனன் பளீரென்று இறங்கினான்.

"உள்ளே போனீர்களா? என்ன பார்த்தீர்கள்? என்ன செய்தீர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டான்.

தளபதிகள் தொய்ந்து தலை தொங்கி நின்றார்கள். "உள்ளே யாரையும் பார்க்கவில்லை!" என்றார்கள்.

"சூறையாடினீர்களே! பொருள்கள் எங்கே?" என்று சீறினான் அர்ச்சனன்.

"உள்ளே எதுவும் இல்லை!"

"நிஜமாகவா?" என்றான் அர்ச்சனன் பல்லைக் கடித்துக் கொண்டு.



மங்கையர் மலர்

நங்கையர் விரும்பும் நன்மலர்

''ஆமாம்.''

அர்ச்சுனனும் ராஜரும் பொறுமையாகத் தேடினார்கள். வியர்வையும், அலுப்பும் பொங்க, முற்றத்து நிழல் மேடை ஒன்றில் அமர்ந்தார்கள்.

''நிர்மூலமாக்கியிருக்கிறார்களே!'' என்றான் ராஜர்.

''முக்காலேயும் லிங்கப்ப நாயக்கர் அப்புறப்படுத்தியிருப்பார்'' என்றான் அர்ச்சுனன்.

''யம காதகர்!''

''ஆமாம். எல்லாம் ஆலோசனையோடு செய்வார். அவருக்கு மட்டும் பாதிப்பு வந்துவிடக் கூடாது. அது இல்லாதவரை யாருக்கும் என்ன உதவியும் பண்ணுவார்.''

''இப்போது எங்கே போயிருப்பார்?''

''அதுதான் தெரியவில்லை.''

''வேங்கட ராஜா எங்கே?''

''அவரையும் காணவில்லை. அதுதான் கவலை. தப்பித்திருப்பார்கள்.''

''துர்ப்பாக்கியம்! அவர்கள் கட்சிதான் வெற்றி பெற்றிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாது. ஆண்கள்தான் மறைந்தார்கள். பெண்கள்?'' என்று திரும்பினான் ராஜர்.

''அதுதான் என் முக்கிய கவலை'' என்றான் அர்ச்சுனன். ''முக்கியமாக கவர்ணை மூலி யார் கையிலாவது சிக்கிவிடக் கூடாது! சிக்கினால் ஆபத்து!''

''கோட்டைக்குள்தான் இருந்தாளா?''

''ஆமாம், ராஜர்! இந்த அரண்மனையில் எங்கேயாவது சுரங்கம் இருக்க வேண்டும். லிங்கமர் நிச்சயம் இந்த ஏற்பாடு செய்திருப்பார். இல்லாவிட்டால் அரண்மனைப் பெண்கள் அத்தனை பேரும் எளிதில் வெளியேறி இருக்க முடியாது.''

''எனக்கும் அதுதான் யோசனை. தேடலாமா?''

''தேடலாம். அதற்குள் வேலை நிறைய இருக்கிறதே! நம் படைகளைச் சீரமைக்க வேண்டுமே! வெளியில் குழப்பமான அமைதி தானே நிலவுகிறது?''

''ஆமாம்! அது முக்கியம். முதலில் அதைச் செய்வோம். கோட்டையை மூடுவோம். வேங்கடராஜா ஜெயித்தார் என்று முரசு அடிப்போம். சூறையாடப்பட்ட பொருள்கள் எல்லாம் அரண்மனை வாசலுக்கு வரவேண்டும். இல்லாவிட்டால் தண்டனை என்று அறிவிப்போம். வீடுகளில் சென்று சோதனை செய்வோம்.''

இருவரும் புறப்பட்டார்கள்.

இரவில் அந்தக் கோங்கு மரக் காட்டில் சிறிதாக நெருப்பு மூட்டி, அதில் நான்கு பேர் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.

''அப்பா அப்பா! என்னால் முடியலையே!'' என்று முண்டாசு மனிதர் புலம்பிக் கொண்டிருந்தார்.

அவர் உடம்பைப் பற்றி அணைத்து இரு நலைப்பாகைக்காரர்கள் உட்கார்ந்திருந்தனர்.

தாமர்ல வேங்கடப்பன் ஒருவர்.

வேங்கடராஜாவின் வலது கை போன்று விளங்குபவர். பூவிருந்தவல்லிச் சீமைக்கு அதிகாரி.

பக்கத்தில் இருந்தவர் வேங்கடப்பரின் சகோதரரான தாமர்ல அய்யப்பன்.

இருவரும் ஆசுவாச வார்த்தைகள் கூறிக் கொண்டிருக்க, ஓலை முண்டாசுத் தலையுடன் புலம்பிக் கொண்டிருந்தவர் வேங்கடராஜா.

''வேங்கடப்பா! நான் இன்னும் ஏன் உயிர் வாழ வேண்டும்? ராஜ்யம் இப்படிச் சீரழிந்து போயிற்றே! இந்த ஸ்ரீரங்கன் இப்படி மாறுவானு பார்த்தியா?'' என்றார் அவர்.

''எனக்கே ஆச்சரியம்!'' என்றார் தாமர்ல அய்யப்பன்.

''அவனைப் பாதுகாப்பில் வைத்தது தவறு. அவன் ஓர் உணர்ச்சிக்காரன்'' என்றார் தாமர்ல வேங்கடப்பர்.

''ஏன் என்ன தவறு? வெளியில் விட்டு வைத்திருந்தால் அவன் என்ன செய்திருப்பான் தெரியுமா? மகாராஜாவையே கொன்றிருப்பான். அவனுக்குச் சிங்காதனத்தின் மீது ஆசை! உங்களுக்குத் தெரியாது'' என்றார் வேலூர் லிங்கம நாயகர்.

தாமர்ல வேங்கடப்ப நாயகர் உடனே திரும்பினார்.

''அவன் சின்னவன். ராஜ்ய விசுவாசம் நிறைய இருந்தது. நீங்கள் அவனைச் சந்தேகித்தது தவறு'' என்றார்.

''நீங்கள் சும்மா இருங்கள். ஆபத்துக் காலங்களில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்று சீறினார் லிங்கமர்.

''உண்மைதான்! ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இவன் ஒரு சின்னஞ் சிறுவன். இவனால் நமக்கு எதுவும் நேர்ந்திருக்காது. இப்போது பாருங்கள்! அவன் நமக்கு விரோதியாகப் போய்விட்டான்.''

''வேங்கடப்பர் என்மீது அனாவசியமாகப் பழி சுமத்த வேண்டாம். நான் செய்ததெல்லாம் மகாராஜாவின் நன்மைக்காகச் செய்தது. அதை நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள். சின்னவன் என்று வேங்கடப்பர் சொல்லுகிறாரே! சின்னவனாகவா அவன் நடந்து கொண்டான்? பாதுகாப்பிலிருந்து மீறி வந்து, மகாராஜாவின் முன் அந்த இரவில் உருவிய வாளுடன் நின்று மிரட்டினானே, அது ஒரு சின்னவன் செய்கையா?''

தாமர்ல வேங்கடப்பர் மௌனம் சாதித்தார். ஒரு சந்தர்ப்பத்தை மோசமாக்க அவர் விரும்பவில்லை.

முக்கியமானது எனது பிரேமைதான். நான் ஆகாயத்தைப் பூமியாக மாற்றலாம். பூமியை ஆகாயமாக மாற்றலாம். அது தெய்வீக சக்தியின் குறியீடாகாது. பிரேமைதான் குறியீடாகும்.

லிங்கமர் அடங்குவதாக இல்லை.

''மகாராஜா முன்னால் அந்த ராத்திரியில் என்ன கத்துக் கத்தினன்? 'பெரியப்பா நீருமா இந்த லிங்கமருக்கு உடந்தை? என்னையா இப்படிப் பாதுகாப்பில் வைப்பது? உம்மை விசுவாசத்தோடு நினைத்ததற்கு இதுதான் கைம்மாறு? பெரியப்பா! இதோ சபதம்! இனி நான் தங்களுக்கு விரோதி. லிங்கமருக்கு விரோதி! இந்த ராஜ்யத்தை நானே அபகரித்துக் கொள்கிறேன் பாருங்கள் என்று சீறிச் சீறிவிழுந்தானே அவனு சிறுவன்? வேங்கடப்பர் தீர யோசித்துச் சொல்லட்டுமே!'' என்றார் அவர்.

வேங்கட ராஜா சற்று இருமினார்.

''இப்போது எங்கள் நகரம் எதிரி வசம் போயிருக்கும். என் மக்கள் என்னைத் திட்டுவார்கள்.'' என்றார் லிங்கமர் மீண்டும் ஆத்திரமுடன்.

''ஏன்? எங்கள் கதி மட்டும் என்ன வாழ்கிறதாம்? மகாராஜா இருந்தால்தான் எங்கள் சீமை எங்களுக்குச் சொந்தம். இல்லாவிட்டால் நாங்களும் நாடோடிகள்தான்!'' என்றார் தாமர்ல வேங்கடப்பன்.

வேங்கடராஜா மெள்ள எழுந்தார்.

''என்னால் உங்கள் அனைவருக்கும் துன்பம் ஏற்பட்டு விட்டது. என் ஆபத்துக் காலத்தில் நீங்கள் என்னோடு ஒட்டி விருந்து உதவியதை நான் மறக்க மாட்டேன்! இப்போது என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனை செய்யுங்கள்! எதிரிகள் நம்மைத் தேடி வருவார்களா?''

''வரலாம். நாம்வந்த சுரங்கப்பாதைவேறு யாருக்காவது தெரியுமா?'' என்றார் தாமர்ல.

''யாருக்கும் தெரியாது. தவிர, நான் வரும்போது சூக்குமத்தை இழுத்து மூடி விட்டேன். யாரும் திறக்க முடியாது'' என்றார் லிங்கமர்.

''நானே எப்படியும் இந்த இடம் தேடி எதிரிகள் வருவார்கள்'' என்றார் தாமர்ல.

''அதற்குள் எங்கேயாவது போக வேண்டும்!'' என்றார் லிங்கமர்.

''செஞ்சிக்குப் போகலாம்'' என்றார் தாமர்ல.

''அங்கேயும் நிம்ம ராஜா வந்தால்...''

''அவ்வளவு தூரம் வர மாட்டார்.''

''என்ன அநியாயம்?'' என்றார் வேங்கட ராஜா! ''விஜயநகரத்தைவிட்டு, ஆனைகொந்தி அங்கிருந்து சந்திரகிரி, அங்கிருந்து வேலூர். இப்போது செஞ்சியா? இப்படியே போனால் தெற்கே கடலில் போய் விழ வேண்டியது தான்.'' என்று வேதனைப்பட்டார். ''விஜய நகர ராஜ்யத்தின் கதி இப்படி ஆகிவிட்டதே!''

எல்லோரும் தீவிரமாக யோசித்தார்கள்.

தெற்கே செஞ்சிக்கு அவசரமாகப் புறப்படுவது என்று தீர்மானித்தார்கள்.

சற்று எட்டத்தில் அரச குடும்பங்களின் பெண்டிர் கூட்டம் ஒதுங்கி இருந்தது.

அவர்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு, எல்லோரும் ஒரு நாழிகைக்குப் பிறகு புறப்பட்டார்கள்.

அவசரமாக வாடகைக்கு அமர்த்தப்பட்ட பல்லக்குகளில் ராஜ பெண்டிர் பயணம் செய்தனர்.

அதில் மூன்றாவது பல்லக்கில் உட்கார்ந்திருந்த கவர்ணமுகி சுரம் நிறைந்த கண்களோடு வெளி உலகைப் பார்த்தாள்.

நேற்று இரவு வேலூர்க் கோட்டையில் நடந்ததெல்லாம் பயங்கரமானவை.

இரவுக்கிரவே கடைசி ஜாமத்தில் புறப்பட்டு, சுரங்கத்தின் புழுக்கமும், நெரிசலும் நிரம்பிய பாதையில் அடி அடியாக நகர்ந்து, வெளியே வனாந்தரம் ஒன்றில் கடைசியாக வெளிவந்தபோது ஏதோ நரகம் வழியே புகுந்து வந்தது போல் இருந்தது.

இப்போது இந்தப் பல்லக்கில் ஆடி ஆடிப் போகும்போது தனது வருங்காலத்தைப்பற்றி பயமும், திகிலும், பரிதவிப்பும் இருக்கிறதே, அது அந்தச் சுரங்கத்தில் வளர்ந்தபோது ஏற்பட்ட உணர்வுகளைவிட மிகவும் கொடியதாக இருந்தது.

பகல் முழுதும் வனாந்தரத்தில் தங்கிவிட்டு இரவின் நடு சாமத்தில் புறப்பட்டிருந்தார்கள்.

தீவர்த்தியின் நடுங்கும் வெளிச்சத்தில் பல்லக்குகள் விசித்திரப் பிராணிகள் போல் நடையிட்டுச் சென்றன.

வெளியே இருட்டு பிரளய காலக் கறுமையில் இருந்தது.

மேலே நட்சத்திரங்கள் தெரியவில்லை.

மனத்திலும் இருள் ஊழி சொரூபமாகத் தெரிய,

வாய் திறந்து புலம்பியவாறு ''வீரரே!'' என்று அழைத்தாள். கண்ணீராக உகுத்தாள்.

(தொடரும்)

''திருப்பதிக்குப் போ!''

எனது பெரிய பையன் டி. எஸ். ராமசாமி அப்போது சேலத்தில் இந்தியன் பாங்கில் வேலையாக இருந்தான். திருப்பதி போகவேணும் என்று சொல்லி லீவு வாங்கிக் கொண்டு என்னுடன் புட்டப்பர்த்திக்கு வந்தான். ஆபீஸில் அனைவரும் திருப்பதி பிரசாதம் வாங்கி வரும்படியும் காணிக்கையும் கொடுத்தனர்.

அன்றுமாலையே புட்டப்பர்த்தி சென்று விட்ட நாங்கள் பாபாவைத்தரிசிக்க நின்று கொண்டிருந்தோம். பாபா அருகில் வந்ததும் அவர் ராமசாமியிடம் ''ஆபீஸில்திருப்பதிக்குப்போகிறேன் என்று பொய் சொல்லி விட்டு வந்து விட்டாயா? என்னைப் பார்த்தாகி விட்டதல்லவா! காலையில் திருப்பதி போய் ஆபீஸில் கொடுத்த காணிக்கையைப் போட்டுவிட்டு, பிரசாதம் வாங்கிப் போ!'' என்று சொல்லியவாறே சிரித்தார்.

-டி. எஸ். ராஜம்



[illegible] என்னை வானளாவப் புகழ்ந்து துதி பாடிக் கொண்டிருக்க வேண்டாம். உங்கள் கருணை உள்ளத்தை என்னிடம் கொண்டு வந்து என்னுடையதை அதில் பெற்றுக் கொள்ளுங்கள்.



அறிமுக எழுத்தாளர்

திருமுருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி என் சொந்த ஊர். தந்தை திரு கே. ராம லிங்க முதலியார் அண்மையில் காலமாகிவிட்டார். தாயார் பெயர் மருதாம்பாள். எனக்கு வயது 31. திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. மனைவி பெயர் கலைமணி. உள்ளூர்க் கல்லூரியிலே பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்துத் தேர்ந்த பின் சென்னை சட்டக் கல்லூரியில் பி.எல். பட்டம் பெற்றேன். கடந்த நான்கு ஆண்டுகளாகப் பழனியில் வழக்குரைஞராகப் பணியாற்றி வருகிறேன்.

சிறு வயதிலிருந்தே கதை, கட்டுரைகளைப் படிப்பதிலும் எழுதுவதிலும் எனக்கு ஆர்வம் மிகுதியாக உண்டு. சிபாரிசுகளுக்கு இடமின்றித் தர நிர்ணயத்தையே அளவு கோலாகக் கொண்டு கதை, கட்டுரைகளைப் பிரசுரிக்கும் தங்கள் பத்திரிகையில் என் முதல் சிறு கதை பிரசுரமாவது ஒரு நல்ல ஆரம்பம் என்று மகிழ்கிறேன்.

என்னை ஒரு எழுத்தாளராக அறிமுகம் செய்கிற தங்கள் பத்திரிகைக்கு என் சார்பிலும், என் குடும்பத்தார் சார்பிலும் மனமுவந்த நன்றி.

இரா. காளிதாஸன் (கலைமணி)

போட்டிக் கதை

பிழைக்கத் தெரியாதவன்

"கலைமணி"



"கிணிங்... கிணிங்..." என்று சைக்கிள் மணியை ஒலித்துக் கொண்டு வேத நாயகர் தெருவில் திரும்பினான் கிருஷ்ணமணி. சைக்கிளின் முன்புறம் இரண்டு பக்கமும் இரண்டு பைகள் நிறைமாதக் கர்ப்பிணிகள் போல் வயிறு தள்ளி யிருந்தன. தினசரி செய்தித் தாள்களும், வார, மாதப் பத்திரிகைகளும் அந்த நீண்ட பைகளில் குறுகிய பயணம் செய்வது வழக்கம். கிருஷ்ணமணியின் மனத்தைப் புரிந்து கொண்டதே போல் சந்து, பொந்துகளிலெல்லாம் அநாயாசமாகப் புகுந்து, நெளிந்து, வளைந்து வருகிற வாகனம் அவன் சைக்கிளுக்கே உரிய ஒன்று.

அன்றைக்கும் வழக்கமான வேகத்தில் அவன் விரைந்தாலும் மனச் சுமையின் அழுத்தம் கண்களின் அடியில் கருவட்டமிட்டிருந்தது. ஆயிற்று; இனி மணி ஏழரை ஆவதற்குள் அந்தப் பகுதியில் செய்தித் தாள் விநியோகத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடி.. பழைய சாதத்தை அள்ளிக் கொட்டிக் கொண்டு, பிறகு பள்ளிக்கு ஓடி, பள்ளி விட்டதும், மாலையில் அவன் பகுதி நேர வேலை பார்க்கிற அவனுடைய உறவினரின் மளிகைக் கடைக்கு ஓட வேண்டும். இப்படியாகத் தன் வாழ்க்கை 'ஓடிக்கொண்டிருப்பதை' எண்ணி நொந்தான் கிருஷ்ணமணி. தந்தை இறந்ததன் பின் தன் வயது வந்த தங்கையையும், தாயையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சிறு வயதிலேயே ஏற்பட்டு விட்டதால் இப்படிக் கஷ்டப்பட்டான் என்றாலும் படிப்பை விட்டுவிடவில்லை. தையல் மூலம் சிறிது வருமானம் பெற்ற அவன் தாயும் அவனுமாகக் குடும்பத்தை நடத்திச் சென்றனர்.

இப்போது அந்த நீண்ட பைகள் காலியாகிவிட்டிருந்தன. வீடு திரும்பிக் கொண்டிருந்தான் கிருஷ்ணமணி. மனச் சுமை குறையவில்லை. தங்கைக்குத் தன் வருமானத்தில் மிச்சம் பிடித்து ஒரு 'ஜாக்கெட்' துணி எடுத்துக் கொடுக்க அவனுக்கு நீண்ட நாள் ஆசை. அது இதுவரையில் நிறைவேறவில்லை. அம்மாவுக்குக் காலில் ஆறாத புண்; நல்ல வைத்திய வசதி தேவை.

திடீரென்று ராகவன் ஞாபகம் எழுந்தது! அந்தக் கிழிந்த சட்டையுடன், பரட்டைத் தலையுடன் பேப்பர் போட்டுக் கொண்டிருந்த ராகவன் வறுமைக் கோட்டுக்கு நூறு மைல்கள் அடியிலே வசித்துக் கொண்டிருந்த ராகவன் — அநாவசியமாக இளித்து இளித்துப் பல்லைக் காட்டிப் பேசுகிற ராகவன் — இப்போது ஒரு புத்தகக் கடையின் சொந்தக்

காரன். கிருஷ்ணமணியும், ராகவனும் ஒரு காலத்தில் பள்ளி நண்பர்களாக இருந்த காரணத்தாலும், ராகவனுக்குக் கிருஷ்ணமணியின் வறுமை தெரிந்திருந்த காரணத்தாலும், தன் 'தொழில் ரகசியத்தை'க் கிருஷ்ண மணியிடம் ஏற்கனவே சொல்லியிருந்தான் ராகவன். அத்துடன் தன் வழியைப் பின்பற்றும்படியும் வலியுறுத்தியிருந்தான். அப்போதெல்லாம் மறுத்துவிட்ட கிருஷ்ணமணிக்கு இப்போது ஏனோ ராகவனைப் பார்க்கத் தோன்றியது. அவனைப் பின்பற்றத் தோன்றியது; வறுமையை எப்படியாவது விரட்டத் தோன்றியது.

மளிகைக் கடையிலிருந்து இரவில் வீடு திரும்பு முன்பாக ராகவனை அவனுடைய புத்தகக் கடையில் சந்தித்தான் கிருஷ்ணமணி. ரகசிய அலமாரியிலிருந்து சில புத்தகங்களை எடுத்து மேஜையின்மேல் பரப்பினான் ராகவன். புத்தகங்களின் அட்டைகளில் நிர்வாண அழகிகள் கண்ணடித்தார்கள்.— கட்டிப் பிடித்தார்கள் — முத்தம் கொடுத்தார்கள் — இன்னும் என்னென்னவோ செய்தார்கள். வக்கிரமான காம உணர்வுகளைத் தலைப்பாகக் கொண்ட பல வழு வழு ஆங்கிலப் புத்தகங்கள்; உள்ளே இருந்த புகைப் படங்கள் மனித மனத்தின் அவலட்சணங்களை, அவலட்சணங்களின் எல்லைகளைக் காட்டுவதற்கென்றே படம் பிடிக்கப்பட்டவை போல் இருந்தன.

ராகவனின் குரல் அந்தத் தற்காலிக மௌனத்தைக் கலைத்தது. ''என்னப்பா மலைச்சுப் போயிட்டே? ' இன்னும் எவ்வளவோ அயிட்டமெல்லாம் இருக்கு; இந்தப் புஸ்தகங்களெல்லாம் விலை ஜாஸ்தி; ஒவ்வொரு புஸ்தகத்துக்கும் ஒரு நாள் வாடகை அஞ்சு ரூவா வாங்கிக்க, உனக்கு ஐம்பது பர்சன்ட் கமிஷன் தர்றேன். காலேஜ் பசங்க இருக்கிற ஹாஸ்டல் பக்கம் போனேன்னுக்க நெறைய வாடகைக்குப் போகும்'' என்று பேசிக் கொண்டே நேரமாகிவிட்டதால் விளக்கை நிறுத்திவிட்டுக் கடையைப் பூட்ட ஆரம்பித்தான் ராகவன். திடீரென ஞாபகம் வந்தவனாக, ''போலீஸ் கீலீஸ்னு மாட்டிக்கிட்டா என் பேரு வெளியே வரக் கூடாது. புஸ்தகங்களுக்கு நீதான் முழுப் பொறுப்பு. போ, போயி சுறுசுறுப்பா சம்பாதிக்கிற வழியைப் பாரு'' என்று சொல்லிவிட்டுப் போனான் ராகவன்.



விடிந்ததும் கொல்லேப்புறம் கிணற்றடிக்குப் பல் விளக்கப் போனுன் கிருஷ்ணமணி. அங்கு பாடம் படித்துக்கொண்டிருந்த தங்கை அவனைக் கண்டதும் புத்தகத்தை மறைத்துக்கொண்டு அவசரமாக வீட்டுக்குள் ஓட முயன்ருள். ஒரு கணம் ஒன்றும் புரியாமல் நின்ற கிருஷ்ணமணிக்குத் திடீரென்று எங்கோ பொறி தட்டியது போலிருந்தது. தங்கையின் 'பாடப் புத்தகத்தை'ப் பறித்துப் பிரித்தபோது மற்ருெரு சிறு புத்தகம் அதற்குள்ளிருந்து கீழே விழுந்தது. அதன் அட்டையில்'Free Sex'என்ற எழுத்துக்கள் நட்சத்திரங்களாய் மின்னிக் கிருஷ்ணமணியைக் கேலி செய்து புன்னகைத்தன.

'பளார்' என்று அறைந்த சத்தமும், 'ஐயோ அடிக்காதே அண்ணு' என்ற கூக்குரலும் வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த அம்மாவைக் கொல்லேப்புறத்துக்கு அழைத்தன. சில விநாடிகளில் நிலைமையைப் புரிந்துகொண்ட அம்மா முதலில் கிருஷ்ணமணியை ஓங்கி அறைந்தாள். பிறகு மகளை அறைந்தவள் தன் தலையிலும் போட்டுக்கொண்டாள்.

விசும்பிக்கொண்டே காரணம் சொல்ல முற்பட்டான் கிருஷ்ணமணி. ''அம்மா... நம்ம குடும்ப வறுமையைப் போக்கணும்னு தான்... இம்மாதிரி புத்தகம் வாடகைக்கு விட்டா நல்ல லாபம்...ஆனுல் இவள் படிப்பான்னு நெனைக்கலே...''என்று பாதி, பாதியாகப் பேச முயன்றவன் தாயின் கூரிய பார்வை தாளாமல் நிறுத்திக் கொண்டான். தங்கையின் கரத்தைப் பற்றி அவனிடம் நீட்டியபடி அவன் தாய் சொற்களால் சுட்டாள்: ''நீ என்ன சொன்னே? குடும்ப வறுமை தீரணும்னு இந்தப் புஸ்தகங்களை வாடகைக்கு விடப் போறேன்னு சொன்னில்ல?....இந்தா, இவளை வாடகைக்கு விடு. நாம வறுமை நீங்கிச் சுகமா வாழலாம்.''

ஆத்திரத்தாலும், அழுகையாலும் சிவந்த கண்களால் தாயை முறைத்துப் பார்த்தான் கிருஷ்ணமணி. அவன் தாய் தொடர்ந்தாள்: ''என்னடா முழிக்கிறே?... வாடகைன்னு வர்றபோது எல்லாம் ஒண்ணுதான். இன்னைக்கி இப்படி புஸ்தகத்தை வாடகைக்கு விடுவே; பிறகு இப்படிப் பொண்ணுகளை வாடகைக்கு விடுவே.''

காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான் கிருஷ்ணமணி. சிறிது கோபம் தணிந்தாலும் அம்மாவின் அடுத்த கேள்வி ஆணித்தரமாக இருந்தது. ''ஏன்டா, இந்தக் கீழ்த்தரமான புஸ்தகத்தை உன் தங்கை பார்த்துட்டான்னு மட்டும் உனக்கு இவ்வளவு கோபம் வருகிறதே, ஊர்ல இருக்கிற மத்தவங்களோட தம்பி, தங்கைகள் இப்படிப் புஸ்தகங்களைப் பார்த்துக்கெட்டலைஞ்சா மட்டும் பரவாயில்லையோ?''

சிலையாக நின்றுன் கிருஷ்ணமணி. பதில் பேச முடியவில்லை. ''வறுமையைப் போக்கி மானத்தோட வாழ மற்ற வழிகள் இருக்கு; இப்படி அசிங்கமான குறுக்கு வழிகள் வேண்டாம்ப்பா'' என்றபடி மகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தவள் ''உன்னோட வயசுக்கு உன் உணர்ச்சிகள் வளர வேண்டியது நியாயம்தானம்மா, ஆனு அது வழி தவறக் கூடாது'' என்று உபதேசிப்பது கிருஷ்ணமணியின் காதில் விழுந்தது.

அப்பொழுதே ராகவனிடம் அந்தப் புஸ்தகங்களைச் சேர்ப்பித்துவிட்டு வீடு திரும்பிய கிருஷ்ணமணிக்கு மனத்தில் இப்போது நிம்மதியிருந்தது. 'பிழைக்கத் தெரியாதவன்' என்று திட்டி அனுப்பினுன் ராகவன். ஆனுலும் சில விஷயங்களைப் பொறுத்தவரை பிழைக்கத் தெரியாதவனுகவே இருந்து விடுவதில் ஓர் இன்பம் இருப்பதை உணர்ந்தான் கிருஷ்ணமணி.


கல்கி டிசம்பர் 20 இசை விழா சிறப்பிதழ்

உங்களுக்குக் கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு ஏற்பட்டது எப்படி? திருப்புமுனையாக அமைந்த நிகழ்ச்சி பற்றி....

கர்நாடக சங்கீதத்தில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு ராகம்? ஒரு பாடல்? அதை எந்த வித்வான் பாட அல்லது வாசித்துக் கேட்க விரும்புகிறீர்கள்? ஏன்?

உங்களுடைய மதிப்புக்குரிய ஒரு வித்வானை, கிட்டவே நெருங்க முடியாது என்று நீங்கள் எண்ணியிருந்தபோது எதிர்பாராத விதமாய் நெருங்கி உரையாடச் சந்தர்ப்பம் ஏற்பட்டதா? என்ன பேசினீர்கள்? அப்போது உங்கள் மனநிலை? ரசமான அந்தச் சம்பவம் குறித்து...

இம்மூன்றில் ஏதேனும் ஒரு அம்சத்தை மட்டும் ரத்தினச் சுருக்கமாய் எழுதி அனுப்புங்கள். பிரசுரமானுல் பரிசு உண்டு. முடிவுதேதி: டிசம்பர் 2. கடிதப் போக்குவரத்து, திரும்பி அனுப்புதல் இல்லை. உறையின் மேல் ''இசை விழா சிறப்பிதழ்'' என்று குறிப்பிடவும்.



இழப்பதற்கென்றே வந்த தருமன்



சூதாட்டம் தொடங்குவதைத் தனது எழுச்சி மிக்க நடையிலே புரட்சிக் கவிஞன் கூறுகிறான், கேட்போம்:

''மாயச் சூதினுக்கே — ஐயன்
மனம் இணங்கி விட்டான்;.
தாய முருட்டலானார்; — அங்கே
சகுனி ஆர்ப்பரித்தான்;
நேயமுற்ற விதுரன் — போலே
நெறியுளோர்க ளெல்லாம்
வாயை மூடி விட்டார் — தங்கள்
மதி மயங்கி விட்டார்.''

இந்நிலையிலே, திரும்பவும் சகுனிக்கும் தருமனுக்கும் இடையே ஒரு வாதப் போர் நிகழ்கின்றது. ஆடுபவன் பந்தயம் வைப்பதென்பது தான் அரசர்கள் ஆடும் சூதிலே வழக்கம். ஆடுபவன் ஒருத்தன்; பந்தயம் வைப்பவன் இன்னொருத்தன் என்ற வழக்கம் அன்றுவரை இருந்ததில்லை.

ஆடுகின்ற சகுனிக்காகப் பரிந்து பார்வையாளனான துரியோதனன் பந்தயம் வைக்க முன்வந்தான். இதனை ஆட்சேபித்து,

''ஒருவ னாடப் பணயம் — வேறே
ஒருவன் வைப்ப துண்டோ?
தரும மாகுமோடா — சொல்வாய்,
தம்பி யிந்த வார்த்தை?''

என்று துரியோதனனைக் கேட்கிறான் தருமன். இதற்கு,

''வரும மில்லை ஐயா — இங்கு
மாம னாடப் பணயம்
மருகன் வைக் கொணாதோ? — இதிலே
வந்தகுற்ற மேதோ?
பொழுது போக்குதற்கே — சூதுப்
போர் தொடங்கு கின்றோம்.
அழுத லே னிதற்கே?''

என்று அவையிலிருந்த கர்ணன் கேட்டான்.

இந்த விவாதத்துக்குப் பின்னர் தனது ஆட்சேபணையைத் திரும்பப் பெற்று முதலில் காயை உருட்டச் சகுனியை அனுமதித்து விடுகிறான், தருமன்.

முதலில் தன் உடம்பின் மீதிருந்த அணிகலன்களை யெல்லாம் வைத்து இழக்கிறான், பாண்டவர் தலைவன்.

பின்னர் தன் அரண்மனையில் உள்ள பொருள்களை யெல்லாம் வைத்திழக்கிறான், பாஞ்சாலியின் கணவன்.

திரும்பவும் பாண்டவர்களுக்குரிய நாற்படைகளையும் வைத்திழக்கிறான், இழப்பதற்கென்றே இந்திரப் பிரஸ்தத்திலிருந்து அஸ்தினாபுரத்துக்கு வந்த தரும பிரான்!

இவற்றை யெல்லாம் இழந்த பின் தன் அரண்மனையில் — அரசாங்கத்தில் — பணி புரியும் அடிமைகளைப் பந்தயம் வைத்து ஆடுகிறான். அதிலேயும் இழப்புத்தான்!

சகுனி காயுருட்டும் போதெல்லாம் தருமனின் செல்வங்கள் உருண்டோடி விடுகின்றன.

இனி, பாரதியாரின் கட்டம் வருகிறது! அது, தருமன் நாட்டையே வைத்து இழக்கும் கட்டமாகும். அதனைத் தனது துன்னு நடையிலே உள்ளங் குமுறிப் பாரதியே சொல்கிறார், கேட்போம்:

''மாடிழந்து விட்டான் — தருமன்
மந்தை மந்தை யாக;
ஆடிழந்து விட்டான் — தருமன்
ஆளிழந்து விட்டான்;
பீடிழந்த சகுனி — அங்கு
பின்னுஞ் சொல்லு கின்றான்;
'நாடி ழக்க வில்லை — தருமா!
நாட்டை வைத்தி' டென்றான்!''

தருமன் அதை இழந்தான்; இதை இழந்தான் என்று சொல்லிக் கொண்டே வந்த, சுதந்திரத்தை இழந்த தேசத்தின் கவிஞனான பாரதி, சகுனியும் ஒன்றை இழந்து விட்டான் என்று நமக்குத் தகவல் தருகின்றான். ஆம்; இந்தச் சூதாட்டம் காரணமாகத் தன் பெருமையையே இழந்தவனாகச் சகுனி காட்சியளிக்கிறானும்! இதனை, ''பீடிழந்த சகுனி'' என்ற சொல்லால் கவிஞன் சுட்டிக் காட்டுகிறான்.

''நாடிழக்க வில்லை — தருமா
நாட்டைவைத் திடு''

என்று சகுனி சொல்லி முடித்ததுமே, இதற்கு தருமன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்றல்லவா நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் பாரதியார் தருமன் வாய் திறப்பதற்கு முன் விதுரனைப் பேச வைக்கிறான், — இல்லை, விதுரனை அலற வைக்கிறான்!

ம. பொ. சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431643)
Assistant Editor: P.S. Mani, Layout Artist: Kalpana, Editor: K. Rajendran


கல்கி
22·11·81
ரதி நூற்றாண்டு 11·12·81 முதல் 11·12·82 வரை

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

